Reg.No: QD/76/NEWS/2005

விலை 15/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு

பக்கம் - 24

வார வெளியீடு

நாதம் - 02 | நவம்பர் 11 - 17 / 2005 | வெள்ளி 25

## இனியும் தமிழினத்தை ஏமாற்ற முடியாது!



## நிழல் யுத்தத்தின் ரகசியங்கள் அம்பலம்!

## நம்பிக்கை கொள்ள இயலாத தேர்தல்



## தேர்தல் புறக்கணிப்பு தேவைதானா?

## சிந்தனைக்கு

மாவீரர்கள் மகத்தான இலட்சிய வாதிகள். தாம் தழுவிக் கொண்ட இலட்சியத்தைத் தம் உயிரிலும் மேலாக நேசித்தவர்கள். மக்களின் விடுதலையை தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக் கொண்டவர்கள். அந்த இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்.



தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110, 078-8723447, 078-8722960.
இணையத்தளம் : www.battieezhanatham.com
www.battieelanatham.com
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
editor@battieelanatham.com
11.11.2005

# போர் நிறுத்தம் கவலைக்கிடம்

கவலைக்கிடமாகியிருக்கும் போர் நிறுத்த உடன்படிக்கை ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் முற்று முழுதாக உயிர் துறந்து விடும் அபாய நிலையே தெரிகின்றது. ஏன்எனில் கடந்த மூன்றரை ஆண்டுகளாக உயிர் வாழும் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை சிங்களப் பேரினவாதம் விரும்பவில்லை.

இதை எந்த வழியிலாவது கொலை செய்வதற்கான விச ஊசிகள் ஏற்றப்பட்டன. எனினும் தமிழர் தரப்பின் மிகப் பெறுமதியான பொறுமை இது தப்பிப் பிழைப்பதற்கு வழி கோலியது.

எனினும் பேரினவாதம் எல்லாம் ஒன்று சேர்த்து மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக்கி நிறுத்தியுள்ளன.

அவரது தேர்தல் பிரசாரங்கள் எல்லாம் நான் ஆட்சிக்கு வந்தால் நீ வீழ்ந்து விடுவாய் எனப் போர் நிறுத்த உடன்படிக்கையைப் பார்த்துக் கூறுவது போன்றுள்ளது.

அனுசரணைப் பணியினை வழங்கி வரும் நோர்வே தரப்பினர் பகீரத முயற்சிகளைச் செய்து இந்த உடன்படிக்கையை உயிர் வாழவைக்க வேண்டும் என முயன்ற போதும், அது குணமடைந்து விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இனவாதம் இருக்கும் போதும், அவர்களும் நழுவி விடுவதற்கான சந்தர்ப்பங்களே உண்டு.

ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் போர் நிறுத்தத்தைப் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் எதுவுமில்லை. மகிந்த வென்றால் உடன்படிக்கை வெட்டிக் கொலை செய்யப்பட்டு விரைவாக அடக்கம் செய்து விட்டு அகமகிழ்வார்கள்.

ரணில் வென்றால் மெல்ல, மெல்ல சாகடித்துக் கொலை செய்வார்கள். எனவே இவர்கள் இருவரில் எவர் வந்தாலும் இனி உடன்பாடு உயிர்வாழும் என்பது சாத்தியமற்றது.

பண்டா செல்வா, ஒப்பந்தம் டட்லி செல்வா ஒப்பந்தம் இவை இரண்டும் பேரினவாதக் கொதிப்பின் காரணமாகவே கிழித்தெறியப் பட்டது. அப்போது உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்ட போது பிக்குகள் சத்தியாக்கிரகம் செய்தனர்.

இன்னும் இனவாதத்திலிருந்து பிக்குகள் விடுபடவில்லை. ஐம்பது வருடங்களுக்கு மேலாகச் சித்தாத்தன் பரம்பரைக்கு அரசியல் ஞானம் வெளிப்படவில்லை.

எங்கள் நாடு எனக் கூறுவதற்கும், இனவாதத்தை வெளிப்படுத்துவதற்குமே அவர்கள் துறவிகளாக வேடமணிந்து இருக்கின்றனர்.

சமாதான முயற்சிகள் இதய சுத்தியுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். சிறுபான்மை இனங்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்கின்ற தீர்வினை வழங்குவதற்கு ஒட்டு மொத்தச் சிங்கள சமுகமும் தமது முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

இவற்றை விடுத்துச் சிங்கள வல்லாதிக்கத்திற்குள் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாகத் துன்பப்பட்ட சூழலைத் தொடர்ந்து தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவங்களின் பேச்சுக்களுக்கு ஏமாறும் நிலையில் தமிழினமோ தமிழ்த் தரப்போ இல்லை.

கால அவகாசமாக நவம்பர் 17 மாறியிருக்கின்றது. தேர்தலில் வெற்றி பெறும் சிங்களத் தலைமைத்துவம் தெளிவான கொள்கைகளை முன்னெடுத்து தூர்ந்து போய் கிடக்கும் சமாதான வழியை மீளவும் திறக்க வேண்டும்.


இதற்குத் தடையாக இருக்கும் ஒட்டுப் படையின் ஆயுதக் களைவு உட்பட இயல்பு சூழலைப் பாதிப்புறச் செய்யும் விவகாரங்களுக்குச் சரியான தீர்வு காணப்பட வேண்டும்.

மாறாக "மகிந்த சிந்தனைகள", மக்கள் நிரட்சி நிரல் எனச் சிங்கள மக்களை மகிழ்வுற வைக்கும் தேர்தல் விஞ்ஞாபனங்களைச் செயல்படுத்த முனைந்தால் போர் நிறுத்த உடன்பாடு கவலைக்கிடந்தான். அதன் பின்னர் உயிர் வாழும் என்பதற்கு எந்த உத்தரவுமில்லை. எனவே காத்திருப்போர் 17 வரை.

# தமிழர் பண்பாட்டில் தடம் பதித்த கார்த்திகை

தமிழர் பண்பாட்டிலும், வரலாற்றிலும் முக்கியம் வாய்ந்த ஒரு மாதமாக கார்த்திகை மாதம் விளங்குகின்றது. இக்கார்த்திகை மாதம் தமிழர்களின் வாழ்வில் பல்வேறு சாதனைகளைத் தடம் பதித்துள்ளன. தமிழர்கள் பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்த பண்டிகைகளான கார்த்திகை விளக்கீடு, தீபாவளி, கந்தசஷ்டி, திருவாதிரை போன்றவனவும், தாயகத் தமிழர் வாழ்வுடன் ஒன்றித்த மாவீரர்நாள், தேசியத் தலைவரின் பிறந்ததினம் போன்றனவும் இக்கார்த்திகை மாதத்திலேயே கொண்டாடப்படுகின்றது.

கொடிய அசுரர்கள் அழிந்து ஞானம் பெற்றதும், சிங்கள அரசுக்கு தமிழர்களின் பேராற்றலை எடுத்துக் காட்டி சிங்கள அசுரர்கள் அழிக்கப்பட்டு ஞானம் பெற்றதும் இக்



கார்த்திகை மாதத்திலேதான்.

ஆதலால் தான் இம்மாதம் தமிழர் வரலாற்றில் மகிமை மிக்க மாதமாக விளங்குகின்றது.

தமிழர்களின் பண்டிகைகள் ஒவ்வொன்றும் பல்வேறு தத்துவங்களை விளக்கி நிற்கின்றன. அதர்மம் அழிக்கப்படுவதும், தர்மம் நிலைநாட்டப்படுவதும் எடுத்துக் காட்டப்படுகின்றன. அதர்ம வழியில் வாழ்ந்த மகாபலி, நரகாசூரன், பத்மாசூரன் போன்றோர்கள் அழிக்கப்பட்டு தர்ம வழியில் வாழ்ந்த மக்கள் காப்பாற்றப்படுகின்றனர்.

இதேபோன்று நீதிக்காகப் போராடும் தர்ம யுத்தத்தில் தமிழர்கள் என்றோ ஒருநாள் சுதந்திரம் பெற்று வாழ்வது நியதி.

கார்த்திகை மாதத்தில் தமிழ் மக்கள் மாவீரர் தினத்தைக் கொண்டாடுகின்றனர். இதனால்தான் தமிழர் பண்டிகைகளைவிட மாவீரர் நாள் புனிதமான நாளாக மதிக்கப்படுகின்றது.

ஈழத் தமிழ் இனத்தின் விடிவுக்காக தியாகம் செய்த மாவீரர்களுக்காக சுடர் ஏற்றி மாவீரர்களை நினைவு கூர்ந்து கொண்டாடப் படுகின்றது.



மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி ஆட்சி செய்கின்றன. இவ்வுயர்ந்த தத்துவத்தை விளக்குவதாக இக்கார்த்திகை மாதம் அமைகிறது.

இன்பம் வந்தால் பின்னர் துக்கம் வரும் என்பது தமிழர்களின் ஐதீகம். உலக மக்களால் கொண்டாடப்படும் ஈழத்துத் தன்னிகரில்லாத் தலைவன் அவதரித்த நன்நாள் இக்கார்த்திகை 26 ஆகும். இத்தினத்தை உலக மக்கள் அனைவரும் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

இது ஒரு இன்பமயமான நாள். ஆனால் மறுநாள் கார்த்திகை 27 மண்ணுக்காக தம் உறவுகளை விட்டுச் சென்று உடலைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூர்ந்து துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இது ஒரு தேசிய

**என்.இளங்கோ**

நாள். இங்கு தமிழர் வாழ்வு மனித வாழ்வின் உயரிய தத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

கார்த்திகை மாதத்தில் இயற்கைகளும் ஈழத்தமிழருடன் ஒன்றிணைந்து வாழ்வதைக் காணலாம். இக்கார்த்திகை 27 உலகத் தமிழர் வரலாற்றில் தடம் பதித்த ஒரு நாள். இத்தினத்தில் மாவீரர்கள் நினைவு கூரப்படுகின்றார்கள்.

கார்த்திகை 27 இல் தாயக நேரம் மாலை 6.05ற்கு தியாகச் சுடர் ஏற்றப்படும். இந்நிகழ்வு முதன்மையானது. இதைக் காணாதவர்கள் தமிழர்களாக இருந்துதான் என்ன பயன்? இம் மாலைப் பொழுதில் சுடர் எரியும் போது மாவீரர்களை ஈன்ற தாய்மார் இறந்தகால நினைவுகளை எண்ணி கண்ணீர் வடிப்பார்கள். அப்போது ஐம்பூதங்களான நிலம், நீர், வளி, ஆகாயம், தீ ஆகிய இயற்கைகள் சோகத்தில் வாடுவதைக் காணலாம்.

மழை என்னும் இயற்கைத் தாயவள் ஈகைச் சுடரை அணைக்காது மெல்ல மெல்ல கண்ணீர் வடிப்பாள். காற்றுக்கு அதிபதியான வாயு பகவான் மூச்சு விடாது சோகத்தில் ஸ்தம்பிதம் அடைவான். அக்கினியானவன் வீரத் தாயின் அழுகையைப் பார்த்து வளைந்து நெளிந்து சோகத்தில் ஆழ்வான்.

ஆகாயத் தாயவள் வீரமகனுக்கு ஆறுதல் கூறுவாள். நிலமகள் அங்கும் இங்கும் சென்று துக்கம் விசாரிப்பாள். இக்காட்சியானது மிகவும் அற்புதமானது, தெய்வீகமானது.

மேலும் இத்தினத்தில் அனைவராலும் எதிர்பார்க்கப்படும் தேசியத் தலைவரின் மாவீரர் உரை இடம்பெறும். இதனால் இக்கார்த்திகை மாதம் ஈழத் தமிழர் வாழ்வில் முதன்மையானதாகவும் மகிமையுடையதாகவும் நோக்கப்படுகின்றது.

மேலும் இக்கார்த்திகை மாதம் ஈழத்தமிழ் மக்களுக்கு இன்றியமையாத மாதம். விவசாயத் தொழிலை நம்பி வாழும் எம்மக்கள் கார்த்திகை மாதத்தின் மழையை நம்பி வாழ்கின்றனர்.

எம் நாட்டின் செழிப்பையும் செல்வத்தையும் வாரி வழங்கும் மாதம் கார்த்திகை மாதமாகும் என பெரியோர்கள் குறிப்பிடுவர். எனவே இக்கார்த்திகை மாதம் தமிழர் வரலாற்றிலும் பண்பாட்டிலும் தடம் பதித்துள்ளமையைக் காணலாம்.

# நிழல் யுத்தத்தின் ரகசியங்கள் அம்பலம்

**எஸ்.கே**



சிறிலங்கா படைப்புலனாய்வு பிரிவினர் ஒட்டுப்படைகளை வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் மீது நிழல் யுத்தமொன்றைத் திணித்திருக்கின்றனர்.

இதனால் போர் நிறுத்தம் பலவீனமடைந்துள்ளதுடன் சமாதான முயற்சிகளும் முடக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் ஒட்டுப்படைகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் ஜனாதிபதி தொடக்கம் படைத்தரப்பு வரை தங்களிடம் அவ்வாறு எவ்வித ஒட்டுப்படைகளுமில்லை என உண்மைக்குப் புறம்பான கருத்துக்களையே தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றனர்.

அண்மையில்கூட தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குஸ்னகன் ஒட்டுப்படையின் நடவடிக்கை குறித்து கவலை தெரிவித்திருந்தார்.

தேர்தல் தினத்தன்று இக்குழுவினர் வடக்குக் கிழக்கில் வன்முறைகளில் ஈடுபடலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இது தொடர்பாக அரசோ, அல்லது படைத்தரப்போ குஸ்னகன் கருத்துக்குப் பதிலளிக்கவில்லை. இதேவேளை கடந்த வாரம் படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களை வடக்குக் கிழக்கிலிருந்து அகற்றுமாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளர் ஜோர் ஜெய்சன் பரிந்துரை செய்திருந்தார்.

இக்கூற்றுத் தொடர்பாக படைப் புலனாய்வுத் துறை கண்காணிப்புக் குழுவின் பொறுப்பாளர் ஜோன் ஜெய்சன் மீது கடும் விசனம் தெரிவித்திருந்தது. சிறிலங்கா படைப்புலனாய்வுப் பிரிவினைச் சீர்குலைக்கவே இவ்வாறான திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றம் சாட்டியிருந்தனர். அத்தோடு எவ்வித ஒட்டுப் படைகளுமில்லை என்பதையே மீளவும் கூறியிருந்தார்.

ஆனால் இவை எல்லாவற்றையும் அம்பலமாக்கியுள்ளனர். ஒட்டுப் படையிலிருந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இளைஞர்கள் மூவர் சிறிலங்கா படைப் புலனாய்வுப் பிரிவினர் கருணா குழு என்ற பெயரில் ஆயுதக் குழுவை வைத்து நிழல் யுத்தம் புரிவது தொடர்பான ரகசியத்தை அம்பலமாக்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இளைஞர்களுடனான ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த நவம்பர் 7ம் திகதி கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நடைபெற்றது.

பொலநறுவை மாவட்டம் கறுப்பளையைச் சேர்ந்த கனகசுந்தரம் சுரேஸ் (16), மாங்கேணி, மதுரங்குளத்தைச் சேர்ந்த செல்வம் பாபு (15), கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சண்முகம் சர்வராசா (21) ஆகிய மூவருமே விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தவர்களாவர்.

இவர்களில் கறுப்பளையைச் சேர்ந்த கனகசுந்தரம் சுரேஸ் ஒட்டுப்படையினர் திவ்வியன் என பெயர் வைத்திருந்தனர், தெரிவிக்கையில்:-

நான் அன்றாடம் கூலி வேலை செய்பவன். அரிசிஆலை மற்றும் வயல்களுக்கு வரம்பு கட்டுவது வேளாண்மை அறுவடை செய்வது எனது தொழிலாகும். இருபது நாட்களுக்கு முன்பு எனது உறவினர் முறக்கொட்டான்சேனையில் இருக்கின்றார்கள். அங்கு போய் நின்று வயல் வேலைகள் செய்து விட்டு ஊருக்கு (கறுப்பளைக்கு) திரும்பி வந்த போது வெலிக்கந் தையில் சிறிலங்கா ஆமிக்காரர்கள் என்னைப் பிடித்தார்கள். என்னை புலி என்று கூறி மிரட்டி அடித்தார்கள். அன்று இரவு இருட்டு அறை ஒன்றுக்குள் பூட்டி வைத்தார்கள். மறுநாள் கருணா குழு என்கின்ற ஒட்டுப் படையினரிடம் என்னை ஒப்படைத்தனர். அவர்கள் எங்களோடு நிற்க வேணும் என எச்சரித்தனர். பின்னர் ஆறு துப்பாக்கி ரவைகளைத் தந்து றப்பர் போத்தல் ஒன்றுக்கு சுடச் சொன்னாங்க. பின்னர் தீவுச்சேனையில் ஆமிக்காரர்களுடைய கேம்புக்குப் பக்கதில தான் இந்த ஆயுதக் குழுவும் இருக்குது. அங்கு ஒருநாள் என்னையும் இன்னொரு பெடியனையும் ஆமிர வாகனத்தில் ஏற்றி அனுப்பினாங்க. கூட வந்த பெடியனுக்கு பிஸ்ரல் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை சித்தா என்பவன் செய்திருந்தான்.

நாங்க வந்த இடம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான காக்காச்சிவட்டை. அங்கு என்னோடு கூட வந்த இளைஞர் பிஸ்ரா லால் குறிவைத்து சுட்டவுடன் சூடுபட்டு விழும் நபரிடமிருந்து அடையாள அட்டை மற்றும் அவரது சேட்பைக்குள் இருக்கும் பொருட்களைக் கொண்டு வருமாறு குறிப்பிட்டிருந்தனர்.

இதன்படி காக்காச்சிவட்டைக்கு வந்து ஒருநாள் இரவு கடை ஒன்றுக்குள் படுத்திருந்தோம். மறுநாள் நான் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்ததாகவும் கைத்துப்பாக்கி வைத்திருந்த நபர் தப்பி ஓடி விட்டதாகவும் குறிப்பிட்டார். இப்போதுதான் பயமில்லாது உள்ளது என்றும் அந்த இளைஞர் கூறினார்.

செல்வம் பாபு (15) ஒட்டுப் படையினர் கமல் என பெயர் வைத்திருந்தனர். இவர் ஒட்டுப் படை யிடம் சிக்கியது, தப்பி வந்த அனுபவங்களைத் தெரிவித்தார்:-மாங்கேணி மதுரங்குளம் எனது ஊர். ஒன்பதாம் தரம் படித்திருக்கிறேன். கூலித்தொழில் செய்கின்றேன்.

ஓமடியார்மடு என்னும் இடத்திற்கு கூலிவேலைக்காகச் சென்றிருந்த போது ஒட்டுப் படையைச் சேர்ந்த ரஜிகுமார், ரங்கன், மாயவன் ஆகிய மூவர் வந்தார்கள். எங்க ளோடு வரவேண்டும். உனக்கு மாதச் சம்பளம் ஆறாயிரம் ரூபா தாறம். கட்டாயம் வரவேண்டும் என எச்சரித்தார்கள்.

நான் அவர்களுடன் சென்று சென்று விட்டேன். தீவுச்சேனைக்குக் கூட்டிச் சென்று ஐந்து நாள் பயிற்சி தந்தார்கள். மயில் ஒன்றுக்குச் சுடச் சொன்னார்கள். சுட்டன், பின்னர் ஆமிக்காறனுகளுட்டக் கூட்டிச் சென்று என்னை அறிமுகம் செய்தார்கள். பின்னர் சண்டைக்கு வந்தால் இப்படித்தான் போகணும். இப்படித்தான் செய்யணும் என்று மார்க்கன், றியசீலன் விளங்கப் படுத்தினார்கள்.

பின்னர் ஒருநாள் (30.10.2005) வாகரை கட்டுமுறிவுக்குஞ்சன் குளம் 2ம் கட்டையிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்துவதற்காக என்னையும் கூட்டிச் சென்றார்கள். அங்கே போவதற்கு முன்னர் ஆமிக் கேம்புக்குப் போய் ஆயுதம், குண்டுகள், துப்பாக்கி ரவைகள் எல்லாம் வாங்கினார்கள். ஆமிக்காரனுகளும் கூட வந்தனர். விடுதலைப் புலிகளின் காவலரண் மீது சுட்டபோது விடுதலைப் புலிகள் பதிலுக்குத் தாக்கினார்கள். அப்போது ஒட்டுப்படையைச் சேர்ந்த ஒருவருக்கு தலையில காயம் பட்டு பலியாகிவிட்டார். இன்னொருவருக்கு காயம். அப்போது ''மகேசன் என்கின்றவனுக்கு போய் குண்டு அடிச்சிப்போட்டுவா. உனக்குப் பத்தாயிரம் தாறன். பின்னர் வீட்டுக்குப் போகலாம் என்றார்கள். நான் கைக் குண்டையும் எடுத்துக் கொண்டு விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தேன். இப்போது எனக்கு சந்தோசமாய் இருக்கின்றது எவ்வித பயமுமில்லை என்றார்.

கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த சண்முகம் சர்வராஜா (21) கூறுகையில்:- நான் இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு வெளிநாடு போயிருந்தேன். கட்டாரில் ஜ.சி.சி கொம்பனியில் வேலை செய்த நான் மூன்று மாதங்களுக்கு முன் ஒட்டுப்படையில் உள்ள மார்க்கன் என்பவன் எனக்கு ரெலி போன் எடுத்தான். நான் வெளிநாட்டு ஏஜன்சி செய்கிறேன். நீ கொழும்பு திரும்பு. உனக்கு வேற நாட்டில நல்ல வேலை ஒழுங்கு பண்ணித் தாறன் என்று கூறினான்.

''நான் கொழும்புக்கு வந்த போது ஏயா போட்டில மார்க்கன் நின்றான்". வேன் ஒன்றில என்னை ஏத்தி எடுத்து தீவுச்சேனைக்குக் கொண்டு வந்தான். (தீவுச்சேனை பொலனறுவை மாவட்டத்தின் வெலிக்கந்தைப் பிரதேசத்தில் உள்ள இடம்) பின்னர் சேனபுர ஆமிக் கேம்பிற்கு என்னைக் கூட்டிச் சென்று கேம் பெரியவன் பிரிய தாசவிடம் என்னை அறிமுகப் படுத்தினான்.

''இவரு எங்கட ஆளு. வெளிநாடு சென்றிருந்தவர். இப்போது திரும்பி வந்து எங்களோட சேந்தித் தாரு. இவரு போக்குவரத்து செய்யும் போது கிளியர் பண்ணிவிட வேணும்" என மார்க்கன் பிரியதாஸவிடம் சொன்னதும், பிரியதாஸ எனக்குக் கை கொடுத்தான். மார்க்கனுடன் ஒட்டுப்படையைச் சேர்ந்த சின்னத்தம்பியும் வந்திருந்தான். பின்னர் தீவுச் சேனையில் சேனபுர படை முகாமுக்கு அருகில் தான் ஒட்டுப்படை முகாம் உள்ளது.

இங்கு 65 பேர் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வயோதிபர்கள். ஆறாயிரம் ரூபா சம்பளம் தருவதாகக் கூறி அப்பகுதியிலுள்ள வறிய மக்களைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். தாக்குதல் நடத்தப் போக முன்பு சேனபுரக் கேம்புக்குப் போய் ஆயுதங்கள் கேட்பார்கள். துப்பாக்கிகள், ரவைகள், கைக்குண்டுகள் எல்லாம் ஆமிக்காரனுகள்தான் கொடுக்கிறது. இதை பலதடவைகள் கண்டிருக்கிறேன்.

ஒரு தடவை மாதுறுஓயா படைமுகாமுக்கு என்னையும் கூட்டிச் சென்றார்கள். மார்க்கனும் வந்தான். குண்டுகள், கிளைமர், ரவுண்ஸ் எல்லாம் ஆமியிடம் கேட்க, கொடுத்தானுகள். மார்க்கனுக்கு சிங்களம் தெரியாது. கொன்னிக் கொன்னித்தான் சிங்களம் கதைப்பான்.

பல அப்பாவிகளை அடிச்சி கொலை செய்கிறார்கள். நான் அறிய ஏழு பொதுமக்கள் கொலை செய்யப் பட்டுள்ளனர். ஒருநாள் ஒரு பெடியனை பிடிச்சு அடிச்சானுகள். சேனபுர ஆமிக்காரனுகள் வந்து பார்த்துப் போனார்கள். பின்னர் அந்தப் பெடியனைக் கூட்டித்து இரண்டு மூன்று பேர் போனார்கள். சற்று நேரத்தில் பெடியன் வரவில்லை. கூட்டிச் சென்றவர்களே சந்தோசத்துடன் திரும்பி வந்தனர். ''அந்தப் பெடியன் எங்கே"? எனக் கேட்டேன். ''அவண்ட கதையை முடிச்சிப் போட்டம் எண்டு சொன்னார்கள்.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தளபதி டிக்கான் மற்றும் போராளிகள் மீதான தாக்குதலுக்கு சிறிலங்கா கடற்படையும் ஒட்டுப் படையும்தான் காரணம் என சர்வராசா தெரிவித்தார்.

டிக்கான் மீதான தாக்குதலுக்கு ஒட்டுப் படையைச் சேர்ந்தவர்களை நேவிக்காரர்கள்தான் ஏத்திப் போனவர்கள். சுட்டுப் போட்டு வந்த பின்னரும் இது பற்றிக் கதைத்தார்கள்.

முஸ்லிம் பகுதிகளில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களுக்கும் ஒட்டுப் படைதான் காரணம் எனவும் இவர் தெரிவிக்கிறார். ஓட்டமாவடியில் நடந்த கொள்ளைச் சம்பவம் ஒன்றிற்கு இவர்கள் காரணம். வீரா, றியசீலன் இன்னும் சிலரும் சென்று வந்தனர். நாய் குலைக்க ஓடிவந்ததாகவும் இவர்கள் பேசிக் கொண்டனர் என்றார்.

ஒட்டுப் படைக்கும் சிறிலங்கா படைப்புலனாய்வுப் படைப்பிரிவுக்கும் தொடர்பு இருப்பதையும் சர்வராசா ஊடகவியலாளர்களிடம் விபரித்தார்.

மட்டக்களப்பு பல்பொடி கொம்பனி புலனாய்வு அதிகாரி குமாரசேன பல்வேறு தாக்குதல் சம்பவங்களின் சூத்திரதாரி என்பது சர்வராசாவின் தகவல்களின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

பல்பொடி கம்பனி என்பது சிறிலங்காப் படைப்புலனாய்வுப் பிரிவினரின் மட்டக்களப்பு முகாம் ஆகும். போர்க் கால சூழலில் மட்டக்களப்பு நகரில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் இங்குதான் கொண்டு செல்லப்பட்டு அடித்து சித்திரவதைப் படுத்தி துன்புறுத்துகின்றனர். சிலரைப் படுகொலை செய்கின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்ட சம்பவமாகும். தற்போது இந்தப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான குமாரசேன தாக்குதல்களுக்கு உடந்தையாக இருந்திருக்கிறார். என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

மட்டக்களப்பு நகரில் ஒன்பதாம் மாதம் இரவு கடை ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியானார். இதுக்கு ஆமிக்கார வாகனத்தில் மார்க்கனும், பல்பொடி கம்பனி குமாரசேனவும் ஆமி வாகனத்தில் போய்த்தான் கொலை செய்தார்கள். இது எனக்கு நன்றாகத் தெரியும். மட்டக்களப்பு நகரில் ஆமி யூனிபோமில் ஹெல்மட் அணிந்து திரியிறார்கள் என்றார் சர்வராசா. தான் தப்பி வந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந்ததையும் ஊடகவியலாளர்களிடம் விபரித்தார் சர்வராசா.

கடந்த 25.09.2005 அன்று இரவு குமாரசேன என்னை ஒரு வாகனத்தில் ஏற்றிக் கொண்டார். கல்லடிப் பக்கமாக வாகனம் வந்தது. கல்முனை வீதியிலுள்ள ஐந்தாம் கட்டை எனுமிடத்திற்கு வந்ததும் மண்முனை சிறிலங்கா அதிரடிப் படையினர் ஐந்தாம் கட்டையடிக்கு வாகனத்தில் வந்தனர்.

அவர்களது வாகனத்தில் என்னை ஏற்றிக் கொண்டு மண்முனை அதிரடிப் படை முகாமுக்குக் கொண்டு வந்தார்கள். அங்கே ஒரு றைபிளைத் தந்து கொக்கட்டிச்சோலைக்குப் போய் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவரைச் சுட்டு விட்டு வருமாறு கூறினார்கள். அத்தோடு என்னை மீன்பிடி தோணியில் ஏற்றி அனுப்பினார்கள். நான் விடுதலைப் புலிகளிடம் வந்து சேர்ந்துள்ளேன் என்றார்.

இந்த மூன்று இளைஞர்களின் தகவல்படி கருணா குழுவென்ற பெயரில் சிறிலங்கா படைப்புலனாய்வும், படையினரும் கூலிப்படையினரை வைத்து நிழல் யுத்தம் புரிவது நல்ல தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தலில் இரு பிரதான கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக பிரசாரத்தில் இறங்கியிருக்கின்றனர். இதேவேளை போர் நிறுத்தம் பலவீனப்பட்டுள்ள நிலையில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இளைஞர்கள் விடயங்களை அம்பலப்படுத்தியிருப்பது அரசுக்குப் பெரும் சங்கடத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

# ஒற்றையாட்சி வலியுறுத்தலும் சமஷ்டி முறைமையும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சி வேட்பாளர்களும் ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றனர். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணமுடியாது, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற போது சிறிலங்காஅரசும் ,தமிழீழ விடுதலைப்புலிகளும் சமஷ்டி மற்றும் உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை ஆய்வு செய்வதற்கு இணங்கியிருந்தனர்.

எனவே இன்றைய கால கட்டத்தில் இந்த உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதும் இதன் சாத்திய மட்டுப்பாடுகள் குறித்து அறிந்து கொள்வதும் முக்கியமான விடயமாகும்இரு பிரதான அரசியல் கட்சிகளும் மற்றும் அவற்றின் தலைமைத்துவங்களுக்கிடையில் பகைமை மற்றும் கசப்புணர்வு மற்றும் அரசியல் அதிகாரத்துக்கான தீவிர போராட்டம் என்பவற்றை வைத்து நோக்குகை யில் பண்டாரநாயக்கா- தந்தை செல்வா ஒப்பந்த காலத்திலிருந்து நிகழ்ந்த தைப் போன்று மோதல் குறித்த அரசியல் தீர்வுக்கு அவசியமான விட்டுக்கொடுப்பை ஒரு கட்சி செய்வதை மறு கட்சி ஒருநாளும் அனுமதிக்கப் போவதில்லை. இதனைத் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மிகவும் தெளிவாகத் தெரிந்துள்ளனர்.

இது விடுதலைப்புலிகளுக்குப் புதிய விடயமல்ல. சிங்கள ஆட்சியாளர்களின் ஒப்பந்தங்களையும் ,பேச்சு வார்த்தைகளையும் நம்பிக்கைகளையும் வைத்து ஒரு போதும் களமிறங்கியதுமில்லை. களமிறங்கப் போவதுமில்லை. இவ்விடயத்தில் அரசிற்கு ஒரு சமாதானப் பரீட்சையாகவே தங்களை இனங் காட்டிக் கொண்டுள்ள புலிகள் அரசிற்குக் காலங்காலமாக எத்தனை சமாதானப் பரீட்சை வைத்தும் அதில் சித்தியெய்தாத நிலை தான் இன்றுமுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் உண்மையில் சமாதானத்தை நோக்கித் தங்களது நல்லெண்ணங்களை பல தடவை வெளிப்படுத்தியும் அரசு அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுத்திட்டத்தை முன்னெடுக்க இதயசுத்தியுடன் முன்வரவில்லை.பேச்சு வார்த்தைகள் முன்னேறுகையில் தெளிவுபடுத்தப் பட வேண்டிய இன்னுமொரு விடயம் ஒரு சமஷ்டி மாதிரியை உள்ளக சுயநிர்ணய எண்ணக்கரு எவ்வாறு பாதிக்கும் என்பதாகும்.

தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய எண்ணக் கருவுக்கான அங்கீகாரம் தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் சம்பந்தமான பிரச்சினை வடக்குக் கிழக்கில் சிறுபான்மையினங்களின் உரிமைகள் குறித்த பிரச்சினை போன்றவற்றிற்கு உரிய அரசியல் தீர்வை அவசியப்படுத்தும். இது அனேகமான அரசியல் தீர்வை வடக்குக் கிழக்குக்கு கூடுதலான அதிகாரங்கள் பகிர்வு செய்யப்படும் சமச்சீரற்ற சமஷ்டியை நோக்கித் தள்ளுவதாகவே அமையும்.

கடந்த ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பல புத்தி ஜீவிகள் ஒஸ்லோ ஆவணத்தில் இடம் பெற்ற சமஷ்டி எனும் பதம் பரந்த ஒரு பொதுவான பதமாக உபயோகிக்கப் பட்டதென்றும் , அதன் அர்த்தம் மரபு ரீதியான சமஷ்ட்டி ஏற்பாட்டிலிருந்து இரு தேசங்கள் இணையும் ஒரு கூட்டுச் சமஷ்டி வரை ஏதுவாக இருக்கலாமென்றும் கருத்துத் தெரிவித்தனர். இத்தகைய ஒரு மதிப்பீடு சரியெனில் ஒரு அரசியல் தீர்வின் வரைபெல்லைகள் குறித்த ஒஸ்லோ உடன்படிக்கை அனைவரும் முன்பு எண்ணியது போன்று ஆக்கபூர்வமான ஒன்றல்ல.

சமஷ்டி அரசியலமைப்புக்கும் கூட்டு சமஷ்டி அரசியலமைப்பிற்கும் இடையிலான வேறுபாடு என்னவெனில் சமஷ்டி எனும் பதத்திற்கு நிலையான துல்லியமான அர்த்தம் கிடையாது. இது நெகிழ்ச்சித்தன்மை மிக்க ஓர் எண்ணக்கரு என்பதோடு அது பல்வேறு அளவுகளிலான அதிகாரப்பகிர்வு நிலைகளைத் தழுவி நிற்கக் கூடும்.

மத்திய அரசு மிகவும் பலமாகவுள்ள இந்தியா போன்ற நாடுகளில் சமஷ்டி அரசியலமைப்புக்கள் உள்ளன. பிராந்தியங்கள் மிகவும் பலமான நிலையிலுள்ள சுவிஸ்லாந்து போன்ற சமஷ்டி அரசியலமைப்புக்கள் உள்ளன. கனடா போன்ற நாடுகளில் சமஷ்டி அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்பட்ட போது மத்திய அரசு பலமானதாக விளங்கியது. ஆயினும் காலப் போக்கில் பிராந்தியங்கள் . அல்லது மாகாணங்கள் பலம் மிக்கவையாக மாறியுள்ளன.

கூட்டு சமஷ்டி அரசியல் அமைப்பில் பிராந்தியங்கள் பலமாக விளங்குவதோடு பகிர்வு ஆட்சியை விட சுயாட்சியே அதிகமாகக் காணப்படும். அனேகமான சந்தர்ப்பங்களில் முன்னர் சுதந்திர அரசுகளாக விளங்கியவை ஒருங்கிணைந்து ஒரு புதிய தேச அரசை உருவாக்கும் போது கூட்டுச் சமஷ்டி அரசொன்று ஏற்படுகின்றது.

பொதுவாக கூடுதலான மரபுவழிச் சமஷ்டி அரசியலமைப்புக்கள் முன்னர் ஒற்றையாட்சியாக விளங்கிய அரசொன்றில் அதிகாரங்களைப் பகிர்வு செய்வதன் மூலம் ஒரு சமஷ்டி அரசாக மாறுகின்றது. ( அதிகாரப் பகிர்வு சமஷ்டி) அல்லது சுதந்திர அரசுகள் ஒன்றாக இணைவதன் மூலம் சமஷ்ட்டி அரசு ஏற்படுகின்றது (ஒருங்கிணைப்பு சமஷ்டி)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பரிவு கொண்ட பல வெளிநாட்டுத் தமிழ் அரசியல் அமைப்புக்கள் கடந்த 5-6 வருடங்களாக இறுக்கமற்ற கூட்டு ஒன்றைக் கொண்ட ஓரிரு தேச கூட்டுச் சமஷ்டியையே ஆதரிக்கின்றன. ஒற்றையாட்சி முறையிலிருந்து கூட்டுச் சமஷ்டிக்குச் செல்வது மிகப் பாரிய ஒரு பாய்ச்சல் நடவடிக்கையாகும்.

1987 இல் அமெரிக்க சமஷ்டி அரசியலமைப்பை ஆக்கியோர் சமூகத்தில் அதிகாரத்தைப் பிரித்து சமநிலைப்படுத்துவதன் மூலம் சுதந்திரத்தைப் பாதுகாப்பது சம்பந்தமாகவே கரிசனை செலுத்தியதாகக் கூறப்படுகின்றது. இது இலங்கைக்கும் பொருந்தக் கூடியதொரு விடயமா? 1972இல் முதலாவது குடியரசு அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்ட போது ஜனநாயகத்தின் சீரழிவு ஆரம்பமாகியது.

**அ.தர்மா**

நாம் சமஷ்டி குறித்து உரையாடும் போது அதிகாரப் பகிர்வு மற்றும் சுயாட்சி மாத்திர மன்றி அதன் ஏனைய அம்சங்கள் குறித்து கவனம் செலுத்தல் வேண்டும். ஒன்றுக்குப் பதிலாக இரண்டு, மட்டங்களிலான அரசாங்கங்கள் இருப்பதும் மத்தியில் அதிகாரம் குவிக்கப்படாமலிருப்பதும் அதிகாரப்பகிர்வு அல்லது அதிகாரம் கலந்தூடு பரவுதல் என்பது இடம்பெறுகின்றது.

உண்மையில் பூரணமான அதிகாரம் ஊழலையே ஏற்படுத்துமென்று கூறித் தாராள வாதச் சிந்தனையாளராகிய அக்டன் பிரபு சமஷ்டி அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கெதிரான மிகச் சிறந்த பயனுள்ள தடை ஏற்படாதென்று தெரிவித்தார்.

1972 ல் முதலாவது குடியரசு அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்ட போது ஜன நாயகத்தின் சீரழிவு ஆரம்பமாகியதென்று கருதப்பட்டது. அது தேசிய அரசுப் பேரவை என்னும் மத்திய அரசியல் நிறுவனத்தின் சகல அதிகாரங்களையும் குவித்தது. இதே அரசியலமைப்பில் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு என்ற கோட்பாடும் உள்ளடக்கம் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒற்றையாட்சி . அரசியலமைப்புக்கள் அதிகாரத்தை ஓரிடத்தில் குவிப்பதால் சர்வாதிகார அரசியல் தலைவர்களும் , இடது சாரி மற்றும் வலது சாரி ஆட்சிக் குழுக்களும் அதை விரும்புகின்றனர். சமஷ்டி அரசியலமைப்புக்கள் அதிகாரம் ஓரிடத்தில் குவிவதைத் தடுப்பதால் அவற்றை அவர்கள் விரும்புவதில்லை.

ஆகவே சமஷ்டி என்பது ஜனநாயகத்துடனும் பல்லினப் பங்குடனும் பின்னிப் பிணைந்த ஒன்றாகும்.

பன்மைப் பாங்கை அங்கீகரிக்காத ஒற்றையாட்சியில் உண்மையான அதிகாரக் கலந்தூடு பரவுதல் இருக்கமாட்டாது. ஐக்கிய சோவியத் சோஷலிச குடியரசுகளின் யூக்கோஸ்லாவினதும் முன் னாள் அரசியமைப்புக்கள் பெயரளவுக்கு மாத்திரம் சமஷ்டித் தன்மையைக் கொண்டிருந்தன. சமஷ்டி அரசை விமர்சிப்போர் இந்த நாடுகள் பிளவடைந்தமை சமஷ்டித் தன்மை காரணமாகவே என்று கூறுகின்றனர்.

இவை ஜனநாயகத் தன்மையோ பல்லினப்பங்கையோ கொண்டிராததால் அவை சமஷ்டி அரசுகள் அல்லவென்பது எனது வாதமாகும். இவை ஜனநாயகத் தன்மை கொண்ட உண்மையான சமஷ்டி அமைப்புக்களாக இருந்திருந்ததால் அவற்றின் வரலாறு மிகவும் வித்தியாசமாக அமைந்திருக் கும்.இலங்கையில் இனப்பிரச்சினையொன்று உள்ளது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆயினும் ஜனநாயகம் மற்றும் வகைப் பொறுப்பு குறித்த ஒரு நெருக்கடியும் இங்கு நிலவுகின்றது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்ற அதிகாரப் பகிர்வு கொண்ட ஒரு சமஷ்டி அரசியல மைப்பு இந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண ஓரளவாவது உதவும்.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் உருவாகிய செனட்சபை வெற்றியளிக்கவில்லை என்பதே இலங்கையின் அனுபவமாகவுள்ளது. மத்தியில் பிராந்திய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு ஒரு புதிய சமஷ்டி அரசியலமைப்பில் இரண்டாவது சபையொன்று இருப்பது வாழ்வாதாரமான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும்

> **"பண்டாரநாயக்கா ~ தந்தை செல்வா ஒப்பந்த காலத்திலிருந்து நிகழ்ந்ததைப் போன்று மோதல் குறித்த அரசியல் தீர்வுக்கு அவசியமான விட்டுக்கொடுப்பை ஒரு கட்சி செய்வதை மறுகட்சி ஒருநாளும் அனுமதிக்கப் போவதில்லை. இதனைத் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மிகவும் தெளிவாக தெரிந்துள்ளனர்.**
>
> **இது விடுதலைப் புலிகளுக்குப் புதியவிடயமல்ல. சிங்கள ஆட்சியாளர்களின் ஒப்பந்தங்களையும், பேச்சு வார்த்தைகளையும் நம்பிக்கைகளையும் வைத்து ஒரு போதும் களமிறங்கியதுமில்லை. களமிறங்கப் போவதுமில்லை. இவ்விடயத்தில் அரசற்கு ஒரு சமாதானப் பரீட்சையாகவே தங்களை இனங் காட்டிக் கொண்டுள்ள புலிகள் அரசிற்குக் காலங்காலமாக எத்தனை சமாதானப் பரீட்சை வைத்தும் அதில் சித்தியெய்தாத நிலைதான் இன்றுமுள்ளது."**

சோல்பரி அரசியலமைப்பின் கீழான செனட்சபை இத்தகைய ஒரு கருமத்தை நிறைவேற்றவில்லை. ஆகவே இரண்டாவது சபைக்கான ஒரு புதிய நியாய விளக்கம் உள்ளது.பல நவீன சமஷ்டி அரசியலமைப்பில் கல்விமான்கள் மத்தியில் பிராந்திய பிரதிநிதித்துவம் சமஷ்டியின் வாழ்வாதாரமான அம்சம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சமஷ்டி என்பது சுயாட்சியும் பகிர்வு ஆட்சியுமாயின் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்ட அலகுகள் மத்தியில் குரலெழுப்புவதற்கு வசதியளிக்கப்படுதல் பகிர்வு ஆட்சியை உறுதிப்படுத்தும் வழிமுறையமைப்பாகும்.

முதலாவதாக அதிகாரப் பகிர்வைப் பாதுகாக்கும் ஒரு நியாய விளக்கம் உள்ளது. ஒரு மத்திய அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறை அல்லது சட்டவாக்கத்துறை அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளை கவிழ்க்கக் கூடிய தீர்மானங்கள் ,விதிமுறைகள் அல்லது சட்டங்களை வேண்டுமென்றோ, தற்செயலாகவோ எடுக்கக் கூடும். மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளும் ,பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரப் பகிர்வுக்குச் சாதகமான அணுகு முறையில் தமது தீர்மானங்களை எடுப்பதில்லை.

ஆகவே மத்திய அரசுப் பிராந்தியங்களின் சட்டம் நிலைத்துள்ள அதிகாரங்களை மீறும் வகை யில் நடந்துகொள்ள முற்படும் வேளையில் கரிசனையை வெளிப்படுத்துவதற்கும்,அபாய அறிவிப்புச் செய்வதற்கும் மத்தியில் பிராந்தியங்களின் அல்லது மாகாணங்களின் தூதுவர்கள் அல்லது அதிகார ப்பகிர்வின் காவலர்கள் இருப்பதை உறுதிப்படுத் துவது முக்கியமானதாகும். இது சுயாட்சியைப் பெரிதும் முன்னேற்றும்.

இரண்டாவதாக தேசிய ஐக்கியத்தைப் பாதுகாக்கும் ஒரு நியாய விளக்கம் உள்ளது. பிராந்தியக் கட்சிகளும் குழுக்களும் பிராந்திய சிந்தனை மற்றும் அடையாளம் என்பவற்றை மாத்திரம் முழுமையின் ஒரு பகுதியாகவும் உணர்தல் வேண்டும். அவர்கள் பிராந்தியத்தின் முழுத் தேசத்தினதும் நலன் பிரதிநிதிகளாகச் செயலாற்ற வேண்டும்.

இது பொதுத்தன்மைக்கும் பிரத்தியேகத் தன்மைக்குமிடையில் சரியான சமநிலையை ஏற்படுத்தி பகிர்வு ஆட்சியை வலுப்படுத்தும். மத்திய அரசு மாகாணங்களின் அதிகாரங்கள் மீது மிகவும் இலகுவாக ஊடுருவல் நடத்தியமை அரசியலமைப்புக்கான பதின் மூன்றாவது திருத்தம் தோல்வியடையக் காரணமாக அமைந்தது.


மாகாணங்களின் அதிகாரங்களை கவிழ்க்கும் சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வேளைகளில் குறிப்பிட்ட சட்டம் 13 வது திருத்தத்தின் கீழ் ஏற்புடையதா இல்லையா? என்று எந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களும் வினா வெழுப்பியது கிடையாது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டம் , தென்பிராந்திய அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம், போன்ற பல சட்டங்கள் மாகாணங்களின் அதிகாரங்களைக் கவிழ்ப்பவையாகும். ஆயினும் அரசியலமைப்பு மாற்றமும் சமஷ்டி ஏற்பாடுகளும் இங்குள்ள நெருக்கடிக்கான அரசியல் தீர்வின் முக்கிய பகுதியாகும்.

எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்குமிடையிலான அதிகாரப் பகிர்வு பாதுகாப்பானதாகவும், பயனுள்ளதாகவும் அமைய வேண்டுமெனில் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் வரிமுறையமைப்புக்கள் இருக்க வேண்டியது அவசியம்.

சட்டவாக்கத்தின் நீதிமுறை மீளாய்வு மற்றும் மத்தியில் பிராந்திய பிரதிநிதித்துவம் என்பவை இத்தகைய இரு பாதுகாவல் ஏற்பாடுகளாகும். தற்போதைய அரசியலமைப்பைபில் இவ்விரண்டு வாழ்வாதாரமான கட்டுப்படுத்தும் வழிமுறையமைப்புக்களில் எதுவுமே இல்லை. இந்நிலை மாறவேண்டும்.

# இனியும் தமிழினத்தை ஏமாற்ற முடியாது!





ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரகாலமேயுள்ள நிலையில் இரு பிரதான கட்சி வேட்பாளர்களும் தமிழ் மக்களிடம் நேரடியாகச் சென்று வாக்குக் கேட்கும் தகுதியை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஏனெனில் இதற்கு முன்னதாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களை அவதானிக்குமிடத்து சிங்களத் தலைமைகள் வழங்கிய வாக்குகுறுதிகள் எதுவும் நிறைவேற்றவில்லை. வெறுமனே வாக்குறுதிகளை நம்பி தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்தனர். மாறாக ஆட்சிக்கு வந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் போரைத் தீவிரப்படுத்தி தமிழின அழிப்பு நடவடிக்கைகளை முன்னகர்த்தினர்.

ஜே.ஆர், பிரேமதாசா, விஜயதுங்க, சந்திரிகா ஆகிய நான்கு ஜனாதிபதிகள் இந்நாட்டை ஆட்சி செய்து விட்டனர். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவது தவிர அத்தனை அதிகாரமும் சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருந்தது.

இவ்வாறு பலம் பொருந்திய அதிகாரம், நாடாளுமன்றத்திற்குப் பதில் கூறத்தேவையில்லாத அதிகாரங்களைக் கொண்டிருந்தும் கூடத் தமிழ் மக்களது பிரச்சினையின் ஜதார்த்தத்தைப் புரிந்து கொண்டு தீர்வு காணும் எந்த அணுகு முறைகளையும் சிங்களத் தலைமைகள் மேற்கொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சி தமிழ் மக்களது பிரச்சிணையை மோசமாக்கி விட்டது எனக் குறை கூறிய சந்திரிகா குமாரதுங்கா தன்னை சமாதான தேவதையாக வெளிப்படுத்தி தமிழ் மக்களது வாக்குகளை வசீகரிப்பதற்காக நாடகமிட்டார். தானும் கணவரை இழந்த பெண் என்ற அனுதாப வார்த்தைகளைச் சொரிந்து வெண்புறா வேடமிட்டு தமிழ் மக்களிடையே வாக்குகளை அறுவடை செய்ய சூழ்ச்சி செய்தார்.

கடந்த 17 வருட காலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் கெடுபிடிகளுக்கு மனிதப் படுகொலைகளென சொல்லொண்ணாத் துன்பத்தைச் சந்தித்த தமிழ் மக்கள் சமாதான வேடமணிந்து நிற்கும் பெண்ணுக்கு தமது ஆதரவை வழங்கினர்.

கணிசமான தமிழ் வாக்காளர்கள் ஆதரவுடன் ஆட்சிப் பீடமேறிய அம்மணி சமாதான வேடத்தைக் கலைத்து விட்டு யுத்தப் பிரசன்னமாக உருவெடுத்தார். தனது மாமன் ரத்வத்தைக்குப் படைத்துறை அமைச்சர் பதவியைப் பகிர்ந்து கொடுத்த அம்மணி மாமனின் வழிநடத்தலுடனும், படைபலத்தின் துணையுடனும் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் எனக் கனவு கண்டனர்.

தோதோடு தோள் நின்று உதவிய கதிர்காமரின் சர்வதேச நாடுகளின் பிரசாரத்துடன் ஆயுதங்களை வாங்கிக் குவித்ததுடன் மட்டுமன்றி தமிழர் தாயகம் மீது கனதியான போரைத் திணித்தனர். பல வீர சபதங்களும் இட்டனர். இறுதியில் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவரலாறாக சந்திரிகா-அம்மையாருக்கு உணர்த்தியிருந்தனர்.

படையினரின் முதுகெலும்பாகத் திகழ்ந்த ஆனையிறவு பெரும் தளத்தைக் கைப்பற்றி அங்கு தமிழீழ தேசியக் கொடியைப் பறக்க விட்டு தமிழர் சேனை வெற்றி முரசு கொட்டியது.

அது மட்டுமன்றி யாழ் குடாநாடு நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகள் நகர்ந்தன. யாழ் குடாநாட்டில் பலாலி பெரும்தளத்தில் இருக்கும் சுமார் நாற்பதாயிரம் படையினரையும் உயிரோடு மீட்டெடுக்க அண்டைய நாடுகளின் உதவியைக் கோரியிருந்தார் அம்மணி. இதனைத் தொடர்ந்து போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இரு தடவையாக ஜனாதிபதியாக பதவி வகித்த சந்திரிகா குமாராதுங்க பதவியிலிருந்து ஓய்வு பெறும் நாட்கள் அண்மித்து விட்டது. ஆனால் ஜனாதிபதியாக இருந்து தமிழ் மக்களுக்கு அவர் செய்த நன்மைகள் என்ன? சமாதான முயற்சிகளுக்கு அவர் ஆர்வமாக அக்கறை காட்டினாரா? மாறாக இனஅழிப்புக்கு வழிகோலும் காரியங்களுக்கு அவரது ஆட்சி வழிகோலியது. இப்போது ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலுக்காக பதினான்கு வேட்பாளர்கள் களத்திலிறங்கியுள்ளனர்.

இவர்களின் பிரதான இரு கட்சிகளின் வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷவுக்கும், ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையில் போட்டி வலுவடைந்துள்ளது. தென்னிலங்கை மக்களின் வாக்குப் பலத்தை முழுமையாக நம்பும் மகிந்த அணி இனவாதக் கட்சிகளுடன் கூட்டு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு களத்திலிறங்கியுள்ளனர்.

தான் ஆட்சிக்கு வந்தால் தற்போது நடைமுறையில் இருக்கும் போர் நிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்யப் போவதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார். தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் சாராம்சமாகவும் வெளியிடப்பட்டுள்ள மகிந்த சிந்தனையும் சாராம்சமாக சுனாமிக் கட்டமைப்பு ரத்து, போர் நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு, அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆப்பு, ஒற்றையாட்சிக்குள் தீர்வு போன்ற விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன.,

கடந்த காலங்களில் இவ்வாறான கொள்கைகளை சிங்களத் தலைமைகள் கொண்டிருந்ததுதான் போர் மூழ்வதற்குக் காரணமாக அமைந்தது. அதே கொள்கைகளை இனவாதத்தைத் திருப்திப்படுத்தும் வகையில் தான் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்திருக்கின்றார் மகிந்த ராஜபக்ஷ. இது தமிழ் மக்களின் அபிலாசகைளை ஒரு போதும் தீர்க்கப் போவதில்லை. முழுக்க முழுக்க சிங்கள மக்களையும், இனவாத சக்திகளையும் திருப்திப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தை நோக்குமிடத்து மகிந்த ராஜபக்ஷ அது நான்காம் கட்ட ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ வருமிடத்து அது நான்காம் கட்ட ஈழப்போரைத் தடையின்றித் தொடங்குவதற்கு வழிவகுக்கும் என்பது உறுதி. இந்நிலையில் தமிழ் மக்கள் ஒருபோதும் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கப் போவதில்லை.

தேர்தலுக்கு ஒருவாரகாலம் இருக்கும் நிலையில் வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களிடம் சென்று வாக்குக் கேட்க முடியாதவராகவே மகிந்த காணப்படுகின்றார்.

**"ஜே.ஆர், பிரேமதாசா, விஜயதுங்க, சந்திரிகா ஆகிய நான்கு ஜனாதிபதிகள் இந்நாட்டை ஆட்சி செய்து விட்டனர். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவது தவிர அத்தனை அதிகாரமும் சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருந்தது."**

அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்த மகிந்த அக்கரைப்பற்றில் முஸ்லிம் மக்களிடையே உரையாற்றி விட்டுச் சென்றார். தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான இனவாதத்தையே அவர் தேர்தல் பிரசாரத்தில் மேற்கொண்டார்.

**பிரவீனா**

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடிக்கு கடும் பாதுகாப்பின் மத்தியில் வந்திறங்கிய மகிந்த அங்கும் கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவத்தைக் கிழறி தமிழ் மக்களைக் காயப்படுத்தும் வகையில் பிரசாரத்தை மேற்கொண்டு விட்டுச் சென்றார். இவர் தமிழ் மண்ணில் காலடி எடுத்து வைக்கவில்லை. யாழ் நகருக்கு எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கா, மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இவர்களது பயணம் தமிழ் மக்களிடையே வாக்குகளை அறுவடை செய்வதற்கான பயணமாக அமையவில்லை. யாழ்குடா நாட்டில் குவிக்கப்பட்டுள்ள படையினரின் பிரதான பெரும் தளமாக விளங்கும் பலாலி விமானப் படைத்தளத்திலுள்ள படையினரைச் சந்தித்து அவர்களது வாக்குகளை அறுவடை செய்வதே நோக்காக இருந்தது.

நவம்பர் 3ம் திகதி யாழ் சென்ற ரணில் விக்கிரமசிங்கா உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கும் சென்று திரும்பியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கா சென்று வந்த மறுநாள் நாலாம் திகதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பலாலிக்குச் சென்றிருந்தார். வலிகாமம் வடக்கு அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கும் காங்கேசன் துறை நடேஸ்வரா கல்லூரியில் நடந்த கூட்டமும் ஈ.பி.டி.பியின் மோசடி நடவடிக்கையையும் இங்கு கவனிக்க வேண்டும்.

வேலையற்ற பட்டதாரிகள், சமயாசமய ஊழியர்கள், தொண்டராசிரியர்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பு, பதவியுயர்வு சம்பந்தமான கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவித்த ஈ.பி.டி.பியினர் அவர்களை ஸ்ரீதர் தியேட்டரிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு வருமாறு அழைத்துள்ளனர். அங்கு சென்ற பிறகு தான் தெல்லிப்பளையில் தான் கூட்டம் என்றுகூறி படையினர் பாதுகாப்புடன் வாகனத்திலேற்றிச் சென்றுள்ளனர். அங்கு சென்ற போது மக்களுக்கு ஏமாற்றம். பின்னர் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரிக்குச் சென்றபோதுதான் ஈ.பி.டி.பியினர் மோசம் செய்து அழைத்து வந்துள்ளார்கள் என்பதை மக்களால் உணர முடிந்தது.

தமிழ் மக்கள் மகிந்தவுக்கு ஆதரவு என்பதை ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கே ஈ.பி.டி.பியினர் இவ்வாறு மோசம் செய்துள்ளதாக சென்றுவந்தவர்கள் விசனம் தெரிவித்தனர். யாழ்குடா நாட்டைப் பொறுத்த வரையில் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கான உணர்வுகள் மக்களிடையே தோன்றியிருக்கின்றது.

இருபிரதான கட்சி வேட்பாளர்களாலும் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை மக்கள் நன்கு உணர்ந்து விட்டனர்.

அத்துடன் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி பல்வேறு அறிக்கைகளையும் விடுத்து வரும் நிலையில் உயர் பாதுகாப்பு வலயத்துடன் அவர்களது குடாநாட்டுத் தேர்தல் பிரசாரம் நிறைவு பெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கா அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பகுதிகளுக்கே சென்று வந்திருக்கிறார். மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இன்னும் காலடி எடுத்து வைக்கவில்லை. வவுனியா, திருமலை மாவட்டங்களுக்கான தேர்தல் பிரசாரத்தின் இலக்கு சிங்கள, முஸ்லிம் மக்களது வாக்கு அறுவடைக்கான பிரசாரமாகவே கருதப்படுகின்றது. இதே வேளை ரணில் விக்கிரமசிங்கா அவர்கள்தான் ஜனாதிபதியானதும் போர் நிறுத்த உடன்படிக்கையைப் பலப்படுத்துவேன், பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பேன் எனக் கூறி பிரசாரம் செய்தாலும் போர் நிறுத்தத்தைப் பலப்படுத்தும் ஒட்டுப் படைகளின் ஆயுதக் களைவு குறித்தோ, அல்லது சமாதானத்திற்கான தீர்வு குறித்தோ தெளிவான விளக்கத்தையோ அல்லது தமிழ் மக்களுக்கு எவ்வித உத்தரவாத்தையோ வழங்கவில்லை.

இவ்வாறு இனவாதப் பிரசாரத்துடன் மகிந்தவும், ஒருபுறம் தெளிவற்ற கொள்கையுடன் ரணிலும் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களுடன் வந்து வாக்குப் போடுங்கள் என உரிமையோடு கேட்பதற்கு தகுதியற்றவர்களாகவே உள்ளனர்.

மறுபுறம் பேரினவாதச் சிந்தனை நிரம்பியிருக்கும் வேட்பாளர்களை நம்பி ஆர்வமோடு வாக்களிக்கும் நிலையில் தமிழ் மக்களுமில்லை. இவர்கள் தமிழ் மக்களிடம் வந்தால் இவர்களுக்கு மாலை போட்டு, பொட்டு வைத்து, கைலாகு கொடுக்கும் நிலையில் தமிழ் மக்களில்லை என்பதையே தமிழர் தாயகத்தின் உணர்வுகள் வெளிப்படுத்தி வருகின்றன.

எனவே ஜனாதிபதித் தேர்தலால், தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. அதனால் மக்கள் அக்கறையின்றி இருக்கின்றனர் என்பதுடன் இனியும் மக்கள் ஏமாற மாட்டார்கள் என்பது உண்மை.

# வறுமையில் வாடும் செட்டியார் குடியிருப்பு மக்கள்

சுனாமி அனர்த்தம் இலங்கையின் கரையோரப் பகுதிகளைப் பாதிப்புக்குள்ளாக்கியது யாவருக்கும் தெரிந்த விடயம். அதிலும் வடகிழக்கின் கரையோரப் பிரதேசம் மிகவும் படுமோசமான நிலையில் அழிவுகளை எதிர்நோக்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் வாகரை தொடக்கம் துறைநீலாவணை வரையிலான கரையோரப் பிரதேசம் தற்போது மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்படாத அளவிற்கு அழிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதிப்புக்களை எதிர்நோக்கிய மக்களை அரச, அரசசார்பற்ற பல நிறுவனங்கள் புனருத்தானப் பணிகளில் ஈடுபட்டு நிவர்த்தி செய்து வருகின்றன.



கரையோரப் பிரதேசம் மாத்திரம் நேரடிப் பாதிப்புக்களை எதிர்நோக்கியதால் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் மாவட்டத்தின் அரசாங்க அதிபர் உட்பட பிரதேச செயலாளர் உட்பட பலரும் அறிந்த விடயம். இவை தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு பாதிப்புக்குள்ளாகிய பகுதிகளுக்கு நிவாரணப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதே வேளையில் நிவாரணப் பணிகள் சரியான, நேர்த்தியான முறையில் வழங்கப்படவில்லை எனப் பாதிப்புற்றோர் கவலை தெரிவிக்கின்றார்கள். சில அதிகாரிகள் முறைகேடாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள் என்றும் ஏதிலிகள் விசனப்படுகின்றனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் ஆதங்கமாக உள்ளது. இவ்வாறான விடயம் தொடர்பாக கோறளைப் பற்றுப் பிரதேசத்தின் செட்டியார் குடியிருப்புக் கிராமத்தின் நிலமையினை வாசகர்களுக்குச் சுட்டிக் காட்டுகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப் பற்று தெற்குப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பழம் பெரும் கிராமம் செட்டியார் குடியிருப்பு. இந்தக் கிராமம் நேரடியாகச் சுனாமியினால் பாதிப்புக்குள்ளாகாது விட்டாலும் இங்கு வாழ்பவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் ஆற்றுத் தொழிலை மேற்கொள்பவர்கள்.

இக் கிராமத்தில் உள்ளவர்கள் பெரிதும் எழுத்தறிவு குறைந்தவர்கள். அது மாத்திரமல்ல, மிக மிக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களே உள்ளன. 1990ம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழலானது இவர்களில் பல உயிர்களைக் காவு கொண்டுள்ளது. ஆயினும் இவர்களுக்கு எவ்வித அபிவிருத்தித் திட்டமும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என இப்பகுதி மக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

**இது தொடர்பாக இக்கிராமத்தினைச் சேர்ந்த க.கோமளேஸ்வரி என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்:-**

நான் திருமணம் செய்து 1990ம் ஆண்டு சிறிலங்காப் படையினர் எனது கணவரைக் கொன்று விட்டார்கள். எனக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. ஆண் 02, பெண் ஒன்று. எனது கணவர் கைது செய்யப்படும் போது எனது பிள்ளைகள் சிறு வயதாகவே இருந்தார்கள்.

தற்போது மகள் திருமணம் செய்து ஒரு குழந்தையும் உள்ளது. எனினும் திருமணம் செய்யும் வரையும் நானே பராமரித்தேன். இத்தனைக்கும் எனக்கு எந்தத் தொழிலும் இல்லை.

விறகு விற்பது, மற்றும் ஆற்றில் இறால் வடிப்பது போன்ற தொழில்களைச் செய்தே பிள்ளைகளை வளர்த்தேன். யாரும் உதவி இல்லை. தற்போதும் அதே தொழிலைச் செய்கின்றேன். ஒரு வேளை அல்லது இரு வேளை பட்னி கிடக்கவேண்டியுள்ளது. யாரும் எமக்கு உதவி செய்ய முன்வரவில்லை. உதவி செய்யவும் இல்லை.

எமக்குக் கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் நேரடியாகப் பாதிக்கவில்லை. எனினும் மறைமுகமான தொழில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் எமக்குச் சுனாமி நிவாரணம் கிடைக்கவில்லை. பாதிக்கப்படாத எத்தனையோ பேர் நிவாரணம் பெறும் போது எங்களுக்கு இல்லை என்பதுதான் வேதனை.

சுனாமியால் பாதிக்கப்பட்டு மூன்

**சுகுணம்**

று நாட்களின் பின்பு பழைய உடுப்புகள் என வழங்கினார்கள். அதில் ஒன்று கூட எனக்குக் கிடைக்கவில்லை. அன்றாடம் வாழ்க்கை நடாத்துவதே பெரும் பாரமாகவுள்ள நிலையில் எம்மைப் போன்றவர்களுக்கு உதவி செய்வதற்கே, அரச உத்தியோகஸ்த்தர்கள் நியமிக்கப்பட்டவர்கள். ஆனால் ஏன் இவர்கள் எங்களைப் புறம் தள்ளியே வருகின்றார்கள்.

இதே போன்று பல அரசசார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்குப் பல உதவிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த அரசசார்பற்ற நிறுவனங்களின் கண்களுக்கு எங்கள் கிராமம் தென்படவில்லையா? அல்லது அரச அதிகாரிகள் வெளிக்காட்டவில்லையா? என்பது சந்தே கத்தினைத் தோற்றுவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5000 ரூபா வழங்கி வருகின்றார்கள். இவற்றிலும் முறைகேடு, இலஞ்சம் என்பன இடம் பெற்றுள்ளன என்றார்.

**இராசலிங்கம் என்பவர் கூறுகையில்:-**

நான் 1990ம் ஆண்டிலிருந்து ஆற்றுத் தொழில் செய்பவன். அத்துடன் சிறிய தோணி மூலம் படகுச் சேவையினையும் மேற்கொண்டு வந்தேன். ஒரு நாள் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எனக்கு இடது பக்கமாகக் கையில் வெடிப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றேன்.

பின்பு நான் புலிகளுக்கு ஆதரவானவர் எனக் கூறி என்னைப் படையினர் தொந்தரவு செய்தார்கள். இவர்களுக்கு அச்சமடைந்த நிலையில் மட்டக்களப்பிற்கு இடம் பெயர்ந்தேன். அங்கும் மீன்பிடித் தொழிலையே மேற்கொண்டேன்.

சுனாமி ஏற்பட்ட பின்பு வழங்கப்படும் நிவாரணப் பொருள் எதுவுமே வழங்கப்படவில்லை. இத்தனைக்கும் நான் ஒரு மீனவன் என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தகுந்த ஆவணங்கள் இருந்த போதும், எனக்கான உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. ஏன் எமக்கு இந்த அநியாயம் இழைக்கப்படுகின்றது என்பதுதான் தெரியவில்லை.

மற்றைய இடங்களில் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற போது, ஏன் எமது கிராமத்தில் ஒரு சிலருக்கும் வழங்கப்படுகின்ற போது ஏன் எமக்கு வழங்கப்படக் கூடாது? இவர்கள் வழங்குவது என்றால் மீன் பிடித் தொழிலை மேற்கொள்ளும் அனைவரு க்கும் வழங்க வேண்டும். ஏன் இந்த அதிகாரிகளின் பாராபட்சம் என்பது தெரியவில்லை.

அது மாத்திரமல்ல நாங்கள் பெரும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றோம். எமக்கு என்று நிரந்தர வீட்டுத் திட்டம் எதுவும் இல்லை. இன்றைய நிலையில் இந்தத் தொண்டர் நிறுவனங்கள் ஒரே இடத்தில் குவிந்து செயல்படுகின்றார்கள். ஏன் அவர்கள் எங்கள் கிராமங்களைக் கவனத்தில் கொள்ளக் கூடாது.

எமது கிராமத்தில் முக்கியமான தேவையாக உள்ளது குடிநீர். ஆனால்



மிக மிகத் தட்டுப்பாடான நிலையாகவே ஆரம்பகாலம் இருந்து இன்று வரைக்கும் இருந்து வருகின்றது.

சுனாமிப் பாதிப்பிற்குப் பின்பு எத்தனையோ நிறுவனங்கள் குடிநீர் வசதியினை மேற்கொண்டு வருகின்றார்கள். அதில் ஒரு நிறுவனமாவது எமது கிராமத்திற்கு குடிநீர் வசதியினை ஏன் மேற்கொள்ளக் கூடாது. இவற்றுக்குக் காரணம் எமது கிராம சேவகர் அவர்களின் முறைகேடான செயற்பாடே ஆகும்.

**க.கந்தசாமி கருத்துத் தெரிவிக்கையில்:-**

எமது கிராமம் வருடாந்தம் ஏற்படும் பருவமழையின் காரணமாக வெள்ளத்தில் மூழ்கின்றது. ஆனால் 2004ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பின் போது எமது தொகுதியிலுள்ள, பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.ஜெயானந்தமூர்த்தி அவர்கள் மாத்திரமே எமக்கு ஒரு வேளை உணவுக்காவது அரிசியினை வழங்கினார். வேறு யாரும் எந்த உதவியினையும் மேற்கொள்ளவில்லை. நாம் என்றும் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

நாங்கள் மீன்பிடித் தொழில் கரையோரமாக இறால் பிடித்தல், தூண்டல் போட்டுத்தான் மீன்பிடியை மேற்கொள்பவர்கள். சுனாமிக்குப் பின்பு எத்தனையோ நிறுவனங்கள் மீன்பிடி உபகரணங்களை வழங்கி வருகின்றார்கள்.

அதுவும் ஒரு நிறுவனம் வழங்கிய பின் மற்றைய நிறுவனம் ஒரே பாதிக்கப்பட்ட இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு மேலும், மேலும் உதவிகளைச் செய்கின்றார்கள். அவ்வாறான நிலையில் ஏன் எமக்கு இந்த உதவிகளைச் செய்யக் கூடாது எனக் கேள்வி கேட்கின்றார்கள்.

**ந.லீலாவதி என்பவர் கருத்துத் தெரிவிக்கையில்:-**

நாங்கள் இந்தக் கிராமத்தில் எதுவித முன்னேற்றமும் இன்றியே உள்ளோம். எனது வீடு கிடுகினால் ஆனது. ஒவ்வொரு வருடமும் ஓலை மட்டை வாங்குவதற்கு பெரும் சிரமப்படுகின்றோம். எனக்கு ஆண் பிள்ளைகள் இருந்த போதிலும் அவர்களால் இன்றைய நிலையில் வெளியிடங்களுக்கு வேலைக்குப் போக முடியாத அளவுக்கு நிலமை மாறியுள்ளதாக தெரிவித்தார்.

எங்களை யாரும் கவனிப்பாரின்றி புறந்தள்ளப்பட்ட நிலையில் காணப்படுகின்றோம். இப்படியான ஊர் உள்ளது என்று இனிமேல் தான் வெளியிடங்களுக்குத் தெரியும் என நான் நினைக்கின்றேன். அதுமட்டுமல்ல நாங்கள் இந்தக் கிராமத்தின் உண்மைகளைக் கூறினால் மிரட்டலும் அச்சுறுத்தலும் செய்கின்றார்கள். எங்களை யார் பாதுகாப்பார்களெனக் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக கோறளைப் பற்று தெற்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்ட போது பிரதேச செயலாளருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. உதவி பிரதேச செயலாளருடன் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தது. இது தொடர்பாக அவரிடம் கேட்ட போது:-

இந்தக் கிராமம் நேரடியாகச் சுனாமியால் பாதிக்கப்படா விட்டாலும், எங்களால் இயன்ற அளவு எங்களின் தரவுகளுக்கு அப்பால் நின்று உதவிகளை மேற்கொண்டுள்ளோம். அது மாத்திரமல்ல, அரச சார்பற்ற நிறுவனமான உலக தரிசன நிறுவனத்தினர் இக்கிராமத்தினை அபிவிருத்தி செய்வதற்காக முன்னுரிமைப்படுத்தி பட்டியல் வழங்கியுள்ளோம்.

ஆனால் இந்த நிறுவனமானது சிறார்களை மையமாகக் கொண்டே இவர்களின் அபிவிருத்தி வேலைகள் இடம் பெறும். மாறாக கிராம அபிவிருத்தி என்பது இல்லை எனத் தெரிவித்தார்.

மேலும் இந்த மக்களின் அடையாள அட்டை பெறுவதில் தாமதம் உள்ளதாகக் கேட்ட போது இது தொடர்பாகத் துரித நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். எது எப்படி இருந்தாலும் தமிழ் பிரதேசங்களைப் பொறுத் தவரையில் அழிவுகளும், இழப்புக்களும் சொல்லில் அடங்காது. இருந்தாலும், தற்போது சுனாமியின் மூலம் நல்லதொரு வாய்ப்புக் கிட்டியுள்ளது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி அழிவுற்ற, பின்தங்கிய கிராமங்களை முன்னேற்றம் செய்யும் பொறுப்பு அரசஅதிகாரிகளைச் சார்ந்தது.




D5

# தாயகமே தீயெடு

தாயகமே தீயெடு கொடும்
போரொழியத் தோள்கொடு.
தமிழா நீ வாளெடு
இனம் வாழ உன்னுயிர் கொடு.
நம்பிக்கை கொண்டு மண்ணில்
தம்பி படை நடத்தும் போது
அணி சேரத் தயங்காது நீ வா.
கொடும் பகை இங்கினி
தங்கிடா தென்று ஒரு
கொள்கையில் சேரவா தமிழா.
ஒரு கொடியிணைந்து
எம்படை வலு சேர்த்து
பகையுடன் மோதவா தமிழா.
பெரும் பகை மண்ணில்
மாண்டுமே போக
புது வரலாறு எழுதவா தமிழா.
இருளோடு வாழ்ந்த பெரும்
துயர் வாழ்வு போதும்
பகையோட்டி மகிழவா தமிழா.
எமதிடர் தீர்த்து போயோர்
புதுயுகம் தோன்றும் காலமிதடா
நீ புலியோடு சேரு
புது வாழ்வு தேடு.
களம் புகுந்து புயலாக மூசு
தமிழ் மனமோங்கப் பரணி நீ
பாடு.
எம் தேசம் வெல்ல கரம்
கோர்த்து நீயும்
களத்திலே பகையோடு மோதும்,
எம் வரலாற்றுப் புகழை
உலகெங்கும் வாழ்த்தும்
காலத்தைத் தேடி நீ ஓடு.
தாயகமே தீயெடு~ கொடும்
போரொழியத் தோள் கொடு.

- செல்வி -

# தம்பி ஜெயத்திற்கு........




**மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆணிவேராக இருந்தவர் உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன். தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுத்ததிலும் இவருக்குப் பெரும் பங்குண்டு. அதுபோலவே இவரது இல்லம், குடும்பத்தினர் எல்லாமே. அவர்களின் தொடர்புகள் மூலமே மெல்ல மெல்ல உறுதியாக மட்டு - அம்பாறையில் வேர்விடத் தொடங்கியது. இந்த விடுதலை விருட்சம். காசியானந்தனை விடுத்து தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சொல்ல முடியாது. அந்தவகையில் வீரச்சாவடைந்த தனது தம்பி மேஜர் வள்ளுவன்/ஜெயம் (காத்தமுத்து சிவஜெயம்) அவர்களை நினைத்து செப்டெம்பர் 89 அண்ணன் காசியானந்தன் அவர்கள் எழுதிய ''தம்பி ஜெயத்திற்கு...............'' என்ற நூலைத்தொடராக அளிக்கின்றோம். காலத்தின் தேவை கருதி - அடுத்த தலைமுறையினருக்கு போராட்டத்தின் உருவாக்கம் குறித்த சில மனப்பதிவுகளை ஏற்படுத்த இந்நூல் உதவும்.**

அரு. கோபாலனும் அந்த உண்ணாநோன்பில் - சின்ன வயதில் -எங்களுக்கு அருந்துணையாக இருந்தது நினைவிருக்கின்றது. "உண்ணா நோன்பு ஏன்?" என்று தலைப்பிட்டு ஆங்கிலத்திலும், தமிழிலும் நான் எழுதி அச்சிட்டு வெளியிட்ட துண்டறி க்கை தான் ராஜாஜி அவர்களுக்குத் தமிழீழத்தின் உண்மை வரலாற்றை உணர்த்திற்று.

இலங்கை தூதரகத்திலிருந்து அன்று மாலை புறப்பட்டு "கல்கி" அலுவலகம் சென்று - அங்கிருந்த ராஜாஜி அவர்கள் முன்னிலையில் உண்ணாநோம்பை முடித்துக் கொண்டோம். மறுநாள் (6 ஜூன் 1963) வெளி வந்த "இந்து", "மெயில்" ஆகிய ஆங்கில நாளேடுகளில் உண்ணாநோன்பு புகைப்படமும், சேதியும் ராஜாஜி அவர்களின் அறிக்கையும் வெளியாகிற்று. "இலங்கையில் வாழ்கிறவர்கள் இந்தியத் தமிழர்கள் மட்டுமல்ல - அந்த மண்ணின் மைந்தர்களான பழங்குடித் தமிழர்களும் அங்கு வாழ்கிறார்கள் என்பதை இப்போதுதான் அறிகிறேன். அவர்களுடைய உரிமைகள் பேணப் பட்டாக வேண்டும்" என்று ராஜாஜி அறிக்கையில் கூறியிருந்தார்.

பொதுக் கூட்டங்களுக்கு நான் அடிக்கடி போய்வந்த காலம் அது. தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தேன். குன்றத்தூரில் ஈரோடு மு.சின்னசாமி அவர்களோடு கலந்து கொண்ட நாம் தமிழர் இயக்கக் கூட்டம் ஒன்றில் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்த போது என் வாயிலிருந்து குருதி கொட்டிற்று. ஆபத்தான நிலையில் சென்னை மருத்துவமனையில் காச நோயாளனாக அனுமதிக்கப்படுகின்றேன்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் தாக்கப்பட்டதால் நெஞ்சில் ஏற்பட்ட புண் இப்போது பெரிதாகி நான் மரணத்தோடு போராட வேண்டியிருந்தது. இளங்கலை ( பி.ஏ.) பட்டத் தேர்வு இக்காலத்தில் தான் வெளியாகின. தம்பி, நம்மண் எத்தனை அழகானது. உன்னைப் பெற்ற அமிர்தகழி மாநகராட்சி மன்ற எல்லைக்கு உள்ளே இருந்தாலும் அது உள்ளம் தொடும் ஒரு அழகிய கிராமமே.

நீயும், நானும், தம்பி சுதர்சனும் நம் வீட்டுக்கு முன்னால் நீண்டு விரிந்து கிடக்கும் உப்பு நீர் ஏரிக்கரையில் நிலா வெளிச்சத்தில் பேசிக்கொண்டிருப்போம். காலம் போவதே தெரிவதில்லை.

ஏரியின் எதிர்க்கரையில் முக்கால் கல் தொலைவில் கைகோத்து வரிசையாக நிற்கும் தென்னை மரங்களின் இருண்ட பச்சை எழிலோடு நாவலடிக் கிராமம். தங்க அலைகளில் கறுப்புத் தோணிகள். இருபக்க நீர் கரைகளிலும் விளக்குகள் ஊர்வலம் போவது போல இறால் பிடிப்பவர்களின் வெளிச்சம்.

குளிர் காற்று அங்கேதான் நாம் உட்கார்ந்திருப்போம். பத்தாம் வகுப்பை முடித்து அப்போதுதான் நீ பள்ளிக்கூடத்துக்கு வெளியே வந்திருந்தாய். உன்னை காணவரும் பழைய மாணவ நண்பர்களும் நம்மோடு கூட வந்து ஏரிக்கரையில் உட்கார்ந்துகொள்வார்கள்.பேசுவோம் தமிழீழ மக்களின் விடுதலை பற்றியே கொடியவெயில் காலத்தில் வைகாசித் திங்கள் முழு நிலா இரவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லாக் கிராமங்களிலும் கண்ணகி கோயில் விழா நடக்கும். சிலப்பதிகாரம் பற்றிப் பேச கோயில்காரர்களால் நான் அழைத்துச் செல்லப்படுவேன். கண்ணகி கோயில் ஒன்றில் பேசிவிட்டுவந்து ஏரிக்கரையில் உட்கார்ந்து இரவு விடியும்வரை என்னோடு நீ பேசிக்கொண்டிருந்த ஒரு நிகழ்வு கண் முன்நிற்கின்றது. படிப்படியாக உன் நெஞ்சில் ஏற்பட்டுவந்த தீவிரப் போராட்ட வழிமுறை மீதான பற்றை அன்றும் வெளிப்படுத்தினாய்.

"அண்ணன், இளங்கோ அடிகள் ஓர் அன்பான துறவி என்றும் சொன்னீர்கள். தமிழனை வடபுலத்தார் பழித்தபோது செங்குட்டுவன் மானம் காக்க போர்தொடுத்து கனகவிசயர் தலையில் கல் ஏற்றிய கதையை இளங்கோ அடிகள் வீரம் பொங்கப் பாடினார் என்றும் சொன்னீர்கள். ஓர் அன்பான துறவிக்குக்கூட நாட்டின் மானம் என்று வரும்போது போரும் ஆயுதங்களும் எப்படி உணர்ச்சி ஊட்டுகின்றன பார்த்தீர்களா?" என்கிறார்.

"அதனால் என்ன?" உன்னைப் பார்த்துக் கேட்கிறேன். "இல்லை நாம் நாம்தான் அகிம்சையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறோமே. செங்குட்டுவன் தமிழனைப் பழித்தவனை ஆயுதம் ஏந்தி அடக்கினான் நாம் தமிழனை அழித்தவனைக் கூட அன்பால் வெல்லலாம் என்றல்லவா நினைக்கிறோம்? சிரிக்கிறேன்.

1965 இல் பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடங்கிற்று. காசநோய் ஊசிமருந்து என் உடலில் ஒவ்வொரு நாளும் பாய்ந்துகொண்டிருந்த காலம் தேர்தல் பணிகளில் நீயும் நானும் தம்பி சுதர்சனும் தீவிரமாக ஈடுபட்டோம்.

பண்டாரநாயக்கா அம்மையாரின் அடக்குமுறைக்கு தமிழினம் பணிந்துவிடவில்லை என்பதை எடுத்துக்காட்ட தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழரசுக் கட்சியை வெற்றிபெறச் செய்யவேண்டிய கடமை நமக்கிருந்தது.

உன்னுடைய அந்தத் தேர்தல் காலப் பணியை எண்ணிப் பார்க்கிறேன். இளைஞன் ஒருவன் இருபது வயதில் எப்படி இருப்பான்? உடலை அழகாக வைத்துக்கொள்வதும் இளம் பெண்களுக்கு முன்னால் பளபளப்பாக உலா வருவதும் அவன் இளமை உணர்வின் இயல்புகளாக இருக்கும்.

உன் அழுக்குப் படிந்த சட்

## கவிஞர் காசியானந்தன்

டையைப் பார்த்து அம்மா உன்னைக் கடிந்துகொண்ட நாட்கள் உண்டு. பற்



றைக்காடாய் தலைமயிர் வளர்ந்து பாதி முகத்தை மறைத்திருக்கும். காய்ந்த உடல் ஆனால் என்றைக்கும் உன் முகத்தில் ஒரு வெளிச்சம் இருந்தது. வறண்ட உடலிலும் வலிமை குன்றவில்லை. உன்னைப் பார்த்தவர்கள் உன்னோடு பழகியவர்கள் உன் பக்கம் இருந்து பணியாற்றவே விரும்பினார்கள்.

இளைஞர்களை இழுத்தாய் சுவரொட்டிகளை ஒட்டுவது, துண்டறிக்கை வெளியிடுவது, வீடு வீடாகக் கொள்கை பரப்புவது, கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது, தொண்டர்களுக்குச் சோறு போடுவது என்று நீ சுழன்றதை நாடு கண்டது.

மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் மன்னார் உடுப்பிட்டி ஆகிய தொகுகளிலும் நான் மக்களைச் சந்தித்தேன் தேர்தல் சூடாகவே இருந்த து, தமிழரசுக்கட்சி பெரு வெற்றி கண்ட இத்தேர்தலின் முடிவில் வீட்டு அறையில் உட்கார்ந்து கவிதை எழுதிக் கொண்டிக்கிறேன். திடீரென்று என்னைத் தள்ளிவிடுவது போல் ஒரு முட்டு இருமல்.

குருதியின் கொந்தளிப்பு அரை உயிராக கொடிய காச நோயாளனாக மட்டுநகர் மருத்துவமனையில் அம்மா என்னைச் சேர்க்கிறாள். தம்பி ஜெயம் மட்டுநகர் மருத்துவமனை காச நோயாளர் விடுதியை நெஞ்சம் மறப்பதில்லை. இரண்டரை ஆண்டுகள் நான் தங்கியிருந்த இடம் எலும்புக் கூடுகளின் குடியிருப்பு.

மருத்துவமனையின் பின்புற ஒதுக்கில் மரணத்துக்குப் பக்கத்தில் ஒரு தங்குமடம் போல அந்த நீள மண்டபம் 'லொக் லொக்' என்ற இருமல் வெடிப்புகள் மனித நுரை ஈரல்களை உடைத்துக்கொண்டு குருதி கொப்பளிக்கும்.

ஒவ்வொரு நாளும் அங்கே நீ ஓடிவருவாய். என்னைப் பார்க்கவும் என்னோடு பழகவும் அஞ்சி உலகம் எட்டி இருந்த நாட்களில் அந்தத் தொற்றுநோயாளர் விடுதியில் என் கட்டிலிலேயே பக்கத்தில் ஒட்டி இருப்பாய் "உன் உடலுக்குக் கூடாது, இங்கே வராதே.." என்று சொன்னாள் உன் உதடுகள் சிரிக்கும். மரணம் என்னைச் சாப்பிட மணிபார்த்துக் கொண்டு இருந்தநேரம் இது.

அன்று நீதானே தம்பி எனக்கு உயிரளித்தாய், உன்னால் நான் மீண்டும் எழுந்து உட்காந்தேன் "அண்ணன் காசம் இன்று மாற்றமு டியாத நோயல்ல. புதிய மருந்துகள் உண்டு. ஓய்வு எடுப்பதாக நினைத்துக்கொண்டு அமையதியாக இருங்கள் உடல் நலமாய் விடும்" என்பாய் நினைத்துப் பார்க்கின்றேன்.

"இது கவிதையெழுத வாய்ப்பான காலம் வசதியான இடம் இங்கு ஒரு காவியமே படைக்கலாம்" நீ இயங்க முடியாத சுருண்டு சோர்ந்து கிடந்த என் நெஞ்சியில் இலக்கியம் பிழிந்தாய். உன்னால் - நீ ஊட்டிய ஆர்வத்தால் காசநோயாளர் விடுதியில் இருந்த என்னால் என் பேனாவால் படைக்கப்பட்டதுதான் " தமிழன் கனவு" குறும் காவியம். என்னைப்பாட வைத்தது மட்டுமல்ல, என் கவிதைகளை நீதான் பாதுகாத்தாய். இந்தக் குயிலுக்கு முட்டைகளை இடமட்டுமே தெரிந்து இருந்தது.

காக்கையாய் அடைகாத்து நீதானே என்கவிதைகளைப் பறக்கவிட்டாய். நம் வீட்டில் படைவெறியர்களும் - பொலிசாரும், கொடிய புலனாய்வு வாளர்களும் பாய்ந்த போதெல்லாம் என்கவிதைகளே அந்த முரடர்கள் அள்ளிக்கொண்டுபோக நான் அழுத நாட்கள் உண்டு.

நீ சிங்கள வெறியர்கள் கொண்டு சென்ற கவிதைகள் போக எஞ்சியவற்றை மண்ணில் புதைத்தும் மறைத்து காப்பாற்றி உலகில் அவை சிறகுகொண்டு பறக்கசெய்தாய். அந்த நாட்களில் மட்டுநகர் காசநோயாளர் விடுதியின் பின்புற அடுக்குப் படிகளில் உட்கார்ந்து மாலைவேளைகளில் நாம் காலம் மறந்துபேசிக் கொண்டு இருப்போம்.

கி.மு 500 அளவில் விஜயன் வங்கத்தில் இருந்து வருவதற்கு முன்பு இலங்கை தமிழர் மண்ணாக இருந்த உண்மையை விஜயன் இலங்கைக்கு வந்தது 1000ம் ஆண்டுகளுக்கு பின்பு ஏற்பட்ட சிங்களமொழி, சிங்கள இனம் ஆகியவற்றின் தோற்றத்தை சிங்கள அரசுகளும் ஆட்சிப் பீடத்தைப் ஆட்டிப் படைத்த புத்த துறவிகளும் பின்னால் தமிழீழனத்தை இலங்கையில் இருந்து பூண்டோடு அழிக்கச்செய்த சூழ்ச்சியை இலங்கையின் பெரும் பகுதியை இழந்த தமிழீழனம் போத்துக்கீசர் வரும் வரை தமிழீழத்தை மட்டும் பறிகொடுக்காமல் தனிக்கொடி கொண்டு ஆண்ட பெருமையை' 1619ல் போர்த்துக்கீசரை எதிர்த்த தமிழ்மன்னன் சங்கிலியனின் வீழ்ச்சியோடு போர்த்துகீசருக்கும் டச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் நாம் அடிமைகளான துன்பத்தை ஆங்கிலேயன் வருகையின் பின்பும் அவனைக் களங்கண்ட பண்டார வன்னியன் வீரத்தை 1948 இல் ஆங்கிலேயன் இலங்கையைவிட்டு வெளியேறியதும் உலகின் மிகப்பெரிய பொய்யான ஜனநாயகத்தின் பெயரால் அடுத்தடுத்து தேர்தல்களில் பெரும்பான்மைப் பலத்தோடு பதவிக்கு வந்த சிங்கள வெறி அரசுகளால் தமிழீழம் கொஞ்சம் கொஞ்சமாய் அழிக்கப்பட்டு வரும் கொடுமையை அலசுவோம்.

# தொண்ணூறு கோடி ரூபாவை ஏப்பமிடும் ஜனாதிபதித் தேர்தல்



நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல் இம்மாதம் 17ம் திகதி, நடைபெற விருக்கின்றது. இந்தத் தேர்தலில் ஒரு கோடியே 33 லட்சம் பேர் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களத் தகவல் கூறுகின்றது. இவற்றில் 70 லட்சத்து 40 ஆயிரம் பேர்கள் பெண்கள் என்றும், இது வாக்காளர்கள் தொகையில் 53 சதவீதமென்றும் அந்தத் தகவலில் இருந்து தெரியவருகின்றது.

நடைபெற்ற தேர்தல்களில் 30 சதவீதமான மக்கள் வாக்களிப்பதில்லை என்றும், தற்போது வெளிநாடுகளில் தொழில் புரிவோர் 15 ஆயிரம் பேர் இருக்கின்றார்கள் என்ற தகவல்களையும் தேர்தல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தேர்தலின் போது 97இலட்சம் பேர்கள் தான் வாக்குகளைப் பயன்படுத்துவார்கள் என்றும், இந்த ஜனாதிபதித் தேர்தலில் 13 பேர் போட்டியிடுகின்றார்கள். இதற்காக தேர்தல் திணைக்களம் 90 கோடி ரூபாவைசெலவு செய்வதற்கு மதிப்பீடு செய்துள்ளது.

முதல் தடவையாக ஒரு தேர்தலுக்கு 90 கோடி ரூபாவை செலவு செய்வதற்கு முன்வந்துள்ளது. இன்று நாடுள்ள பொருளாதார சீர்கேட்டுக்கு மத்தியில் பல்வேறு பிரச்சினைகளையும் உருவாக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது 1,44, 07967 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் விண்ணப்பங்கள் குறிப்பிடக்கூடிய அளவு நிராகரிக்கப்பட்டு ஐந்து லட்சத்து 25.429 பேர்கள் மாத்திரம் தான் தகுதியுள்ளவர்கள் என்று தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது. தேர்தல் திணைக்களத்திற்கு கிடைக்கப்பட்ட விண்ணப்பங்களில் 2,574 நிராகரிக்கப்பட்டுள்ளது. தேர்தலை சுமூகமாக நடத்துவதற்கு தேர்தல் கடமையில் ஈடுபடும் ஊழியர்களுக்கு மாவட்ட மட்டத்தில் தொடர்ச்சியான - பயிர்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

இதேநேரத்தில் தேர்தல்களுக்கு முன்பு, தேர்தலுக்குப் பின்பு ஒரு வார காலத்திற்கு பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடும் படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.குழுவினர் தேர்தல் மாவட்டங்களில் தற்போதுள்ள நிலமைகளை ஆராய்ந்து அது பற்றி உடனுக்குடன் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்து வருகின்றனர்.

தேர்தல் நெருங்க நெருங்க சூடுபிடித்துக் கொண்டு வருகின்றது. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வாழும்தமிழ் மக்கள் அமைதியாக இருக்கின்றார்கள். இதே நேரத்தில் கிழக்கிலங்கையில் வாழும் தமிழ் பேசும் முஸ்லிம்கள் தீவிரமாக ஜனாதிபதி வேட்பாளர் களான பிரதம மந்திரி மகிந்த ராஜபகஷவுக்கும், எதிக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஆதரவு அளிக்கும் கூட்டங்க ளுக்கும்,கைகலப்புக்களுக்கும் , கர்த்தால்களும், வாகன உடைப்புக்க ளும் தாராளமாக நடைபெற்றுக் கொ ண்டு வருகின்றது.இதே நேரத்தில் சித்தாலேப வைத்தியரான விக்டர் ஹொட்டிக்கொட வேட்பாளர் தனது வியாபாரத்துடன் தனது தேர்தல் விஞ்ஞாபனப் பிரசுரங்களையும் விநியோகம் செய்துகொண்டு வருகின்றார் என்பதைக் காணக்கூடிய தாகவிருக்கின்றது.



இந்த ஜனாதிபதித் தேர்தலில் 13 பேர் போட்டியிட்ட போதிலும், இனவாதக் கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிடையில் தான் கடுமையான போட்டி நிலவுகின்றது. ஏனைய 11 வேட்பாளர்களும் வாக்குகளைக் கலைப்பதற்காக போட்டியில் இறங்கியவர்கள். போல் அவர்களில் தேர்தல் செயற்பாடுகளில் இருந்து அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ஓய்வூதியம் பெறும் பத்து ல்ட்சம் குடும்பங்களின் வாக்குகளிலும், வடகிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளிலுமே வெற்றி தங்கியிருக்கின்றது. என்று தேர்தல் தொடர்பான ஆய்வாளர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

வடக்குக்கிழக்கு மாவட்டங் களிலும் தேர்தல் மாவட்டங்களில் அம்பாறை திகாமடுல்ல மாவட்டத்திலே தான் சூடு கடுமையாக ஏற்பட்டிரு க்கின்றது. இந்த மாவட்டத்திலுள்ள சில பகுதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட வேட்பாளர்களின் பிரசாரம் மட்டுமே நடத்தப்படுகின்றது. ஏனைய வேட்பா ளர்களின் பிரச்சார வேலைகளுக்கு தடையாக இருப்பதாக அட்டாளைச் சேனைச் சம்பவமொன்றை உதாரணங்காட்டி பொலிஸ் தகவல்கள் கூறுகின்றது.

**- வி.பி.சிவப்பிரகாசம் -**

# வேகமாகப் பரவி வரும் நீரிழிவு நோய்

நீரிழிவு நோய் இந்தியாவில் வேகமாக பரவிக் கொண்டிருக்கிறது. வருங்காலத்தில் உலகம் முழுவதும் உள்ள சர்க்கரை நோயாளிகளில் ஐந்தில் ஒருவர் இந்தியராக இருப்பர். ஏதோ இனிப்பு பலகாரங்களையும் லட்டு ஜிலோபியையும் ஒதுக்கி வைத்தால் நீரிழிவு நோயில் இருந்து தப்பிவிடலாம் என்று பலரும் நினைப்பது தவறு. முரண்பட்ட வாழ்க்கை முறையும் டென்ஸனான வாழ்க்கையும் ஏராளமான சர்க்கரை நோயாளிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அதனால் நீரிழிவு நோய் இருப்பதை முதலிலே கண்டுபிடித்து விடுவது நல்லது. கண்டுபிடித்து விட்டால் நவீன சிகிச்சைகள் மூலம் அதனைக் குணப்படுத்த வழி இருக்கிறது.நீரிழிவு நோய் வந்தவர்கள் மேலும் சில மோசமான நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள்.70 சத விகிதம் பேருக்கு இதய நோய்கள் ஏற்படுவதற்கு நீரிழிவு நோய் காரணம்.நீரிழிவு நோயால் கிட்னியின் செயல்பாடு பாதிக்கப்படுகிறது. இதனால் நீரிழிவு நோயாளிகளுக்கு டயாலப்ஸ் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.நீரிழிவு நோய் கண் பார்வையை பாதிக்க வைக்கிறது.

ஆண்களின் தாம்பத்ய ஆசையை குறைப்பதிலும் நீரிழிவு நோய்க்கு பங்குண்டு.இதனால் நீரிழிவு நோயை தனி நோயாக பார்க்க வேண்டாம். ஒரு கூட்டணி நோயாகக் கருத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.பரம்பரையாக இருந்தால் தான் நீரிழிவு நோய் ஏற்படும் என்று இளையர்களும், பெரியவர்களும் கருதுவது தவறு. பரம்பரையில் யாருக்கும் இல்லாவிட்டாலும் உங்களை நீரிழிவு நோய் தாக்கலாம். ஏன் என்றால்...

இப்போது பலருக்கும் உடலுழைப்பு இல்லை. உடற்பயிற்சி செய்வதும் இல்லை .வறுத்துப் பொரித்த உணவை ஆதிகம் உண்ணு கிறார்கள்.சர்க்கரையும் கொழுப்பும் நிறைந்த ஹபாஸ்ட்புட், வகைகளை நிறைய சாப்பி டுகிறார்கள்.டென்ஸனான வாழ்க்கை நடத்து கிறார்கள்.போட்டி பொறாமை நிறைந்த குணாதிசயம்.உணவுகளில் சேரும் கலப்படம் ரசாயன உரங்களின் பயன்பாடு.மது மற்றும் போதைப் பொருட்கள் பயன்படுத்துதல்.வைரஸ் கிருமிகளின் பாதிப்பு. இப்படிப்பட்ட பல காரணங்களால் நீரிழிவு நோயாளிகள் உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள்.

முதல்வகை நீரிழிவு நோயாளிகளு க்கு இன்சுலின் செலுத்த வேண்டியது அவசியமாகும். இவர்கள் எதைச் சாப்பிட்டாலும் உடல் தேறாமல் மெலிந்து கொண்டே இருப்பார்கள். எப்போதும் பசியும் தாகமும் இருந்து கொண்டே இருக்கும். இவர்களின் உடலில் இன்சுலின் அளவு மிகக்குறைவாக இருக்கும். அல்லது இல்லாமலே கூட இருக்கலாம். இவர்க ளுக்கு வெளியே இருந்து இன்சுலினை உடலுக்குள் செலுத்த வேண்டும். அப்பா அம்மாவிற்கோ அல்லது நெருக்கமான உறவினர்களுக்கோ நீரிழிவு நோய் இருந்தால் அவர்களின் வாரிசுகள் இந்த வகை நீரிழிவு நோய் வகையால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

இரண்டாவது வகை நீரிழிவு நோய் அதிகமாக நடுத்தர வயதினரைத் தாக்குகிறது. இவர்களில் பலருக்கு அறிகுறியே தெரியாமல் இருந்து விடும்.காயங்கள் ஆறாமல் இருப்பது அல்லது ஆறுவதற்கு தாமதமாவது. கைகால்கள் மரத்துப் போதல், உடம்பெல்லாம் ஒருவித புகைச்சல் தன்மை, உடலில் சொறி ஏற்படுதல், குறிப்பாக செக்ஸ் உறுப்புகளில் சொறி தோன்றுதல்,கண்ணின் பார்வை சக்தி குறைதல், கண்ணாடியின் "பவரை" அடிக்கடி மாற்ற வேண்டியது வருதல்,கண்களின் மேல் பகுதியில் அடிக்கடிபருதோன்றுதல், இத்தகைய அறிகுறிகள் இருந் தால் தாமதிக்காமல் டாக்டரைச் சந்தித்து பரி சோதனை செய்து கொள்ளுங்கள். பரம்பரை யாக நீரிழிவு நோய் இருப்பவர்கள் அறிகுறி யைக் கூட அலட்சியப்படுத்தக்கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் அதிக எடையை கொண்ட குழந்தை யை பிரசவத்தாலும் கவனம் தேவை. ஏன் என்றால் நீரிழிவு நோய் கொண்ட தாய்மார்களுக்குத் தான் அதிக எடை கொண்ட குழந்தைகள் பிறக்கும்.

இரண்டாவது வகை நீரிழிவு நோயாளிக ளுக்கு பல சந்தர்ப்பங்களில் இன்சுலின் தேவைப்படும்.பிரசவ நேரம்.பெரிய ஆபத்துக்களை சந்தித்தல்.நோய்க்கிருமிகளின் தாக்குதல் ஏற்படுதல்.போன்ற நேரங்களில் அவர்களுக்கு இன்சுலின் தேவைப்படும்.சிலர் இன்சுலின் செலுத்த வேண்டும் என்றாலே பயப்படுகிறார்கள். ஒருதடவை இன்சுலின் செலுத்த வேண்டியது வந்தால் தொடர்ந்து ,ன்சுலின் செலுத்தும் கட்டாயம் தோன்றும் என நினை க்கிறார்கள். இது தவறான கருத்து. தேவைப்படும் போது இன்சுலின் செலுத்தி விட்டு பின்பு அவர்கள் மாத்திரைக்கு மாறிக் கொள்ளலாம்.




## விரைவாக விடுதலையை வென்றிடுவோம் !



வீரவன்சவுக்கு,

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவின் சிந்தனைகள் வெறும் மகிந்தவின் சிந்த னைகள் அல்ல.அதன் தொண்நூறு வீதமும் இன வாதம் போர்த்தப்பட்ட சிந்தனை.

பேரினவாதம் தொடர்ந்து செயற்படு த்தி வரும் தமிழ் தேசியத்திற்கு எதிரான நடவ டிக்கைகளின் வெளிப்பாடாக இந்த சிந்தனையை வடித்துள்ளனர் என்றே தமிழினம் கருதுகின்றது.

மகிந்தவை வெல்ல வைக்க வேண்டு மென்பதற்காக உங்கள் கட்சியும் , இனவாத சக்தி களும் அணிதிரள்கின்றன. ரணிலின் வாக்குக்கு ஆப்பு வைக்கும் நடவடிக்கைகளும் நடைபெறுகி ன்றது.

யார் வென்றாலும் தமிழினத்திற்கு எவ்வி த விமோசனமுமில்லை, எனினும் தேர்தலின் பின் னர் நடைமுறையாக விருக்கும் நிகழ்வுகளை ஒரு தடவை நினைத்துப் பார்ப்பது வீரவன்ச குழுவின ருக்கு பொருத்தமாயிருக்கும்.

மகிந்த வென்று விட்டால் , போர் நிறு த்த உடன்படிக்கை மீளாய்வுக்கு ஒரு தரப்பு மட்டும் நினைத்து இதில் திருத்தம் கொண்டுவர முடி யாது. அவ்வாறு அரசுக்குச் சாதகமான விடயங்க ளை உடன்படிக்கையில் மாற்ற முயல்வதற்கு விடுதலைப்புலிகள் விரும்பமாட்டார்கள்.

விளைவு நான்காம் கட்ட ஈழப்போர் மூழ்வது தவிர்க்க முடியாததாகிவிடும். சமாதான முயற்சிகளை முன்னெடுக்காது போரினைத் திணித்தால் சர்வதேச ஆதரவு எந்தளவிற்கு கிடை க்குமென்பது கேள்விக்குறி?

இதேவேளை சமாதான முயற்சிகளை தவிடுபொடியாக்கி விட்டு சண்டையைத் தொட ங்கி விட்டால் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியை மீட்டுவிடமுடியுமா? அல்லது விடுத லைப்புலிகளை அழித்துவிட முடியுமா? முடியாது, முடியாது வீணே தென்னிலங்கை எங்கும் ஒப்பா ரி ஓலங்களுக்கே அது வழிவகுக்கும்.

கண்ணாடிக் கூட்டுக்குள் நின்று பேசு வதாலோ அல்லது கர்ஜிப்பதாலோ அல்லது தென் னிலங்கை மக்களிடையே இனவாதத்தை ஊட்டு வதாலோ இலக்கை அடைந்து விட முடியாது . தமிழ் மக்களின் பலம் தமிழீழ விடுதலைப்புலிகள் தான்! புலிகள் தான் மக்கள்! மக்கள் தான் புலிகள்!

இந்நிலையில் சாதாரணமாக தமிழ் மக்களின் பலத்தை எடைபோட நினைத்தால் அது விபரீதத்தையே ஏற்படுத்தும் எந்த சிங்களத் தலை மைகளும் சமாதான முயற்சிகளை இதய சுத்தி யுடன் முன்னெடுக்க வேண்டும். அது தவறும் பட்சத்தில் பாரிய போரை உருவாக்கும்.

தற்போதுள்ள சூழலில் சமாதானத்தைக் கொண்டு வரும் எவ்வித அணுகுமுறைகளையும் சிங்கள தேசம் கொண்டிருக்கவில்லை.

போர் திணிக்கப்பட்டால் போரை எதிர் கொண்டு முன்னெடுக்க தமிழ் மக்கள் தயா ராகி விட்டனர். அஞ்சி நடுங்கி அடிமைகளாக கை யேந்தி வாழ்வதற்கு இனித் தமிழினம் தயாராக வில்லை. மானமுள்ள தமிழன் மண் டியிடமா ட்டான். வீரம், விவேகம் விடுதலையை வென்று விடும். விரைவாக அப்போது வீரவன்சவின் விதண் டாவாதமும் வீராவேசமும் எங்கே பதில் கூறப் போகின்றது.

இவ்வண்ணம்

ஈழமகன்

# சுய பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்க!

பெண்களை வீட்டின் கண்கள்” என ஆரம்பகாலக் கவிஞர்கள் அடைமொழிப் பெயராக உருவாக்கியுள்ளனர். ஆனால் இன்றைய நோக்கில் பெண்கள் வீட்டின் கண்கள் என்ற வரையறைக்குள் நில்லாது நாட்டின் கண்கள் என்ற அடை மொழியையும் விஞ்சி , இன்று உலகத்தின் கண்கள் எனக் கூறக்கூடிய அளவிற்கு தமது



முன்னேற்றப் பாதைகளை விரிவாக்கியுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

இந்நிலையில் அன்பு, அடக்கம், அகிம்சை, கற்பு, பணிவு, என்ற நன்நடத்தைகளுடன் விளங்கிய பெருமைப்படுத்தப்படவேண்டிய பெண்கள். ஆரம்பத்தில் ஏதோவொரு காரணத்திற்காக அடக்கப்பட்டு, அவர்களுடைய திறமைகள், உத்வேகங்கள் என்பன மழுங்கடிக்கப்பட்ட நிலையில் வளர்ச்சிப் பாதையிலும் மாற்றம் காணமுடியாத துர்ப்பாக்கிய நிலமை ஏற்படக்கூடிய சூழ்நிலைக்கு அவர்களை பழமை வாதம் வழி வகுத்து வைத்திருந்தது.

இவ்வாறான நிலையில் இன்றைய நவீனத்துவ காலத்தில் பெண்கள் நாட்டைக் கூட தனிப்பட்ட முறையில் ஆட்சி செய்யக் கூடிய அளவிற்கு சகல துறைகளிலும் முன்னேற்றம் பெற்ற நிலையில் தமது சாதனைகளைப் புரிந்து சமூகத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் வைத்து போற்றத்தக்கவர்களாக விளங்குவதை கண்கூடாகக் காணமுடிகின்றது.

இவ்வாறான நிலை பொருளாதார வளர்ச்சியில், அல்லது அது தொடர்பான முன்னேற்றகரமான துறைகளில் பெண்கள் பெறும் இடம் அல்லது அவற்றில் பெண்களின் பங்களிப்புக்கள் பற்றி நோக்கும் போது எமது பெண்கள் மேலை நாடுகளில் வதியும் பெண்கள் பொருளாதார முன்னேற்றத்தில் பெறும் இடத்தை விட மிகக் குறைவாகவே உள்ளது.

கூடுதலாக மேற்கத்தேய நாட்டுப் பெண்கள் சுய பொருளாதாரத்தில் முன்னேற்ற நிலையை முழுமையதாக அடைந்துள்ள நிலையில் பல்வேறு தடைகள், காரணமாக எமது நாட்டுப் பெண்கள் அடக்கப்பட்டு, பொருளாதாரத்தில் மேல்நாட்டுப் பெண்கள் முன்னிலையடைந்தளவிற்கு பின்னிலையிலேயே உள்ள நிலமை தோன்றியது.

இவ்வாறு எமது நாட்டுப் பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நோக்கும் போது, கடந்த காலங்களில் போர்ச் சூழ்நிலை காரணமாக பெண்கள் பல வகைகளில் அடக்கப்பட்டனர். அத்தோடு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக் குறைவு காரணமாக பெண்களால் உரிய மூலதனங்களைக் கொண்டு சுய பொருளாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலமை காணப்பட்டது. அத்துடன் கிராமப் புறங்களில் காணப்படும் கல்வியறிவற்ற தன்மை காரணமாக பெண்கள் பொருளாதாரம் பற்றி அறிவற்ற நிலையில் காணப்படுவது போன்ற பல காரணங்களைச் சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறான நிலையிலும், ஆரம்பத்தில் ஆண்களே உழைப்புக்குரியவர்கள். அவர்கள் தான் பணத்தைச் சம்பாதித்து குடும்பப் பொறுப்புக்களை ஈடுசெய்ய வேண்டும் என்ற நிலையில் பெண்கள் பிள்ளைகளையும், குடும்பத்திலுள்ள அனைவரையும் கவனித்து வீட்டினுள்ளே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு காணப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே அநேக கிராமப் புறங்களில் பெண்களின் வாழ்நிலை காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இந் நிலையில் பெண்கள் தங்களுடைய தேவைகளுக்கும், பிள்ளைகளினுடைய தேவைகளுக்கும் தனியொருவராய் உழைக்கும் கணவரின் வருமானத்தின் மூலம் ஈடுசெய்ய வேண்டிய நிலமை ஏற்படும் போது குடும்பத்தில் பொருளாதார சுமை தோன்றி பிரச்சினைகளும் ஏற்படுகின்றது.

இதனால் பெண்கள் இன்னொருவர் கையில் தங்கி வாழவேண்டிய நிலைமையேற்பட்டுள்ளது.

கிராமப் புறங்களில் உள்ள பெண்களை நகர்ப்புறப் பெண்களுடன் ஒப்பிடும் போது சுய பொருளாதாரத்தில் ஊக்கமுடையவர்களாகக் காணப்பட்டாலும் அதனை எவ்வாறு கொண்டு செல்வது, போன்ற அறிவு மட்டம் குறைந்த நிலையிலேயே உள்ளனர். அதற்கான போதிய மூலதன வசதிகளற்ற நிலையிலும் காணப்படுகின்றனர்.

அதேவேளை நகர்ப்புறங்களில் வாழும் சில இளைஞர் , யுவதிகள் படித்து விட்டு எதுவித தொழில் வாய்ப்புக்கள் அற்ற நிலையில், சுய பொருளாதாரம் மூலம் சுயமான ஒரு தொழிலினை செய்யக் கூடிய வசதிகள் இருந்தும் ஏனோ தானோ என எண்ணிக்கொண்டு சுயபொருளாதாரத்தின் மூலந்தாம் தொழில் செய்வதை ஒரு கௌரவக் குறைவான செயலாக எண்ணி இன்னொருவருடைய கையில் தங்கி வேலை தேடி பல ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவு செய்து அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.

பெண்கள் தாம் சுயமாக சுய தொழிலை மேற்கொண்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தமது குடும்பப் பொருளாதார நஷ்டத்தை ஈடு செய்து கொள்வதற்காக அநேகமான அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து அவர்களுக்கான நிதியினையும், வழிகாட்டல்களையும் வழங்கி அதன் மூலம் அவர்களை சுய பொருளாதாரத்தில் ஊக்கப்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் கணவனை இழந்த நிலையில் தமதும், தமது பிள்ளைகளினதும் எதிர்காலம் தெரியாது வாழ்ந்த பெண்கள் சுயதொழில் மூலம் நன்மையடைந்துள்ளனர். அத்துடன் கைத் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்ட நிலையில் தனிமையில் விடப்பட்ட பெண்களும் கல்வி கற்றுவிட்டு எதுவித வேலைவாய்ப்புக்களற்ற நிலையில் இருந்த பெண்களும் தொழில் வாய்ப்புக்களைப் பெற வேண்டிய நிலமை தோன்ற வழியேற்படும்.

இன்றைய நிலையில் போரினால் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டு பொருளாதார வசதியற்றுக் காணப்படும் பெண்களை இனங்கண்டு பல அமைப்புக்கள் அவர்கள் சுய பொருளாதாரத்தின் மூலம் தொழில் பெற்று நன்மையடைய கடனுதவிகளையும் , ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் வழங்கி வருகின்றன.

இவ்வாறான நிலையில் நாட்டில் அதிகரித்து வரும் பொருட்களின் விலைவாசியைக் கருத்திற் கொண்டு கிராம நகர்ப்புறங்களில் இன்னொருவர் கையில் தங்கி வாழும் பெண்கள் கிடைக்கும் மூலதனத்தைக் கொண்டு சுயமாக சில தொழில் நடவடிக்கையை மேற்கொண்டு அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதுடன் குடும்பச் சுமைகளையும் அனைவரும் சமமாக பகிர்ந்து கொள்ளமுடியும். ஒட்டுமொத்த பெண் சமூகம் பொருளாதாரத்தை முன்னேற்றக் கூடிய பங்கைப் பெறமுடியும் என்பதும் திண்ணம்.

**கீர்த்தனா.**

## மகளிர் மகுடம்



### ஒரு மலரின் மனதில் போராட்டம்

வயிறு வலிக்கிறது
என்று நான் சொன்னதும்
என்னைக் கட்டி
அணைத்து முத்தமிட்டபடி

எனை வீட்டு மூலையில்
இருக்கும்படி சொல்லிவிட்டு
பக்கத்து வீட்டுக்கு
மீண்டும் ஓடுகிறாள்
நான் பருவமடைந்த
செய்தியை சொல்லிட
சொந்தமென்று சொல்லிக்கொள்ள
ஏழை எங்களுக்கு யாருமில்லை

வேப்பெண்ணை குப்பி வாங்க
பணமில்லை
நல்லெண்ணையில்
கத்தரிக்காய் முட்டை பொரித்து
சோறு உண்ணவில்லை
பூப்புனித நீராட்டு விழா
எனக்கில்லை
பூ சூட பணமில்லை

பட்டுச் சேலை உடுத்தவில்லை
என் கட்டழகை
கண்ணாடி முன் காட்டவில்லை
ஊர் சனம் கூடவில்லை
தாய் மாமன் எனக்கில்லை
கைகளில் வளையமில்லை
காலில் கொலுசில்லை
குணங்களும் குப்பையாகிப்
போனது.

வழமையாக குளிப்பது போல்
அம்மா தண்ணீரை அள்ளி
அவளின் அன்பு கரங்களால்
ஊற்றும் போது
அவளின் விழியிலிருந்து
வடிந்த.

(தொடரும்)

**சிவலிங்கம் சுமதி,**
**ஏறாவூர் -04.**

## குழந்தைகளும் பொம்மைகளும்

குழந்தைப் பருவத்தில் ஒவ்வொரு குழந்தையும் வாழ்விலும் முக்கிய இடம் வகிப்பது பொம்மை. என்ன தான் விலையுயர்ந்த



தங்க ஆபரணங்களைக் கொடுத்தாலும் அவர்களின் முகம் மலர்வது பொம்மைகளைக் கண் டால் மாத்திரமட்டும் தான்.

ஆனால் பிறந்தது முதல் மாதங்கள் ஆக, ஆக ஒவ்வொரு பருவத்திலும் குழந்தைகள் ஒவ்வொரு விதமான பொம்மைகளை இரசித்து விளையாடி மகிழ்கின்றனர்.

எனவே குழந்தைகளுக்கு அவர்களின் பருவங்களுக்கு ஏற்ற வகையில் எவ்வாறான பொம்மைகளைப் பெற்றோர் வாங்கிக் கொடுத்தல் வேண்டும். என்பதை நாம் நோக்குவோமானால்.

முதல் மூன்று மாதத்திற்கும் உங்கள் குழந்தைக்கு விளையாட பொம்மை எதுவும் தேவையில்லை. இப் பருவத்தில் அவர்கள் விரும்பும் பொம்மைகள் நீங்களாகவே இருப்பீர்கள். அவர்களை விளையாட்டுக் காட்ட நீங்கள் விரும்பினால், குழந்தையைத் தூக்கி மார்வுடன் அணைத்துக் கொண்டு வீட்டைச் சுற்றிக் காட்டுங்கள்.

மூன்று மாதம் முதல் ஆறு மாதம் வரையிலான குழந்தைகள் அவர்களுடைய கை விரல்களையே மிக விரும்பி இரசித்து விளையாடுவார்கள். இவ்வாறான நிலையிலேயே குழந்தைகள் வாயில் விரல் வைக்கவும் ஆரம்பித்து விடுவார்கள். இதில் பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும். குழந்தையின் அருகில் கூர்மையானதும், விழுங்கக் கூடிய பொருட்களையும் வைக்காமல் கவனமாக இருக்க வேண்டும். இந்தப் பருவத்தில் அவர்களுக்கு ஏற்ற விளையாட்டுப் பொருட்களான பிளாஸ்டிக் காலி டப்பாக்கள் மரம் அல்லது பிளாஸ்டிக் ஸ்பூன் காற்றடி க்கப்பட்ட கலர் கலரான பந்துகள் வண்ணப் பொம்மைகள் என்பனவாகும்.


ஓராண்டு வரை குழந்தைகள் தவழ ஆரம்பித்து விடுவார்கள். நின்று பழகவும் ஆரம்பிக்கும். இவ்வாறான பருவத்தில் அவர்களுடைய கை, கால்கள் துருதுருவென்வே இருக்கும் இவ்வாறான பருவக் குழந்தைகளுக்குப் பொருத்தமான விளையாட்டுப் பொம்மைகளாக அமைவன சக்கரம் பொருத்தப்பட்ட பொம்மைகள், அழுத்தினால் ஓசை தரக் கூடிய பொம்மை கள் மெத்து, மெத்தான குஷன் வடிவிலான பொம்மைகள் என்பனவாகும்.

எனவே பெற்றோரே உங்கள் குழந் தைகளின் பருவங்களுக்கு ஏற்ற பொம் மைகளைத் தெரிவு செய்து வாங்கி வைப்பதன் மூலம் குழந்தைகளை பருவத்திற் குத் தகுந்த மனதினை உடையவர்களாக வளர்ப்பதுடன் பொம்மைகளினால் குழந்தைகள் மனதில் ஏற்படும் விபரீத எண்ணங்களையும் மாற்ற முடியும் அல்லவா.

**பிரவாஷினி,**
**தாழங்குடா.**

இவ்வார சிறுகதைகள்

# இதயங்கள் இணையுமா?



அன்று இரவு முழுவதும் குமாரினால் தூங்கவே முடியவில்லை. விடிந்ததும் தனது காதலை எவ்வாறு தன் காதலி நிஷாவிடம் கூறுவது என்பதை நினைக்கும் போது அவனால் எப்படித்தான் தூங்க முடியும். தூக்கமின்றித் தவித்த கண்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில் வெளியே வந்தவன் முற்றத்தில் இருந்து கொண்டு வீதியோர மின் விளக்கைப் பார்த்தபடி மௌனமாக தன் காதலி நிஷாவை நினைத்தபடி கற்பனையில் திளைத்தான்.

அடுத்த நாள் விடிந்ததும் குமார் முகத்தைக் கழுவிக் கொண்டு இறைவனை வணங்கிவிட்டு திண்ணையில் ஒரு கவலையுமின்றி வெறுமனே கிடந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு மீண்டும் நிஷாவின் நினைவினிலேயே இருந்தான். இவ்வாறு இருந்தவனிடம் திடீரென அவனது அம்மா தேனீரைக் கொண்டு நீட்டினாள். திடுக்கிட்டு எழுந்தவன் தேனீரை வாங்கிக் குடித்து விட்டு நேரத்தைப் பார்த்தான். நேரம் எட்டு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது.

குமார் உடனே எழுந்து உடையை மாற்றிக்கொண்டு தனது நண்பன் ராஜாவின் வீட்டிற்குச் சென்றான். அப்போது ''கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல'' ராஜாவும் மற்றைய நண்பன் சந்திரனும் குமாரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்களைக்கண்ட அவன் விடயத்தைக் கூறி நிஷாவிடம் தன் காதலைக் கூறும்படி கேட்கச் சொன்னான். அவர்களும் அதற்குச் சம்மத்தித்தனர்.

இவ்வாறிருக்க நிஷா வகுப்பு முடிந்து தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தாள். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ராஜாவும், சந்திரனும் நிஷாவின் அருகில் சென்று '' நிஷா நாங்க உன்னிடம் ஒரு விடயத்தைக் கூறுவோம். ஆனால் அதனை நீ உங்களது வீட்டில் யாரிடமும் சொல்லக் கூடாது'' என்று கூறினர்.

நிஷா ஆவலுடன் என்ன என்று கேட்டாள். அதற்கு ராஜா நிஷா உன்னை குமார் காதலிக்கின்றான் என்று கூறி முடிக்கும் முன் நிஷா உடனே சிரித்தவளாக அவனுக்கு என்ன பைத்தியமா? நம்ம அப்படியா பழகினம்?

எவ்வளவு சினேகிதமாய்ப் பழகிப்போட்டு இப்படியா கேட்கிறது. ராஜா. அவனுக்குத் தான் அறிவில்லையென்றால் உனக்கும் இல்லையா? நீயாவது அவனுக்கு எடுத்துக் கூறுவதில்லையா? இது தான் நான் இந்த ஊருக்கே வாறதில்லை. இதை நான் வீட்டபோய்ச் சொன்னால் என்ன நடக்கும் என்றே தெரியாது என நிஷா கூறி முடித்தாள்.

உடனே ராஜா செய்வதறியாது மன்னிப்புக் கேட்டு இதை உங்கட வீட்ட யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கூறிவிட்டு குமாரை நோக்கி சென்றான். நிஷா தனது வீட்டை நோக்கி நடந்தாள்.

குமாரிடம் சென்று ராஜாவும், சந்திரனும் நடந்தவற்றைக் கூற அவனுக்கு அவனது தலை வெடிப்பது போல் இருந்தது. அவனது மனம் உருகும் பனிக்கட்டியைப் போல் கொஞ்சங் கொஞ்சமாக உருகியது. கண்களைக் கண்ணீர் மறைக்க மனவேதனையுடன் நண்பர்களுடன் விடைபெற்றுச் செல்லும் வழியே பக்கத்து வீட்டு வானொலியில் ''வாழ்வே மாயம் இந்த வாழ்வே மாயம்'' எனும் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. அப்போது தன் கண்களிலிருந்து ஆறாய்ப் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றான் குமார்.

அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. என்ன நடக்கிறது என்பதனைத் தன்னால் உணரமுடியாமல் திகைத்த வண்ணம் வீட்டுச் சுவரில் சாய்ந்து கொண்டு தனது பழைய ஞாபகங்களை இரை மீட்டான் குமார்.

குமாருக்கு இளமையில் இருந்தே நிஷாவை நன்றாகத் தெரியும். ஆறாம் ஆண்டில் இருந்து சாதாரண தரம் வரை நிஷாவுடனேயே ஒன்றாகக் கல்வி கற்றான். குமார் ஒரு ஏழை மாணவன். ஆனால் நிஷாவோ பணக்கார வீட்டுப் பெண். அத்துடன் அழகானவளும் கூட. இவர்களுடன் தான் ராஜாவும், சந்திரனும் கல்வி கற்றார்கள். அப்போது இருந்தே குமாரும், நிஷாவும் ஒரே கூண்டுக் கிளிபோல அன்பாகவும், பண்பாகவும் பழகி வந்தார்கள்.

எட்டாம் ஆண்டு படிக்கும் போது ஒருநாள் நண்பன் ஒருவன் நகைச்சுவையாக குமாரும் நிஷாவும் காதலிக்கின்றார்கள் என்று கூறினான். இதனைக் கேட்ட சக மாணவர்கள் சிரித்த போது குமார் அழுது விட்டான். அன்று நகைச்சுவையாகக் கூறிய விடயம் பாடசாலை எங்கும் நாளடைவில் பரவி விட்டது. ''ஒரு மந்திரத்தை நூற்றியெட்டு முறை கூறினால் பலிப்பது போல'' நாளடைவில் குமார் நிஷாவைக் காதலிக்கத் தொடங்கினான்.

நிஷாவின் ஒல்லியான தோற்றம் குமாரைக் கவர்ந்தது. குறிப்பாக குமாருக்கு நிஷாவின் கயல்விழிகள் இரண்டும் தான் அவன் இதயத்திலே வேர் ஊன்றியது என்றே கூறலாம்.

அவனது பார்வையில் குறிப்பாக அழகிலும் சரி, அடக்கத்திலும் சரி நிஷாவிற்கு நிகராக அக்கிராமத்தில் யாருமே இருக்கவில்லை.

நிஷாவை குமார் உயிருக்கு உயிராக நேசித்தான். அவன் நிஷாவை காதலி என்றில்லாமல் தாய், தந்தை, மனைவி, சகோதரம் என்றும், எல்லாமே அவள் தான் என்றும் தனது அழகு தேவதை அவள் தான் எனவும் வாழ்ந்தான். ஆனால் இது நிஷாவிற்குத் தெரியாது.

காலம் சென்றது. ஓ.எல் பரீட்சையும் முடிந்தது. பரீட்சை முடிவு வெளிவந்ததும் நிஷா மேற்படிப்பைத் தொடர வெளியூர் சென்று விட்டாள். குமார் தனது கல்வியை அதே பாடசாலையிலேயே கற்றான்.

குமார் ஏ.எல்.வாழ்க்கை முடியும் வரையும் அவளை நினைத்து உருகாத நாட்களே இல்லை. அந் நாட்களில் நிஷாவைக்காண்பதே அரிதாக இருந்தது. ஆனால் அவன் மனம் தளராமல் நிஷா தனக்குத்தான் என்ற எண்ணத்துடன் அவளை நினைத்து கவிதைகள் பலவற்றை வடித்தான். நிஷாவின் பெயரைத் தனது கொப்பியின் முன் அட்டையில் பொறித்தான். இப்படியாக அவன் நிஷாவுடன் வாழ்ந்தான்.

இவ்வாறு சிந்தனையில் இருந்தவன் திடீரென ஆவேசத்துடன் வீட்டினுள் ஓடிப்போய் தமிழ் பாடக் கொப்பியின் முன் தாளைப் புரட்டினான். அதில் '' நிஷா இன்றி நானில்லை என்று எழுதப்பட்டிருந்தது.

அடுத்த தாளைப் புரட்டினான். ''நிஷா நீ என் நான்கு இதய அறைகளிலும் ஆட்சி செய்கிறாய். உன் இதயத்தில் ஓர் அறையிலாவது எனக்கோர் இடம் தா''

எனும் வரிகளைப் பார்த்தவனின் கண்களில் இருந்து கண்ணீர் மாரி மழை பொழிவது போன்று விடாமல் பொழிந்தது. வாயடைத்துப் போய் சிலையாய் நின்றான்.

இவ்வாறு குமார் நிஷாவைக் காதலிப்பதற்கும், பாடக் கொப்பிகளில் எழுதுவதற்கும் ஊன்று கோலாய் இருந்தவர்கள் அவனது சக நண்பர்கள்தான். அவர்களது பேச்சில் தான் அவன் இவ்வளவு தூரம் நிஷாவைக் காதலித்தான்.

உயிருக்குயிராய் நிஷாவைக் காதலித்தபடியால் அவள் இல்லாமல் அவனுக்கு உயிருடன் இருப்பதற்கே பிடிக்கவில்லை.

அன்று பூராகவும் உணவு ஏதும் உண்ணாமல் அன்றைய இரவை சிவராத்திரியாகவே கழித்தான் குமார்.

விடியற்காலை எழுந்தவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக நிஷா வகுப்புக்கு வருவாள் என்பதனை எதிர்பார்த்துக் கொண்டு இலவு காத்த கிளியைப் போல வீதியிலே பைத்தியகாரனாக நின்றான் குமார்.

நிஷா வந்தாள். அவளைக் கண்ட குமாருக்கு சத்தம் போட்டு அழவேண்டும் போல இருந்தது. மனதைத் தேற்றியவனாக நிஷாவின் அருகில் சென்று நிஷா என்னை மன்னித்துக் கொள் என்றான். பதிலுக்கு அவளும் சிரித்தபடி மன்னித்ததாகக் கூறிச் சென்றாள்.

அப்பொழுது வானொலியில் '' இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன் '' எனும் பாடல் ஒலித்தது. பாவம் குமார் அவனுக்கு ஒரு மனம் தான் உண்டு. அதையும் நிஷாவிடம் கொடுத்து விட்டான்.

அவனால் தனது ஆறு வருட காதலை எவ்வாறு மறக்க முடியும்? இப்பொழுதும் அவன் நினைவின் நினைவில் உருகும் மெழுகு திரியாக அவனது மரணநாளை எண்ணிக் கொண்டு காத்திருக்கின்றான் குமார்.

-ரோசான், தேற்றத்தீவு-

# நம்பிக்கை கொள்ள இயலாத தேர்தல்





சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கும் குறைவான கால அவகாசமே இருக்கின்றது. தேர்தல் பிரசாரங்களைப் போட்டியிடும் வேட்பாளர்கள் மேற்கொள்வதற்கு அதைவிடக் குறைவான நாள்களே அவகாசமாகவுள்ளன.

இந்த நிலையில் கடைசி நேரத்தில் தீர்மானமெடுத்து வாக்களிக்கவிருக்கும் வாக்காளர்களை இலக்குவைத்து தென்னிலங்கையில் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்திருக்கின்றது.

பதின்மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களில் ரணிலா? மகிந்தவா? என்ற தெரிவுகள் எப்போதோ மேலோங்கிவிட்டன. சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தொடரும் இந்த அரசியல் பாரம் பரியத்தில் மாற்றமே இல்லை. இருவரில் எவர் ஜனாதிபதியாக வேண்டும் என்பதற்கு, செய்யவேண்டிய கடைசிப் பிரயத்தனங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டன.

இன்றைய நிலையில் இரு வேட்பாளர்களும் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனங்கள் காலாவதியாகிவிட்டன போலவே தோன்றுகின்றது. இரண்டும் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு விரோதமான கொள்கை களையே வெவ்வேறு சுவை பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு போர்த்திருக்கின்றன. ஆனால், வெளிப்படையாக ஒன்று சமாதானத்தையும் மற்றையது யுத்தத்தையும் இனவாதத்தையும் வெளிப்படுத்துவன போலவிருந்தன.

இந்தத் தொனிப்பு பொதுவாக சிங்கள மக்களிடையேயும் சிறுபான்மை மக்களிடையேயும் எதிரெதிரான கருத்துக்களுக்கு இடமளிக்கவே செய்தது.

இனவாதத்தையும் ஒற்றையாட்சி என்ற போருக்காகக் கெடுகுறியையும் வெளி ப்படையாக பிரகடனம் செய்த மகிந்தவின் விஞ்ஞாபனம் எவ்வளவுக்கு சிறுபான்மை இனங்களால் ஏற்கப்பட முடியாததாக இருந்ததோ, அதேயளவுக்கு சிங்கள மக்களிடையேயும் எதிர்வினைகளை உருவாக்கியே இருக்கின்றது.

குறிப்பாக நேரடியாகப் போருக்கு முகம் கொடுத்த சிங்களப் படையினர் மத்தியிலும் அவர்களின் பெற்றோர், உறவினர்களான ஏழைக் கிராமவாசிகள் மத்தியிலும் மகிந்தவுக்கு ஆரோக்கியமற்ற சூழலையே தோற்றுவித்தது.

பொதுவில் விஞ்ஞாபனங்கள் முழுமையும் நிறைவேற்றமுடியாத, வெற்றியை நோக்காகக் கொண்ட அரசியல் தந்திரோபாயமே என்ற போதிலும் மகிந்த அதில் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்க நேர்ந்தது.

இதனால் யுத்தத்துக்கு எதிரான சிங்களவர்களை இலக்கு வைத்து, பிரபாகரனோடு நேரடியாகப் பேசப்போவதாகவும் யுத்தம் மீண்டும் மூழாதென்றும் புரிந்துணர்வு உடன்பாடு மீளாய்வு செய்யப்படும் என்றும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற வார்த்தைகளால் அடிக்கத் தொடங்கினார்.

இதன் உச்சக் கட்டமாக களத்தில் போருக்கு முகம் கொடுக்கவுள்ள படையினரையும் நேரில் சென்று சந்திக்க தனது நிகழ்ச்சி நிரலில் ஏற்பாடு செய்து கொண்டார். (இந்த இரகசியத்தை அறிந்து கொண்ட ரணில் முற்கூட்டியே யாழ்ப்பாணத்தின் படைநிலைகளுக்கு விஜயம் மேற்கொண்டார் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.)

இதே சமயத்தில் சகல மக்களையும் இலக்காகக் கொண்டு மிகப்பெரும் அசாத்தியத்தைக் கொண்ட வரவு செலவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றது.

இதில் பெரும் பான்மையும் இலங்கைத்தீவின் பொருளாதார நிலையில் நடைமுறைக்கு ஒவ்வாதவையே உள்ளடங்கியிருப்பதாக கடும் விமர்சனங்கள் உண்டு. ஆனால், இன்னும் அதனை நம்புவதற்கு இருக்கும் ஒரு மக்கள் திரள் ஏமாற்றப்படுவதற்கும் அதன் வழியாக வாக்குகளைப் பெறுவதற்கும் மகிந்தவுக்கு பயன்படப் போகின்றது.

மகிந்தவின் போக்கு இவ்வாறென்றால் ரணில் இதற்கு எதிரான நிலைப் பாட்டை எடுக்கத் தொடங்கியிருக்கின்றார். மகிந்தவும் அவரது கூட்டணியும் ரணிலை புலிகளுக்குச் சார்பானவராகவும் புலிகள் தனி ஈழத்துக்கான உடன்பாட்டோடு ரணிலுக்கு தேர்தலில் பங்களிக்கின்றார்கள் என்றும் பச்சை இனவாதத்தை அவிழ்த்து விட்டனர். ஆரம்பத்தில் இது ஏற்கனவே தீர்மானகரமானதாக இருக்கும் இருவருக்குமான வாக்குகளின் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை என்று அவர் கருதினார்.

ஆனால், இரண்டு வேட்பாளர்களினதும் சுயம் குறித்தும் தமிழ் மக்கள் தெளிவாகவே இருந்த நிலையில் இந்த நிலைப்பாடு எந்த வேட்பாளர்களையும் ஆதரிப்பதில்லை தேர்தலை பகிஷ்கரிப்பது என்று முடிவானபோது ரணிலும் மாறத் தொடங்கிவிட்டார்.

சிறிலங்காவின் படைகளை நவீனமயப்படுத்துதல் என்று அவர் ஆரம்பித்து வைக்க இப்போது பச்சையாகவே விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை கூடியளவில் கடந்த காலத்தில் மேற்கொண்டது ரணிலே என்று அவரது ஆதரவாளர்களும் கட்சியினரும் சிங்கள மக்களுக்குக் காட்ட முற்படுகின்றனர்.

2002இல் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்பாடு முதல் அதனை அடிப்படையாகக் கொண்ட சமாதானப் பேச்சுக்கள் வரை அனைத்தும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக ரணில் பின்னிய வலையே என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் நவீன் திசநாயக்க கூறியிருக்கின்றார்.

கருணா குழு என்ற ஒன்றை உருவாக்குவதில் வெற்றி கண்ட ரணில், மீண்டும் யுத்தம் மூண்டால் இந்திய அமெரிக்க படைகளைக் கொண்டு விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் திட்டத்தை வைத்திருபபதாகவும் அதற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு விட்டன என்றும் முழங்கியிருக்கின்றார்.

இது நிச்சயமாக தமிழ் மக்களை கருத்தில் கொண்டு அவர்களது வாக்குகளை பெறுவதற்காகப் பேசப்பட்ட பேச்சு அல்ல. முழுமையும் சிங்கள மக்கள் செறிந்து வாழும் தென்னிலங்கை நகரொன்றில் தான் இது பேசப்பட்டிருக்கின்றது.

இனவாதிகளின் பக்கமாக நிற்கும் வாக்காளர்களின் வாக்குகளை ரணிலை நோக்கி திருப்புவதே இதன் நோக்கமாகும். நவீன் திசநாயக்காவின் பேச்சு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் எழுந்த மானமாக பேசியது என்று கொள்ள முடியாதளவுக்குத் தான் நிலை மைகள் இரு க்கின்றன.

சாத்தியப்பாடுகள், விலகுதல் என்பவற்றுக்கு அப்பால் மலையக மக்கள் முன்னணி இதற்கு கண்டனம் தெரிவித்து ரணிலை விளக்கமளிக்க வேண்டும் எனக் கேட்டிருக்கின்றது.

அதற்குள் நவீன் திசநாயக்க தான் அப்படி பேசவில்லை என்று தமிழ் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார். இவை இப்போது கண் துடைப்பு நடவடிக்கைகளே.

இரு தேர்தல் வேட்பாளர்களும் தென்னிலங்கையின் அரசியலை நிர்ணயிப்பவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு வார்த்தையிலும் பிரசார மேடைகளில் இன்னொரு வார்த்தையிலும் இனவாதத்தையும் மலினமான அரசியலையும் தான் முன்வைக்கின்றார்கள்.

> **"பதின்மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களில் ரணிலா? மகிந்தவா? என்ற தெரிவுகள் எப்போதோ மேலோங்கிவிட்டன. சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தொடரும் இந்த அரசியல் பாரம் பரியத்தில் மாற்றமே இல்லை. இருவரில் எவர் ஜனாதிபதியாக வேண்டும் என்பதற்கு, செய்யவேண்டிய கடைசிப் பிரயத்தனங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டன."**

**ஞாபகன்**

இது வெவ்வேறு விதமாக நேரெதிரானதமிழ் மக்களுக்கு உரிமை உண்டு. தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கிடையாது என்ற வாதங்கள் இடத்துக்கு ஏற்றவாறு தமிழ், சிங்கள மக்களிடையே முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், அடிப்படையில் அவை சிங்களத் தேசியம் என்ற ஒற்றையாட்சி மனோபாவத்தின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளன. இந்நிலையில் இத்தேர்தல் மூலமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வருபவர் தமிழ் மக்களுக்கு விமோசனம் தருவார் என்று நம்பிக்கை துளியளவும் கொள்ள இயலாது.

## யப்பான் நாடு முழுவதும் பூகம்ப எச்சரிக்கைக் கருவி!

பூகம்ப எச்சரிக்கைக் கருவியை அடுத்த ஆண்டுக்குள் நாடு முழுவதும் நிறுவ ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

பூகம்பம் ஏற்படும் 15 வினாடிகளுக்கு முன்னதாக அபாய எச்சரிக்கை விடுக்கும் இந்தக் கருவியின் மூலம் பெரும் இழப்புகள் தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகிலேயே பூகம்பம் அதிகம் ஏற்படக் கூடிய பகுதி ஜப்பான். ரிக்டர் அளவில் ஏழு புள்ளிகளைத் தாண்டிய பேரழிவு பூகம்பங்கள் ஏராளமாக இங்கு ஏற்பட்டு வருகின்றன.

உலகில் ஆறு புள்ளிகளுக்கு மேல் பதிவாகும் பூகம்பங்களில் 20 சதவீதம் ஜப்பானில் நிகழ்கிறது.

கடந்த 1995ல் ஜப்பானின் கோப் நகரத்தில் ஏற்பட்ட பூகம்பம் தான் இதுவரை ஏற்பட்ட பூகம்பத்திலேயே மிகவும் மோசமானதாகக் கருதப்படுகிறது. ரிக்டர் அளவில் 7. 3 என பதிவான இந்த பூகம்பத்தில் ஆறாயிரத்து 400க்கும் அதிகமானோர் பலியாயினர்.

கடந்த 2004ல் ஜப்பானின் வடக்கு பகுதியில் ஏற்பட்ட 6. 8 ரிக்டர் அளவு பூகம்பத்தில் 40 பேர் இறந்தனர். மூவாயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இது போன்ற பேரிழப்புக்களை உண்டாக்கும். பூகம்பம் ஏற்படும் முன்பாக அதைக் கண்டுபிடித்து சொல்லும் கருவியை தயாரிக்க நிபுணர்கள் திட்டமிட்டிருந்தனர். அதன்படி, புதிய கருவி ஒன்றை விஞ்ஞானிகள் உருவாக்கினர். நிலஅதிர்வுகள் ஒரு பகுதியை வந்தடைவதற்கு 15 வினாடிகள் முன்னதாக இந்தக் கருவி மூலம் அபாய எச்சரிக்கை ஒலி எழுப்பப்படும். ரயில்கள், காஸ் நிறுவனங்கள் உள்ளிட்ட பெரும் சேதம் ஏற்படக்கூடிய இடங்களுக்கு எச்சரிக்கை அனுப்பப்படும். சில மணித் துளிகளே கிடைத்தாலும், கூடிய வரையில் மக்கள் தங்களை தற்காத்துக்கொள்ள முடியும்.

சோதனை முறையாக கடந்த பெப்ரவரியில் இந்த கருவி ஜப்பான், மியாகி பகுதியில் பொருத்தப்பட்டது.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# சிறுவர் நாதம்

# புத்தியுள்ள நீதிபதி


ஓர் ஊரில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவரது, அறிவுத் திறனும், புத்திக் கூர்மையும் நாலா பக்கமும் பரவியிருந்தன. அதனால் அவரை எல்லோரும் புகழ்ந்து பாராட்டி வந்தனர்.

ஒருநாள் அவரது நீதிமன்றத்திற்கு இரண்டு பெண்கள் வந்தனர். அவர்களது பெயர் சந்திரா, மீரா. சந்திராவின் கையில் ஒரு குழந்தை இருந்தது. முதலில் மீரா, நீதிபதியிடம், “ஐயா சந்திராவின் கையில் உள்ள குழந்தை என்னுடையது.

இன்று காலையில் அக்குழந்தையை அவள் என்னிடமிருந்து கொஞ்சி விளையாட வாங்கினாள். இப்பொழுது குழந்தையைத் திரும்ப என்னிடம் கொடுக்க மறுக்கின்றாள். தாங்கள் தான் என் குழந்தையை எனக்குக் கிடைக்க உதவ வேண்டும்” என்று கூறினாள். இது கேட்ட நீதிபதி சந்திராவைப் பார்த்து, “மீரா கூறும் குற்றத்திற்கு உன் பதில் என்ன? ஏன் அவளது குழந்தையை அவளிடம் திரும்பத் தர மறுக்கின்றாய்?” என்று கேட்டார்.

“நீதிபதியவர்களே! மீரா சொல்வது முழுவதும் பொய். இது என்னுடைய குழந்தைதான். அவளுக்குக் குழந்தை இல்லாததால் என் குழந்தையை அபகரிக்க நினைக்கின்றாள்.” என்று சந்திரா கூறினாள்.

நீதிபதிக்கு இது ஒரு சங்கடமான நிலையை ஏற்படுத்தியது. வெகு நேரம் யோசித்தார். பிறகு சந்திராவைப் பார்த்து, “நீங்கள் இருவரும் கூறுவதிலுள்ள உண்மையை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் இக் குழந்தையைச் சமமாக இருபாகங்களாக வெட்டுவோம். ஒன்றை நீயும், மற்றொன்றை மீராவும் எடுத்துக் கொள்ளுங்கள்” என்று கூறினார்.



இது கேட்ட சந்திரா பதில் எதுவும் கூறாமல், பேசாமல் இருந்தாள். ஆனால் மீராவோ அலறிப் அடித்து அழுது கொண்டே நீதிபதியிடம், “ஐயா? எனக்குக் குழந்தை வேண்டாம். அதை இரண்டு துண்டுகளாக வெட்ட வேண்டாம். குழந்தை சந்திராவிடமே இருக்கட்டும்” என்று கூறினாள்.

இது கேட்ட நீதிபதிக்கு உடனே உண்மை விளங்கிற்று. குழந்தையின் மேலுள்ள தாய்ப்பாசத்தால் மீரா குழந்தையை வெட்டச் சம்மதிக்கவில்லை. ஆனால் சந்திராவோ குழந்தை அவளுடையது அல்லாததால், வருத்தம் எதுவும் இல்லாமல் பேசாமல் இருக்கின்றாள் என்பதை உணர்ந்து கொண்ட நீதிபதி, உடனே சந்திராவிடம், “நீ கூறுவது முழுவதும் பொய். குழந்தை உன்னுடையதல்ல, மீராவினுடையதுதான். அதை அவளிடம் உடனே திரும்பக் கொடு” என்று உத்தரவிட்டார்.

சந்திராவுக்குத் தகுந்த தண்டனையைக் கொடுத்தார். தனது குழந்தையைத் திரும்பப் பெற்ற மீரா மகிழ்ச்சியுடன், நீதிபதிக்கு நன்றி கூறி விடை பெற்றுச் சென்றாள்.




# பொது அறிவு

01.முதன் முதலாக அஞ்சலட்டையை அறிமுகப்படுத்திய நாடு எது?
**அவுஸ்ரேலியா.**

02.உலகிலேயே இரண்டு கண்டங்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் நகரம் எது?
**இஸ்தான்புல் (துருக்கி)**

03.உலகில் எத்தனை நாடுகளின் கொடியில் நட்சத்திரச் சின்னம் இடம் பெற்றுள்ளது?
**42 நாடுகள்.**

04.டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் எவை?
**பெண் நுளம்புகள்:- ஈட்ஸ் ஈஜீப்டஸ் ஈட்ஸ்என்போரிக்டஸ்**

05.உலகின் மிக உயரமான நீர் ஊற்று எங்குள்ளது?
**ஜெனிவா.**

06.உலகிலேயே பெண் எழுத்தாளர்கள் அதிகமாக உள்ள நாடு எது?
**ரஷ்யா.**

07.எல்லைகளால் பிரிக்கப்படாத கண்டங்கள் எவை?
**ஐரோப்பாவும், ஆசியாவும்.**

08.முதலாவது உலகழகிப் போட்டி எத்தனையாம் ஆண்டில் எங்கே நடைபெற்றது?
**1951ல், லண்டனில்.**

09.பெற்றோலியப் பொருட்கள் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு எந்த ஆண்டு நிறுவப்பட்டது?
**1960ம் ஆண்டு.**

10.மனிதனின் முகத்திலும், தலையிலும் எத்தனை எலும்புகள் உள்ளன?
**22 எலும்புகள்.**

11.கண்டம் கடந்து வேறொரு கண்டத்திற்குச் செல்லும் பறவையைப் போல் வேறொரு உயிர் யாது?
**மீன்.**

12.முதன் முதலாக வானொலியில் வர்த்தக ஒலிபரப்பைத் தொடங்கிய நாடு எது?
**அமெரிக்கா 1922ம் ஆண்டு.**

13.தனது ஆயுட் காலத்தில் ஒரே ஒரு தடவை மட்டும் பூப்பூத்துக் காய்க்கும் தாவரம் எது?
**வாழை.**

14.மிகப் பெரிய ஆபிரிக்க நாடு எது?
**சூடான்.**

15.பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்து அல்ஜீரியா எப்போது விடுதலை அடைந்தது?
**1962ம் ஆண்டு.**

*வி.குலதீபா, தரம் - 10,*
*திருப்பழுகாமம்.*








# அறிஞர்களின் வாக்குகளும், அனுபவத்தில் கண்ட உண்மைகளும்

1.கடமையைச் செய்யத் துணிவுள்ளவனாக இரு, அதுவே உண்மை வீரத்தின் சிகரம்.
2.ஊக்கமுடைய மனிதன் தன் கடமைகளைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்பான்.
3.எவ்வளவு முடியுமோ அவ்வளவு சேகரித்துக் கொள், எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு பிறருக்குக் கொடு.
4.நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன் கால்களால் நட, பிறர் முதுகுமேல் ஏறிப்போக விரும்பாதே, அது ஆபத்து.
5.உன் வாழ்க்கையை நீரோட்டம் போல் ஓடிக்கொண்டே இருக்கட்டும், தேக்கமடைய விட்டு விடாதே.
6.இலட்சியத்திற்காக உழைப்பவனை யாராலும் வெல்ல முடியாது.
7.அதிஷ்டம் எப்போதும் சுறுசுறுப்பைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
8.விரும்புவதைப் பெறமுடியாமல் போகலாம்; ஆனால் பெற முடிந்ததை விரும்புவோமாக.
9.நீங்கள் பிறருக்குத் தரும் பரிசுப் பொருள்களை விட மேன்மையானது. நீங்கள் பழகும் விதம்தான்.
10.தன்னுடைய அறியாமையை அறிந்திருப்பதே உண்மையான அறிவுடைமைக்கு அடையாளம்.

*திருமதி.கோ.லிங்கேஸ்வரன்*
*மண்டூர் - 01*




# விடுகதைகள்

1.வெளிச்சத்தில் வாங்கியதை இருட்டில் கொடுப்பான்?
2.வட்ட வட்ட தட்டுக்குள் விட்டதெல்லாம் பாம்புக் குட்டிகள் அது என்ன?
3.அங்கம்மா, தங்கம்மாவுக்கெல்லாம் அங்கங்கே வீடு. முத்தம்மாவுக்கு மட்டும் முதுகிலே வீடு அது என்ன?
4.ஒன்பது பேருக்கு ஒரு குடுமி அது என்ன?
5.குளத்துக்குள் குதித்தவன் கும்மாளம் போடுகின்றான் அவன் யார்?
6.வெள்ளை நிறத்தான், வயிறு பெருத்தான் சிதறி வெடித்தான் அவன் யார்?
7.பூப்போல அடியெடுப்பான் புசுபுசு உடம்புக்காரன் அவன் யார்?

# விடைகள்

1.கமரா
2.இடியப்பம்
3.நத்தை
4.வெள்ளைப்பூண்டு
5.பலகாரம்
6.பஞ்சு
7.பூனை

*கு.சுதநீதன் தரம் - 05*
*மட்.தாழங்குடா ஸ்ரீ வி.வி.*

# மரத்தில் பூக்காத பூக்கள்

- மனிதன் புகழும் பூ - சிறப்பு.
- மலர்ச்சியில் வரும் பூ - சிரிப்பு.
- காலையில் வரும் பூ - விழிப்பு.
- சமையலறையில் உள்ள பூ - அடுப்பு.
- ஒளிதரும் பூ - லாம்பு.
- சுவை தரும் பூ - உப்பு.
- கோபத்தில் வரும் பூ - வெறுப்பு.
- குற்றம் புரிந்தால் வரும் பூ - குறுகுறுப்பு.
- சந்தோசத்தில் வரும் பூ - கிளுகிளுப்பு.
- மற்றவரைக் குறித்து வரும் பூ - கணிப்பு.
- காயங்களில் வரும் பூ - வலிப்பு.
- காரமான பூ - உறைப்பு.
- மனதைக் கவரும் பூ - வனப்பு.
- சோதிடர் எழுதும் பூ - குறிப்பு.
- படகோட்டியிடம் உள்ள பூ - துடுப்பு.
- சிறுவர் செய்யும் பூ - குறும்பு.
- மனிதன் பேணவேண்டிய பூ - மதிப்பு.

*பி.றுக்ஷான்,*
*சிவானந்தா வித்தியாலயம்,*
*தேசிய பாடசாலை.*

# உலகம் புகழ நில்


பள்ளி தினமும் செல்
பாடம் நன்கு கல்
உண்மை தினமும் சொல்
ஊக்கம் மிகவும் கொள்.

இனிய வார்த்தை சொல்
இறைவனை வணங்கக் கல்
உயர்வை நாடிச் செல்
உலகம் புகழ நில்.

*கோ.ருஷாந்தினி, தரம் - 07*
*மட்.தாழங்குடா ஸ்ரீ வி.வி.*

# பழமொழிகள்

- எட்டினால் குடுமியைப் பிடிக்கிறது. எட்டாவிட்டால் காலைப் பிடிக்கிறது.
- உப்புத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்.
- பூ மலர்ந்து கெட்டது. வாய் விரிந்து கெட்டது.
- திருடனுக்குத் தேள் கொட்டினால் போல.
- அடக்கம் ஆயிரம் பொன் தரும்.
- மடியிலே பூனையைக் கட்டிக் கொண்டு சகுனம் பார்க்கிறது போல.
- களவாடத் தெரியாதவன் கந்தையைக் களவாடியது போல.
- வெட்கம் கெட்டாலும் கெடட்டும் தொப்பை இட்டால் போதும்.






# விண்ணிலிருந்து மட்டுமல்ல


உலகப் படத்தை உருப்படியாய் வரைந்து முடிப்பதற்கு மனித குலத்திற்கு எவ்வளவோ காலம் தேவைப்பட்டது. ஆனால் தற்கால தொழிநுட்ப வளர்ச்சி பூமிப்ப ந்தின் சகல பரப்பையும் துல்லியமான காட்சிகளாகத் தருமளவு முன்னேறியுள்ளது.

விண்கோள்கள் இதற்குப் பெரும் துணைபோகின்றன. ஆரம்பத்தில் இக் காட்சிகளை சாதாரணமானவர்கள் பார்ப்பது நினைத்துப் பார்க்க முடியாத விடயமாக இருந்த போதிலும், தற்போது இணைய வசதி உள்ளவர்கள் உலகில் எப்பாகத் தையும் பார்க்கும் வசதி கிடைக்கின்றது. பல நிறுவனங்கள் செய்மதிப் படங்களை விரும்பியவாறு உருப்பெருக்கம் செய்து ஒரு நாட்டின் குறித்த நகரத்து வீதியை ஏன் கட்டிடத்தைக் கூடத் தெளிவாகப் பார்க்கும் வசதிகளை ஏற்படுத்தியுள்ளன.

இது விடயமாக google நிறுவனம் சர்சையில் மாட்டியது நாம் அறிந்ததே. அதாவது இப் படங்கள் எதிரிகளுக்குப் போதிய தகவலை வழங்குமென பல நாடுகள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. (www. Earth.google.com என்ற வெப்தள முகவரியில் இப்படங்களை பார்வையிடலாம். யாழ் கோட்டை திருமலைத் துறைமுகம் கொழும்பு விமான நிலையம் உட்பட இலங்கை பல்வேறு அமைவிடங்களைத் தெளிவாகப்பார்க்க முடிகிறது)

எனினும் இணைய நிறுவனங்கள் இதனைக் கருத்தில் கொள்ளாது, விண்ணிலிருந்து மட்டுமல்ல மண்ணிலிருந்தும் சம நேர படங்களைத் தருகிறோம் பார் என வரிந்து நிற்கின்றன.

இங்கு நீங்கள் பார்ப்பது ஒரு நகரத்தின் வீதியைப் படம் பிடித்து அதனை தனது நிறுவனத்திற்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கும் வாகனத்தையாகும். இவ்வாகனத்தில் 6 கமராக்கள், ஒரு GPS (பூமி நிலைகாண் தொகுதி), ஒரு கணணி என்பன உண்டு. இவை அனுப்பும் படங்கள், குறித்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு அதன் பிரதான கணணியூடாக விண்கோளுக்கு அனுப்பப்பட்டு பின்னர் இணைய பார்வைக்கு வருகின்றன




# புகழ் பெற்ற பொன் வாயில்

அமெரிக்காவின் கட்டிட அமைப்புக்களில் குறிப்பிடத்தக்க பல கட்டுமானங்கள் இன்றும் புகழ்பெற்று விளங்கு கின்றன. இவற்றில் சுதந்திர சிலை, எம்பயஸ்ரேட் கட்டி டம், கேட் வே ஆச் என்பவை குறிப்பிடத்தக்கன. இவ்வ கையில்

பொன்வாயில் பாலம் என அழைக்கப்படும் சான் பிரான்சிஸ்கோ பாலமும் (San Francisscos Golden Gate Bridge) சிறப்புக் கொண்டதாகும்.

இரண்டு மாபெரும் தூண்களால் தாங்கப்படும் இப் பாலத்தின் இரு தூண்களுக்குமான இடைவெளி 1280 மீற்றர்கள். ( இடையில் எதுவித தாங்கு தூண்களும் இல்லை) இப் பாலத்தின் நீளம் 1727 மீற்றர்கள். அகலம் 90 அடிகள் 1933 இல் ஆரம்பித்து பணிகள் நிறைவுற்ற இடைப்பட்ட காலத்தில் 11 தொழிலாளர்கள் தவறி வீழ்ந்து சாவடைந்துள்ளனர்.

இன்னுமொரு சோகமான செய்தி என்னவெனில் இதனிலிருந்து குதித்து தற்கொலை செய்வோரும் உள்ளனர் என்பதே. இதுவரை 1300 பேர் இவ்வாறு தற்கொலை புரிந்துள்ளனர்.




# ஒட்டுக் கேட்கும் மூட்டை

ஒட்டுக் கேட்கும் அல்லது பார்க்கும் பழக்கம் சமுதாயத்தில் வெறுத்து ஒதுக்கத்தக்கதாக இருந்து வருகின்றது. எனினும் படைத்துறை சார் நடவடிக்கை களில் ஒட்டுக் கேட்டல் இன்றியமையாதது என்ற நிலை உள்ளது.


தற்காலத்தில் படைத்துறை அமைப்புக்கள், புலனாய்வு நிறுவனங்கள் ஏன் பாதாள உலகக் கோஸ்டி கள் என ஒட்டுக் கேட்டலில் பல்வேறு தரப்புக்கலும் ஈடுபட்டு வருகின்றன.

தொலைத்தொடர்பு சாதனத்தினூடான எதிரியின் உரையாடலை ஒட்டுக் கேட்பது ஒருவகை. எதிரியின் இடங்களில் அல்லது தற்காலிக தங்குமிடங்களில், வாகன ங்களில் ஒட்டுக் கேட்கும் கருவிகளைப் பொருத்தி ஒட்டுக் கேட்பது ஒரு வகை. இதற்குப் பாவிக்கும் கருவிகள் Bug (முட்டைப்பூச்சு) என அழைக்கப்படுகின்றன. மிகச் சிறிய அளவுகளில் எதிர்பாரா வடிவங்களில் இவை உள்ளன.

இவை படைத்துறை தேவைக்கு மட்டுமன்றி பெரிய வியாபார நிறுவனங்களின் ஒப்பந்த மற்றும் இரகசிய விடயங்களைத் தெரிந்து கொள்ளவும், சில சமயம் தனிப்பட்ட பிரச்சினைகளின் சிக்கலான விடயங்களைப் பதிவு செய்து மிரட்டிப் பணம் பண்ணவும் இவை பயன்ப டுத்தப்படுகின்றன. இக்கருவியை கண்டு பிடிக்கும் கருவிகளும் இப்போது பாவனையில் உள்ளன.

இக் கருவியைக் கண்டு பிடிக்கும் கருவிகளும் இப்போது பாவனையில் உள்ளன. இவை ஒட்டுக்கேட்கும் கருவிகள், இரகசியக் கமராக்கள் என்பவற்றை அவை வெளியிடும் ஒலியலைகளைக் கொண்டு கண்டறிகின்றன. இவை Bag Hunters என அழைக்கப்படுகின்றன. பிரமுகர்கள் தங்கும் அறைகள், அவர்களின் மெய்ப் பாதுகாவலர்கள் இக்கருவியைக் கொண்டு சோதனையிடப்படுகின்றன.





# கேட்பதால் மனிதன் பூரணமடைகிறான்

பேசும் புத்தகங்கள் ஆரம்பத்தில் கண் பார்வை அற்றவர்கள் கேட்பதற்கென உருவாக்கப்பட்டன. அதாவது புத்தகங்களை வாசித்து அதனை ஒலிப்பதிவு செய்து அதனை பார்வையற்றவர்கள் கேட்கும் படி செய்வதே இதன் நோக்கம்.

இவ்வாறான ஒரு அமைப்பு தனது 75வது ஆண்டு நிறைவை இவ்வருடம் கொண்டாடியது. இங்கிலாந்தைச் சேர்ந்த Royal National Institute the Blinds Talking Book Service என்ற நிறுவனமே அதுவாகும். இதுவரை 75 மில்லியன் பேசும் புத்தகங்களை இந் நிறுவனம் வெளியிட்டுள்ளது. தற்போதும் வருடாந்தம் 2 மில்லியன் பேசும் புத்தகங்கள் வெளியிடப்பட்டு வருவதாக அந் நிறுவனத்தினர் கூறுகின்றனர்.

தற்போது பார்வையற்றவர்கள் மட்டுமன்றி ஏனையோரும் இப் புத்தகங்களைப் பெருமளவு வாங்குவதாகத் தெரியவருகின்றது.

# தேர்தல் புறக்கணிப்பு தேவைதானா?



சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் பற்றிய, பரபரப்பு எதுவுமில்லாமல் இருந்த தமிழ் மண்ணிலே தற்போது புதியதோர் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சிங்களத்திலே இரு வேட்பாளர்களுக்குமிடையிலே கடும் போட்டியிருப்பதாகப் பேசப்படுகின்றது. தேர்தல் கூட்டங்களால் மக்களின் வாக்குகளைக் கவருவதற்கு பல்வேறு உத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு எதிர்மாறான நிலையில் தமிழீழ மக்கள் உள்ளனர். அதுதான் வாக்களிக்காமல் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்ற சிந்தனையாகும்.

தமிழ் மக்களுக்கு இந்த தேர்தலால் ஏதாவது நன்மையுண்டா? நன்மைகள் கிடைக்காத தேர்தல் எதற்காக என்ற கேள்விகள் தமிழ் நெஞ்சங்களிலேயே எழுந்துள்ளன? இவ் எண்ணங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே பொது அமைப்புக்கள் தேர்தலைப் புறக்கணிப்போம் என்று அறைகூவல் விடுத்து வருகின்றன. இந்தப் புறக்கணிப்பு நிலைப்பாட்டை தமிழ் மக்கள் எடுத்ததை சிலர் விமர்சிக்கவும் தவறவில்லை. கலாநிதி ஜெகான் பெரேரா இதில் முதன்மையானவராக உள்ளார். டொனமூர் அரசியல் சீர் திருத்தத்தின் மூலம் தொகுதி ரீதியாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட 1931ல் தேர்தலைப் புறக்கணித்ததை அவர் தவறு என்று கூறுகின்றார். அப்போது விட்டது போல் இத் தேர்தலைப் புறக்கணிக்கக் கூடாது என்று கூறி வருகின்றார். அன்று இருந்த அரசியல் நிலை வேறு, இன்றுள்ள அரசியல் நிலை வேறு. அன்றிருந்த அரசியல் தலைவர்கள் தாம் தலைவர்களாக மக்கள் முன் மிளிர வேண்டும் என்ற கவலையை மாத்திரம் கொண்டிருந்தார்கள்.

தாயக விடுதலையை அவர்கள் சிந்தித்திருக்கவில்லை. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளிலேயே சிங்களத் தலைவர்கள் எழுதிய ஒப்பந்தத்தைக் கிழித்த பொழுதும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தமிழ் அரசியல் தலைவர்களின் சிந்தனை இருந்தது. அன்று அவர்கள் சரியாகவும், துணிவுடனும் தமிழ் தாயக விடுதலை பற்றிச் சிந்தித்திருப்பார்களாகயிருந்தால் தமிழினத்துக்கு இவ்வாறு துன்பங்களும், துயரங்களும் ஏற்பட்டிருக்கமாட்டாது. இன்றைய நிலைமை முற்றிலும் மாறுபட்டது. தமிழ்மக்கள் தங்கள் தேசியம் பற்றிச் சிந்திக்கிறார்கள். தங்கள் தாயகம் தேசியம் பற்றிச் சிந்திக்கிறார்கள். தங்கள் தாயகம் பற்றிச் சிந்திக்கிறார்கள்.

இந்நிலையில் இவற்றை ஏற்காத சிங்களத் தலைவர்கள் ஒருவருக்கும் வாக்களிக்கத் தமிழ் மக்கள் தயாராக இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ என்றைக்காவது ஒருநாள் தமிழ் ஒருவரைத் தங்கள் கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ளுமா? இதர சிங்களத் தலைவர்கள் ஒத்துக் கொள்ளுவார்களா? இதர சிங்களக் கட்சிகளாவது இவ்வாறான ஒரு நிலைக்கு வருமா? அவ்வாறு வரமாட்டார்கள் இதுவொரு சிங்கள பௌத்த நாடு. இந்நாட்டை ஆள்வதற்கு சிங்கள பௌத்தத்தைத் தவிர வேறு எவருக்கும் உரிமையில்லை. இந்த நிலையில் இருந்து சிங்களம் என்றைக்குமே மாறப்போவதில்லை. அதாவது முழுத் தீவும் சிங்கள பௌத்தத்துக்கு உரியது என்ற நிலையில் சிங்களத்து கட்சிகள் மிகவும் உறுதியாகவுள்ளன.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்ததில் இரு கட்சிகளும் மிகவும் ஒற்றுமையாக இருந்துள்ளன. ஏதாவது ஒரு கட்டத்திலாவது இது தமிழ் மக்களுக்குச் செய்யும் அநீதி என்று எவராவது குரல் கொடுத்துள்ளார்களா? கிடையவே கிடையாது ஆனால் ஏதாவது சலுகைகளை எவராவது வழங்க முன்வந்தால் அது சிங்கள இனத்தைக் காட்டிக்கொடுப்பதாகவும், சிங்கள இனத்துக்குச் செய்யும் துரோகம் எனவும் இப் பெரிய கட்சிகள் இரண்டும் காலத்துக்குக் காலம் மாறிமாறிக் கூக்குரல் எழுப்பியதே வரலாறாகும். இவர்கள் உருப்படியாக எதனையும் கூறாமல் வெறுமனே சமாதானம் என்று குரல் கொடுப்பதை வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் வாக்களிக்க முடியுமா? வாக்களிப்பதால் ஏதாவது பெறமுடியுமா? என்றால் இல்லை, இல்லை என்பதுவே பதிலாக இருக்கும்.

போட்டியில் உள்ள இருவரில் ஒருவருக்கு வாக்களிக்கலாம். இவர் சமாதானத்தைக் கொண்டு வருவார் என்று இருதரப்பினருக்கும் ஆதரவானவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைக் கூறிவருகின்றனர். இதைத் தமிழ் மக்கள் நம்பவேண்டுமாம். தமிழ் மக்கள் வாக்களித்தால் என்ன? விட்டால் என்ன? ரணில் அல்லது மகிந்த ஜனாதிபதியாவார்கள். இவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றி ஏதாவது உறுதியாகத் தெரிவித்துள்ளார்களா? என்று பார்த்தால் எதுவுமே அவர்கள் கூறவில்லை என்பது வெளியாகும்.

**பரணி**

மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது தனது பாதுகாப்பு அணியுடன் செல்ல முடிவதாகவும் ஆனால் இங்கே உள்ள மடுத்திருப்பதிக்குச் செல்ல அவ்வாறு முடியாதுள்ளதாக ஆனபடியால் இப்பொழுதுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தம் கௌரவமானதல்ல என்றும், தான் கௌரவமான யுத்த நிறுத்தம் ஒன்றைப் புலிகளுடன் செய்து கொள்வாராம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்த ரணில் அதில் குறிப்பிடப்பட்ட எதனையும் நிறைவேற்றாமல் காலத்தைக் கடத்தியதைத் தவிர வேறு எதனையும் செய்வில்லை. பேச்சு வார்த்தை என்பது காலத்தை இழுத்தடிக்கும் கருவியாகவே பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது இருவரும் மக்களை ஏமாற்றி நிறைவேற்று அதிகாரமுடைய பதவிக்காகத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

யுத்தமா? சமாதானமா? என்றுதான் பலரும் கேள்வி எழுப்புகின்றார்கள். தமிழ் மக்கள் யுத்தத்தை வெறுப்பவர்களே. ஆனால் யுத்தம் அவர்கள் மீது திணிக்கப்பட்டது என்பதை மூடி மறைத்துத் தமிழ் மக்களைத் தீவிரவாதிகள், கிளர்ச்சியாளர்கள், பயங்கரவாதிகள் என்ற சிங்களத்துக் கட்சிகள் முத்திரை குத்துவதிலேயே நாட்டம் கொண்டுள்ளன.

தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்பி யுத்த நிறுத்தம் செய்தனர் ஆனால் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட சிங்கள அரசு ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி ஆயுதங்களின்றி அரசியல் பணி புரிந்த விடுதலைப் புலிகளை கொல்வதையிட்டு எந்தச் சிங்களத் தலைவராவது கண்டனமோ, கவலையையோ தெரிவித்துள்ளார்களா?.

சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்த தமிழ் மக்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதால் பாதிப்பு இல்லைதானே என்று கூறுகின்றார்கள். 2004ல் நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள், அவர்களுடன் பேசி தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என்ற ஆணையை தமிழ் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஊடாக தெரிவித்தனர். தற்போதைய தேர்தல் யார் ஜனாதிபதி என்பதைத் தெரிவதற்கான தேர்தலே இது வெற்றி பெறப் போகும் விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும். அதைவிடுத்து அவரது கொள்கை பிரகடனத்திற்கு வாக்களிப்பது 2004ல் அடுத்த தீர்ப்பிற்கு முரணாகவே அமையும்.

அத்துடன் நாடாளுமன்ற தேர்தலை புறக்கணித்ததால் ஏழு, எட்டு வாக்குகளைப் பெற்று இனத்தைவிற்று பிழைப்போர் அங்கே செல்லக்கூடாது என்ற நோக்கமும் அதில் இருந்தது. இப்பொழுது அந்த நிலையில்லை. தமிழ் எழுச்சிப் பிரகடனங்கள் மூலம் இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள் தங்களது கோரிக்கையை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர். இந்த வெளிப்பாட்டை சிங்களத்து ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டியதே சரியாகும். அதற்கு சிங்கள அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது சர்வதேசத்தின் கடமையாகும். இதை விடுத்து ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது முரணான நிலையாகும்.

எனது காணியை என்னிடம் விட்டுவிடு நான் பயன்படுத்தி உணவு உற்பத்தி செய்து எமது வாழ்க்கையை நடத்துகிறேன். என்றவரையை பார்த்து காணி கிடையாது எல்லாம் எமது சொத்து உமக்கு கஞ்சி ஊற்றுகிறேன் குடித்துவிட்டு இரு என்றான் ஒருவன். அவனது சகோதரன் உனக்கு காணி இல்லை நான் கஞ்சி தரவில்லை பழஞ்சோற்றுத் தண்ணீர் தருகின்றேன் குடித்துவிட்டு இரு என்றானாம்.

காணியை பறிகொடுத்தவனின் நிலையிலே தமிழினம் உள்ளது. காணியைப் பறித்த சகோதரர்களாக ரணில், மகிந்த ராஜபக்ஷவும் உள்ளனர். இவ்வாறான நிலையில் தமிழீழத்தைப் பார்த்து வாக்கு கேட்க்கும் துணிவுடன் அவர்கள் வருகிறார்கள் அதுவும் இந்த நவம்பர் திங்களில்.

தமிழீழத்தின் வரலாற்று நிகழ்வுகளைச் சுமந்த சிறப்பான திங்கள். 18000 மாவீரர்களை நினைவாகக் கொள்ளப்போகும் திங்கள். தமிழினத்தை வழிநடத்தி தமிழீழத்தை விடுதலை பெறவைக்கும் தலைவன் பிறந்த திங்கள் சர்வதேசமும் தமிழீழ தேசியத் தலைவர் மாவீரர் உரையில் என்ன சொல்லப் போகின்றார் என்று காத்திருக்கும் திங்கள்.

இந்த நவம்பர் திங்களில் சிறிலங்காவில் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுக்கு அக்கறையில்லை. இத் தேர்தலை புறக்கணிப்பதன் மூலம் தமிழரின் அபிலாசை என்ன என்பதை உலகத்திற்கு காட்டவேண்டிய தமிழ் மக்களின் கடமையாகும்.

தமிழ் மக்கள் உரிமையுடனும், சமாதானத்துடனும் வாழ இதுவே சரியான வழியாகும். தேர்தலைப் புறக்கணிப்போம் விடுதலையை உறுதிப்படுத்து.

# தென்னாபிரிக்காவுக்கு சவாலா? சாதனையா?

"இந்திய அணிக்கு இன்னொரு சவாலைத்தர தயார்" என்கிறார் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித் தலைவர் கிரீம் ஸ்மித்.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் மோத உள்ளது. முதல் போட்டி எதிர் வரும் 16ல் நடக்கிறது. இந்த தொடருக்கான கிரீம் ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்கா அணி எதிர் வரும் 11ல் மும்பை வருகிறது.

குரோனியேவுக்குப் பிறகு தென்னாபிரிக்கா அணியின் செயற்பாடுகள் ஏற்ற, இறக்கத்துடனே இருந்து வருகிறது. கடந்த 2004 வரை இந்த அணி சர்வதேச ஒரு நாள் தரவரிசைப் பட்டியலில் எட்டாவது இடத்தில் இருந்தது.

தொடர்ச்சியாக சந்தித்த 10 தோல்விகளால் சிம்பாப்வே, வங்கதேச அணிகளை மட்டுமே இந்த அணியால் முன்னிலை பெற முடிந்தது.

சம்பியன்ஸ் டிராபி தொடரில் பெற்ற மோசமான தோல்விகளால் அணி பயிற்சியாளர் பதவியில் இருந்து எரிக் சைமன்ஸ் நீக்கப்பட்டார். பின்னர் பொறுப்பேற்ற ரே இன்னிங்சின் ஆட்டமும் சீக்கிரமே முடிவுக்கு வந்தது.

இந்நிலையில் மிக்கி ஆர்தர் பயிற்சியாளராக பொறுப்பேற்றார். ஆர்தர் வருகைக்குப் பிறகு தென்னாபிரிக்க அணி அபார வளர்ச்சி பெற்றது.

இந்த ஆண்டு மட்டும் தென்னாபிரிக்கா வரிசையாக 12 ஒரு நாள் போட்டிகளில் வென்று சாதித்துள்ளது. முன்னதாக, ஆஸி. அணி 19 போட்டிகளில் வென்று முதலிடத்தில் உள்ளது. இந்த அசத்தலான வெற்றிகளால் தென்னாபிரிக்கா தர வரிசைப் பட்டியலில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

இந்த அணியின் வெற்றியை நிர்ணயிப்பவராக திகழ்கிறார் "சகலதுறை ஆட்டக்காரராக" ஜஸ்டின் கெம்ப். இங்கிலாந்துக்கு பீட்டர்சன், இந்தியாவுக்கு தோனி என்று சொன்னால் தென்னாபிரிக்கா அணிக்கு கெம்ப் என்று கூறவேண்டும்.

சமீபத்தில் நடந்து முடந்து நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரை 4-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா வென்றதற்கு இவர் முக்கிய காரணம். இந்த அணி இந்தியாவிலும் சாதிக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் தலைவர் ஸ்மித்.

"தென்னாபிரிக்கா அணி வெற்றிப் பாதையில் பயணிக்கிறது. எங்கள் அணியில் இளம் திறமைசாலிகள் நிறையப் பேர் உள்ளனர். தன்னம்பிக்கையும் அவர்களிடம் மிகுந்து காணப்படுகிறது.

குறைவான போட்டிகளில் பங்கேற்ற அனுபவத்தால் சர்வதேச போட்டிகளில் சாதிக்க அவர்களுக்கு கால தாமதம் ஏற்படுகிறது. போதிய அனுபவம் கிடைக்கும் பட்சத்தில் வீரர்களின் தரம் மேலும் உயரும்.

முன்பைக் காட்டிலும் எனது ஆட்டத்திறன் வளர்ச்சி அடைந்துள்ளது. துடுப்பாட்டம் சராசரியும் உயர்ந்து கொண்டே செல்கிறது. எந்த மைதானத்திலும் என்னால் ஜொலிக்க முடியும். இந்திய அணிக்கு இன்னொரு சவாலை தரத்தயாராகி விட்டோம். கிரிக்கெட்டில் எங்களுக்கு புதிய காலம் தொடங்கி விட்டது.

புதிய சூழ்நிலையில் எங்களின் திறமையை வெளிப்படுத்துவோம். தென்னாபிரிக்கா அணி இந்தியாவில் இதுவரை தொடரை வென்றதில்லை.

இம்முறை இந்த வரலாற்றை மாற்றிக் காட்டுவோம்". தன்னம்பிக்கையுடன் கூறுகிறார் தென்னாபிரிக்கா தலைவர் ஸ்மித். "என் வழி ஹர்பஜன் வழி"

"இப்படி சொல்பவர் நம்ம நாட்டுக்காரர் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. . . ! இந்திய தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் தேர்வாகி உள்ள ஜோகன் போத்தா தான் இப்படி சொல்கிறார்.

"பிசினஸ் டுடே" பத்திரிகைக்கு போத்தா அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளதாவது: இந்திய பயணம் எப்போதுமே சவாலான ஒன்றுதான். முதல் பயணம் என்றால் கேட்கவே வேண்டாம். இந்திய வீரர்களில் ஹர்பஜனை எனக்கு மிகவும் பிடிக்கும்.

எனது ரோல் மாடலே அவர் தான். 2003 உலகக் கிண்ணத்தில் நான் அவரை சந்தித்த போது, எனக்கு சில விடயங்களைக் கற்றுத் தந்தார். அவரது "தூஸ்ரா" முறை பந்து வீச்சு எனக்கு மிகவும் பிடித்த ஒன்று.

"தொலைக்காட்சி"யில் பல முறை அவரது பந்து வீச்சு முறையை ரசித்திருக்கிறேன். தற்போது தூஸ்ரா முறையில் பந்து வீசவும் பழகி விட்டேன். இவ்வாறு தனது பேட்டியில் தெரிவித்துள்ளார் போத்தா.

# விடுதிக்கல் அ.த.க. பாடசாலை மாணவர்களின் கல்விக்கு பெற்றார்களின் பங்களிப்புத் தேவை

பட்டிருப்புக் கல்வி வலயத்தில் படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மட்.விடுதிக்கல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் பௌதீக வளப் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மாணவர்கள் கல்வியில் எதிர்காலத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு அப்பிரதேசப் பெற்றார்கள் கூடிய அக்கறை எடுக்க வேண்டும் எனப் பாடசாலை நிருவாகத்தினர் வலியுறுத்துகின்றனர்.

இது தொடர்பாகப் பாடசாலை நிருவாகத்தினருடன் நேரடியாகச் சென்று கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு வருகின்றோம். அந்தவகையில்:-

**மட்.வீடுதிக்கல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் சு.தேவராஜன் கருத்துத் தெரிவிக்கையில்:-**



எங்கள் பாடசாலை கடந்த 01.02.1997ம் ஆண்டு தற்காலிக ஓலைக் கொட்டில் ஒன்றுடன் 32 மாணவர்களையும், நிரந்தர ஆசிரியராகவும், அதிபராகவும் என்னுடனும் இரண்டு தொண்ட ஆசிரியர்களுடனும் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் ஆரம்பத்தில் பாடசாலை இல்லாது இளம் சமுதாயத்தினரின் கல்வி மழுங்கடிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இதனைக் கருத்திற் கொண்டே கல்வித் திணைக்களத்தின் சிபார்சுக்கமைய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலையில் ஆரம்பத்தில் பல குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் தற்போது ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆனால் பெற்றார்கள் தங்கள் பிள்ளையின் செயற்பாடுகளில் கவனமெடுப்பது குறைவாகவுள்ளது.

இருந்த போதிலும், பெற்றார்கள் பாடசாலையில் சிரமதானம், சரஸ்வதிப் பூசை, விளையாட்டுப் போட்டி போன்றவற்றுக்குப் பூரணமான முறையில் ஒத்துழைப்பு நல்கின்றார்கள்.

தங்கள் கிராமம், பாடசாலை என்ற பற்றுணர்வு அனைவருடைய மனதிலும் உள்ளது என்றே கூறலாம்.

எங்கள் பாடசாலையில் தற்போது தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையுள்ள வகுப்புக்களில் 102 மாணவர்களும், அதிபருடன் ஐந்து நிரந்தர ஆசிரியர்களும் இருக்கின்றார்கள்.

பாடசாலையில் நிலவிய கட்டடப் பற்றாக்குறையினை கல்வித் திணைக்களத்தின் சிபார்சுடன் நெக்கோட் திட்டத்தினர் முன்வந்து இரு கட்டடங்களையும், குடிநீர்க் கிணறு ஒன்றையும் அமைத்துத் தந்துள்ளார்கள்.

அத்தோடு சுற்று வேலியினை அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் என்பவர் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஐம்பதாயிரத்தினை ஒதுக்கித் தந்தார். அதனைக் கொண்டு சுற்று வேலியினையும் அமைத்துள்ளோம்.

அத்தோடு கொக்கட்டிச்சோலைப் பிரதேச சபையினர் ஆசிரியர்களுக்கான மலசலகூடமொன்றையும், குடிநீர்த் தாங்கி ஒன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளார்கள்.

மற்றும் பற்றோ நிறுவனத்தினர் மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், கற்பித்தல் உபகரணங்கள் போன்றவற்றையும் அன்பளிப்புக்களாகப் பாடசாலை மாணவர்களின் நலன் கருதிச் செய்த அனைவருக்கும் பாடசாலை நிருவாகத்தின் சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும் இத்தருணத்தில் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

அதிகஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள எங்கள் பாடசாலை என்ற வகையில் கல்வித் திணைக்களத்தினர் எதைக் கேட்டாலும் செய்து தரக் கூடிய நிலையில் இருக்கின்றார்கள்.

அதிலும் வலயக்கல்விப் பணிப்பாளரும், கோட்டக்கல்விப் பணிப்பாளரும் மிகுந்த அக்கறையோடு இருக்கின்றார்கள். அவர்களின் முயற்சியினால் பாடசாலையின் ஆரம்ப நிலையை விடத் தற்போது மாணவர்களின் கல்வி முன்னேற்றகரமாகக் காணப்படுகின்றது. இதற்குப் பெற்றார்களின் முயற்சியும் இன்றியமையாத ஒன்றாகும் எனக் கூறி நிற்கின்றேன்.

**பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியர் ம.கிருபராசா கருத்துத் தெரிவிக்கையில்:-**



எங்கள் பாடசாலையில் ஆரம்பத்தில் ஒரு நிரந்தர ஆசிரியருடன் இருந்து பின்பு படிப்படியாக ஆசிரியர்கள் தொகையும் அதிகரிக்கப்பட்டு பௌதீக வளப் பற்றாக்குறையும் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது பாடசாலையின் கல்வித் தரம் முன்னேற்றமடைந்துள்ளது.

பாடசாலை ஆரம்பித்த காலத்தில் இவ்வருடம் ஒரு மாணவி தரம் 05ல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இது பிரதேசத்திற்கும், பாடசாலைக்கும் பெருமையைத் தருகின்ற விடயமாகவுள்ளது. இதற்குப் பாடசாலை அதிபர் கூடிய முயற்சி எடுத்தமையாலே இப்பெறு பேற்றைக் கண்டுள்ளோம்.

இப்பிரதேசப் பெற்றார்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் முயற்சி எடுப்பது குறைவு. அதாவது மாணவர்கள் பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களை மீட்பதற்குப் போதியளவு நேரம் பெற்றார் ஒதுக்குவதில்லை.

மாறாகப் பெற்றார் தங்கள் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு தொழிலுக்குச் செல்கின்றனர். அதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றது.

அத்தோடு பாடசாலையில் மாணவர்களுக்குக் கற்பித்தலில் இறுகல் நிலை ஏற்படுகின்ற போது மாணவர் வரவு குறைவடைகின்றது. இதற்குப் பெற்றார் உடந்தையாக இருக்கின்றார்கள்.

இவை காலப் போக்கில் தீர்க்கப்பட வேண்டும். பாடசாலையில் தற்போது சில குறைபாடுகள் காணப்படு கின்றது. அதாவது ஆங்கில ஆசிரியர்கள் இல்லை, விளையாட்டு மைதானமில்லை, சிறுவர் பூங்கா இல்லை, மாணவர்களுக்கான மலசலகூடம் இல்லை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எங்கள் மாணவர்களில் அநேகமானோர் மெய்திறன் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். இவ்வருடம் விளையாட்டுப் போட்டியில் மாவட்ட மட்டம் சென்று பரிசில்களைப் பெற்று வந்துள்ளார்கள்.

அத்தோடு அண்மையில் கொக்கட்டிச்சோலைப் பாடசாலையில் நடைபெற்ற சிறுவர் தின விழாவிலும் எங்கள் மாணவர்கள் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றுள்ளார்கள்.

## கவி

இதனைப் பார்க்கும் போது பாடசாலை மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் ஏனைய போட்டி நிகழ்வுகளிலும் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.

மாணவர்களின் திறமை இவ்வாறு செல்வதற்குக் காரணம் சிரமத்தினைப் பாராது சேவையாற்றும் ஆசிரியர்களின் முயற்சி என்று கூறலாம் இதே போன்று அனைத்துப் பெற்றாரும் தங்கள் பிள்ளையின் கல்வியில் முயற்சி எடுக்க வேண்டும் எனக் கூறி நிற்கின்றேன்.

**பாடசாலையின் ஆரம்பக் கல்வி ஆசிரியை செல்வி வே.ஜேந்தினி கருத்துத் தெரிவிக்கையில்:-**



எங்கள் பாடசாலை ஆரம்பித்த நாளில் இருந்து அதிபராக இருந்து வரும் அதிபர் அவர்கள் பாடசாலையின் அபிவிருத்தியினைக் கருத்திற் கொண்டு பத்துவருட முன்மாதிரித் திட்டம் ஒன்றினை உருவாக்கினார்.



அத்திட்டத்தில் பௌதீக வளம், ஆசிரிய வளம், கற்றல் கற்பித்த செயற்பாடு, பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடு, மாணவர் பரீட்சை வெளியீடு போன்றன தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் பெரும்பாலானவை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு அதிபரின் முயற்சியும், ஆசிரியர்களின் ஒத்துழைப்புமே காரணம் என்று கூறலாம். இதே போன்று பெற்றாரும் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளில் கூடிய கவனமெடுக்க வேண்டும்.

பாடசாலையின் கல்வியோடு மாணவர்கள் இருக்கின்றார்கள். மேலதிகக் கற்பித்தல் எதுவும் இல்லை. இதனால் கல்வியில் மாணவர்கள் பின்னடைவினை எதிர்கொள்கின்றனர்.

இக்கிராமத்திலே கல்வி அறிவு குறைந்தவர்களே அதிகமாக உள்ளமையினால் அரச உத்தியோகஸ்த்தர் ஒருவரும் இல்லாமையினாலும் மாணவர்களைச் சூழல் மாற்றமடையச் செய்கின்றது.

இதற்குப் பெற்றார்களுக்கு முறையான விழிப்பூட்டல் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு சில பெற்றார் பொது விடயங்களில் ஆர்வமாய் அவர்களின் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றமாக உள்ளார்கள்.

இப்பிரதேசத்தில் ஒழுங்கான போக்குவரத்து பஸ் இல்லாமையினாலும், வீதிகள் சேதப்பட்டிருப்பதனாலும் ஆசிரியர்களாகிய நாங்கள் பாடசாலைக்கு வரும் போது அதிலும் மழை காலங்களில் மிகவும் சிரமத்தினை எதிர்கொண்டுதான் மாணவர்களுக்கான கற்பித்தலை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனமெடுக்க வேண்டும் என இத்தருணத்தில் கேட்டு நிற்கின்றேன்.

**மாணவர்களின் பெற்றார் சார்பாக செ.கோகுலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:-**

எங்கள் கிராமத்தில் பாடசாலை ஒன்று இல்லாது இருந்தமையினால் முன்பு பிள்ளைகளின் கல்வித்தரம் அனைத்தும் மழுங்கடிக்கப்பட்டிருந்தது.

கல்வித் திணைக்களத்தினால் அமைக்கப்பட்ட இப்பாடசாலையில் தற்போது விடுதிக்கல், மாவடிமுன்மாரி, வாய்க்கால் பாலம், அணைக்கட்டு போன்ற



இடங்களில் இருந்து மாணவர்கள் வந்து கல்வி கற்கின்றனர்.

பாடசாலையின் ஆரம்பத்தில் இருந்த கல்வி நிலையை விட தற்போது மாணவர்கள் கல்வியில் மேலோங்கிக் காணப்படுகின்றனர்.

இந்தவகையில் முதன் முதலாகப் பாடசாலை வரலாற்றிலே ஒரு மாணவி தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இதன் பெருமை ஆசிரியர்களையே சாரும். அதிலும் அதிபர் அவர்கள் தனது பிள்ளைகளைப் போன்று பிரத்தியேக வகுப்புக்களுக்கு வேறு பாடசாலைகளுக்குக் கொண்டு சென்று கல் வியினைக் கற்பித்தவர்.

இதனாலே பாடசாலையின் பெருமையையும், கிராம மக்களின் பெருமையையும் வெளிக்காட்டும் வகையில் ஒரு மாணவி சித்தியடைந்துள்ளதுடன், ஒரு மாணவன் கிட்டத்தட்ட சித்தியெய்தக் கூடிய வகையில் புள்ளிகளையும் பெற்றுள்ளார்கள்.

இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவரும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவும், விவசாயம், கூலித் தொழில் போன்றவற்றை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொள்கின்றனர்.

இதனால் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டும் விதம் பெற்றார்களிடையே குறைவாகவே உள்ளது.

ஆனால் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில் பெற்றார் நன்றாக உதவுகின்றார்கள். பொதுவாகக் கூறுவதெனின் பெற்றார்களின் கல்வி அறிவின்மையே காரணமாகும்.

எங்கள் கிராமத்தில் மின்சார வசதியில்லை, பஸ் போக்குவரத்து இல்லை, வீதி சீரின்மை போன்ற பல பிரச்சினைகளினால் மக்களின் அன்றாடப் பொருளாதாரம், மாணவர்களின் கல்வி, மக்களின் சுகாதாரம் போன்றன பாதிக்கப்படுகின்றன.

இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நிவர்த்தி செய்து தந்தால் பெரும் உதவியாக இருக்கும் என இத்தருணத்தில் கேட்டு நிற்கின்றேன்.

# கவிநாதம்

## கண்ணீருடன்......!

அன்னையவள்
அரவணைப்பை
அறிய முடியாத
பருவமதில்
அன்பினை இழந்தவன்
அத்தையின் அரவணைப்பில்
ஆனந்தம்
பெறமுடியாமல்
அல்லாடும் இளைஞன்
சுதந்திரம் இருந்தும்
அனுபவிக்க முடியாத
கூண்டுப் பறவை
சொந்தமது இருந்தும்
தூரத்து உறவாக
ஊசலாடும் வாழ்க்கை
தந்தையென்று
சொல்லிக் கொள்ள
ஏங்குகின்ற
இதயமுடன்
ஏக்கமாக வாழ்கின்ற ஜீவன்
பாதிப்பை
மறந்து கொள்ள
பறக்க நினைக்கின்றான்
இறக்கைகள்
விரியவில்லை
இரவுப் பொழுதுகள்
அவனுக்கு நீண்டனவாக
உள்ளது.
தன்னையே அறியாமல்
அழுகின்றான்.
தனது இறந்து விட்ட
தாயையும்
தந்தையையும்
எண்ணிக்கொண்டு
அவன்........!
எப்பொழுதும்
கண்ணீருடன்......!

ரி.தீவகன்
துறையூர்- 05

## துறையடிப் பாலம் பேசியது

ஐயா, ஐயா,
ஐயோ......ஐயோ........
மனிதர்கள். இல்லையா
என்மீது நடந்து செல்ல...?
" இருக்கிறோம்"
துணிவில்லையா வாய் திறந்து
சொல்ல ?
" உண்டு"
என்றது கிட்டங்கிப் பாலம்.
மனிதர்கள் விம்மினர்
" அப்பனே உனை அலங்கரிப்பது
யாமல்ல அது வேத்தியல்"
வாதிகள் என்றனர்.
" தெரியும் எனக்குத் தெரியும்
ஒன்று செய்யுங்கள்
தேர்தல் வரப்போகிறது
அட்டைகளை உரிமைக்காக பலியி
டுங்கள்
ஆம்.
அதைக் காட்டி அடையாளம்
வேண்டு மென்றால்
அவசரமாய் சீர் செய்யுங்கள்
என்று சொல்லுங்கள் என்றது.
மனிதர்கள்
யோசிக்கின்றோம் என்று
காத்திருக்கின்றனர்.

ஆதம்.எம்.நயீர்
மருதமுனை- 03

## அமைதி

யுத்தத்தினால்
நித்தம் துவண்ட
எங்களுக்கு,
கிடைத்தது ஓர்
விடிவு - அகதி
எனும் நிலை நீங்கியது,
என நினைத்தேன். ஆனால்
நிரந்தர அகதியாக
இருப்பதையே விரும்பிய
இறைவன் - தொடுத்தான்
யுத்தக் கணைகளை
பெரும் பேரலையாக
அதுவே சுனாமியெனும்
புதிய யுத்தமாக இடம்
பெற்றது.
இரண்டு யுத்தத்தினாலும்
இன்னல் உற்று
அகதியாய் இருக்கும்
எங்களுக்கு இனியும்
தாங்க முடியாது இன்னுமோர்
யுத்தத்தினை - ஆகவே
வேண்டுகின்றோம்
வெடி குண்டுகளை அல்ல
வெறுமையான அமைதி
நிறைந்த சமாதானத்தையே.

பே.லோஜினி
கோமாரி- 01

## பிரிவின் துயரம்

நீ அருகில் இருந்த போது
உன் பாசம் தெரியவில்லை
நீயோ நெருங்கி வந்தாய்
நான் விலகிச் சென்றேன்
நீ தூரம் சென்ற பின்புதான்
எனக்கு புரிகிறது
பிரிவின் துயரம்.

யோ.நவேந்தினி
கிரான்.

## அழகு

பிரமிப்பாய்
பார்த்தான்- படைத்த
பிரமனும் கூட
உன் அழகிலே
ஆயிரம் கவிதைகள்
என்னுள்ளே
ஊற்றெடுக்கும்
அத்தனையும் அடுக்க
நேரமில்லை கண்ணே
உனக்கு
திருஷ்டிசுற்றுவதால்.

நா.விஷ்வநாத்
கொம்மாதுறை.

## இறைஞ்சுகின்றேன்..........

அறிவுக் கடலினிலே
அலர்ந்து விட்ட அல்லி
நமுனை யத்தில்
கீழுதித்த வெள்ளி
விதையாக நீ விழுந்து
விருட்சமாய் நிழல் கொடுத்தாய்
படித்திடுங்கள் மாணவரென
பாடக் கயிறு நீ தந்தாய்

புது மலர்கள் பூசிக்கும்
பூலோகப் புருஷர் நீ
பூங்காற்றுநேசிக்கும்
புதுக்கவிதை அரசர் நீ

மாணவர்களின் முனுகலுக்கு
மும்மருந்தாய் வந்தாய்
பாடம் மூலம் முதுகெலும்பு
தந்தாய்

இப்படி எம் சமூகத்திற்கு
தொண்டு செய்யும்
ஆசானை இறைவா நீ
சீக்கிரமே மரணிக்கச் செய்யாதே

அறிவுக் கடல் முத்துக்கு
அறநெறியின் சொத்துக்கு
அழகு மலர் கொத்துக்கு
அறிவுலகின் சொத்துக்கு

தரணியிலே அவதரித்த
தளிர் போன்ற ரோஜாவிற்கு
அறிவைத் தந்த
தனிக்காட்டு ராஜனுக்கு

பொறுமை மிகு பெருமானே
பெருமை மிகு றஹ்மானே
மறுமை தனில் உயர்வு கொடு
மன்றாடி இறைஞ்சுகின்றேன்.

நற்பிட்டிமுனை,
சப்றோஸ் ஜமால்.

## எப்போ விடியல்?

இரவு வானிலே
எத்தனை நட்சத்திரங்கள்
இருந்த போதிலும்- நீ
நிலவுக்கு நம் காதலை
ஒப்பிட்டாய்!

நிலவு தேய்ந்து
வளர்வது தெரியும்!
நம் காதலும்
அதைப் போல்- ஊடலினால்
பிரிந்தாலும் மீண்டும்
இணைந்து விடும்
என நினைத்தேன்!

நிலவு தேய்ந்து
அமாவாசை ஆனது
அதைப் போல் ஊடல் கூடி
நம் காதலும் இருளானது!

அமாவாசை முடிந்து
மீண்டும் நிலவு
வளரத் தொடங்கியது,!
ஆனால் என் காதலோ
ஊடல் முடிந்து
மீண்டும் கூடவேயில்லை!

இருளாக கிடக்கும்
என் காதல் என்று
விடியலைத் தொடும்!

ரமேஷ் கண்ணா
சங்கமன் கிராமம்.

## நிலையானது

அன்பே!
வெறும்
உறவுகளென்றே
அதை நாம்
உதற நினைத்தால் - நாளை
துன்பத்தில் வீழும் நேரம்
நம்மை
தூக்கி விட யாருமில்லை.
கனவினைப் போன்ற
காதலை விடவும்
நிழலினைப் போன்ற நேசத்தை
விடவும்
உயிர் வரை
உடன் வரும்
உறவுகள் மேலடி

கமால்தீன் அல் ஆஸாத்
ஏறாவூர்- 03

## நிஜம்

மழை இல்லை என்றால்
பூமி வரட்சி
ஞாயிறு இல்லை என்றால்
பூமி அமாவாசை
அன்பு இல்லை என்றால்
பூமி கொலைக்களம்
நீ இல்லை என்றால் என் உடல்
கல்லறைக்கு அடைக்கலம்.

தெ. சிவவரதன்
மட். துன்பங்கேணி க.வி

## காத்திரு கட்டாயம் வருவேன்

உன்னோடு வாழத்தான்
என்னோடு உயிருள்ளது.
மண்ணோடு போயிருப்பேன்.
நீ என் மனதினுள் வாராதிருந்தால்.
கண்ணோடு உன்னை வைத்துக்
கால மெல்லாம் காப்பேனடி......
என் உயிர் காதலியே......
இனியும் என் நெஞ்சம் தாங்காது
கனியும் உன் வதனம் காணாது
இன்னும் சிலகாலம் எனக்காக...
இன்னல்களைத் தாங்கியிரு.......
முடிந்தவரை உன்னிடம்
விரைவில் வருவேன்.
எனக்காக காத்திருடீ ~ என்னவளே
உன்னவன் நான் வருவேன் ~ நாமும்
உல்லாசமாக பிரியாத பிரியத்துடன்
வாழ்வோம் ~ நம்
ஆயுளுள்ளவரை ~ அதற்காக
காத்திரு..... நான் கட்டாயம் வருவேன்.

ஆர்.சுயதயா.

## திருப்தி செய்....!

நாகரிகமும்
நவீனமும்- வாழ்வில்
நாளாந்தம்
புகுந்தாலும்.......
நற்குணமும்
நளினமும்
கலாசார பண்பாடும்
இன்னும்
நம் பெண்களின்
கைவிட்டுப் போகவில்லை!

பு. தவராசா
சுரணையடியூற்று.

## அன்பின் உணர்ச்சியிலே.....

அன்புக் கலசத்தின்
அகமதிலே
அறிவை நல்கும்
விதையொன்று
வேர்விட்டு
முளைத்தெழுந்து
கலசத்தை எட்டி
பார்க்குதம்மா
நாளை நான்
வெளிப்படுவேன்
அன்பு வாசமதை
இன்பமாக
தூவிடுவேன்
விருட்சமதாய்
வளர்ந்து எல்லோர்க்கும்
நிழல் கொடுப்போம்
மருந்தாக நீ உண்டு
விருந்தாக பரிமாறி
பனிப்போன்ற
என்சுவையை
பற்றுடனே நீ பருகி
அரும்பென மொழியும்
ஆனந்த மழை தனிலே
மகிழ்வோடு நல் உறவோடு
நீடூழி வாழ்ந்திருப்பாய்.

ச.சந்திரமதி
மகிழவட்டவான்
ஆயித்தியமலை.

## நட்புடன்...

பூக்களின் தென்றலாய்
புன்னகையின் சின்னமாய்
வார்த்தைகள் பல பகிர்ந்து-நாம்
வண்ணமாய் வாழ்ந்திடுவோம்

நந்தவனத்தின் நறுமலராய்
சுடர்விடும் ஒளிவிளக்காய்
மலர்களின் மணம் அறிந்து
மது அருந்தும் வண்டுகளாய்
குதூகலிப்போம் என்றும் நட்புடன்.

எம்.கிருசாந்தி
கோட்டைமேடுஎருவில்
களுவாஞ்சிகுடி.

## வண்ணத்துப் பூச்சியே......!

ஏய் அழகிய வண்ணத்துப் பூச்சியே
உன் அழகிய ரெக்கைகளை
எங்கே வாங்கினாய் எனக்கும் சொ
ல்லேன்.
நீ அழகு என்பதால் எல்லோரின்
கண்களும் உன்னையல்லவா வட்டமி
டுகின்றது.
உன்னை இத்தனை அழகாக படைத்
த ஆண்டவன்
என்னை மட்டும் ஏன் இத்தனை அசிங்
கமாய் படைத்தான்.
என்னைப் பார்க்கின்றவர்கள் வெறுக்
குமளவு
என் உருவத்தைப் படைத்தவன் தானே
உன்னையும் படைத்தான்.
உருவத்தின் அழகை ரசிப்பவர்கள்
என் உள்ளத்தின்
அழகை ரசிக்க மறுக்கின்றார்கள்.
ஏய் வண்ணத்துப் பூச்சியே உன்ன
ழகைத் தருவாயா?
என் உடலையும் அழகு படுத்த.

புலேந்திரா
பாண்டியூர் .

## உன்னோடு சேரமாட்டேனா?

கவி பாடி மகிழ வைப்பேன் உன்னை
உன் கால் செருப்பாய் சேரமாட்டேனா
கதை சொல்லி தூங்க வைப்பேன்
உன்னை
உன் கால் கொலுசாய் சேரமாட்டேனா
சன்சில்க் வாங்கித் தருவேனடி
உன் கூந்தலில் பேனாக சேரமாட்
டேனா
பொழுது போக்காய் வருவேனடி உன்
னோடு
உன் புருசனாக உன்னோடு சேரமாட்
டேனா.

பி.தமிழ்வேள்
நாவதன்வெளி

## இலைதுளிர் காலம்

இலக்கிய வானில் வலம்
வருகின்ற தாரகையைப் போல
வசந்தமான காலங்களுக்கு
வண்ணங்கள் கொடுத்து

வடிவமைப்பது வாழ்க்கையே
காகிதத்திற்குக் கற்பனையையும்
சிந்தனைக்கு உள்ளத்தையும்
பேனாவிற்குக் கரத்தையும்
அன்பளிக்கும் காலமிது.
வார்த்தையினால் தொடுக்கப்படும்
வாக்கெடுப்புக்களை
சிற்பியின் ஓவியத்தால்
உணர்ச்சிகள் கொடுத்து
புதுப்பிக்கும் கலியுக காலமிது
மனத்திரைக்கு மாலைகள் தொடுக்கும்
உன்னத காவியம் ~நம்
வாலிப இலை துளிர் காலம்.

உ.சாந்தினி
உதையகுமார்
ஏறாவூர் -05

## இறப்பும், பிறப்பும்

நானும் விரும்பி
பிறக்க வில்லை
இருந்த போதும் வந்து
பிறந்து விட்டேன்
நானும் விரும்பி நினைக்க வில்லை
இறப்பையும் பெற்று விட்டேன்.

ரி.கண்ணன்
எருவில், பாரதிபுரம்.



# கடந்து வந்த காலமும் கனிந்து எழும் கோலமும்

எமது சிறுபான்மைத் தமிழினத்தை பேரினவாதிகள் அடக்கி ஒடுக்கி தன் வசப்படுத்தி தன் அதிகாரத்தை நிலை நிறுத்த நினைத்தனர். தமிழின மக்கள் மத்தியில் அளவில்லா அட்டூழியங்களை இழைத்தனர். பெண் குலத்தை மானபங்கப்படுத்தினர். மைந்தர்களை மாய்த்தொழிக்க மாய வலை வீசி பிடித்தழித்தனர். அன்னையர்களை தீயிட்டுக் கொளுத்தினர். பால் மணம் மாறாத பச்சிளம் பாலகர்களைச் சிறிதளவும் ஈவிரக்கமின்றி கிழித்தெறிந்தனர். இவ்விதம் சிங்களக் காடையர்களின் அதிகாரம் அனலென எழுந்தது.

இனவெறி பிடித்த அயலான் தமிழின மக்கள் மீது நிகழ்த்திய கொடூரங்களைச் சொல்லிட வார்த்தைகளே இல்லை. தமிழினம் எவ்வித தயவு தாட்சண்ணியங்களுமின்றி தனித்துப் போனது. சிங்களப் பேரினவாதம் தமிழின மக்கள் மீது தனது ஆதிக்கத்தை அதிகார பூர்வமாகச் செலுத்தியது தமிழின மக்களின் உடமைகளை பெரும் சேதத்திற்குள்ளாக்கியதோடு உயிர்களையும் கொன்றொழித்தது. எண்ணிலடங்காத அப்பாவித் தமிழின மக்களின் உயிர்கள் சிங்கள வெறியர்களின் கோரப்பசிக்கு வீணாக இரையாகிப் போயின.

இத்தகைய பெரும் கொடுமை நிறைந்த காலகட்டத்திலேதான் தமிழின மக்கள் யாருடைய ஆதரவும், அரவணைப்புமின்றி தவித்துப் போயினர். தமிழர்களின் தாயக பூமியும் தமிழின மக்களும் சோகத்தில் மூழ்கினர். கரைசேர வழியின்றி காரிருளில் மூழ்கிக் கிடந்தனர். அவ்வேளையிலே தான் தமிழின மக்களின் மீது எமது தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பார்வை திரும்பியது.

சிங்களக் காடையர்கள் தமிழின மக்களுக்கு இழைத்த அளவிட முடியாத கொடூரங்களைக் கண்டு தேசியத் தலைவர் அவர்களின் உள்ளம் உருகியது. பிஞ்சு வயதிலேயே தமிழின மக்களின் விடுதலைக்காகவும், தமிழீழ தாயக பூமியின் உன்னதமான வளர்ச்சிக்காகவும் தன்னை முழுமையாகவே அர்ப்பணித்தார்.

தமிழின மக்கள் மீதும், தாயக பூமியின் மீதும் ஓயாத தாகம் புயலாக எழுந்திடவே தன்னலப் பற்றையே துறந்தார். தமிழன் தாயக பூமியில் தன் மானத்தோடு வாழ வேண்டும் என்ற உயரிய இலட்சியத்திற்காகவே தமது பயணத்தைத் தொடர்ந்தார். இன்றும் அவ்வழியிலே தான் தலைவர் பயணித்துக் கொண்டிருக்கின்றார்.

அன்று எமது தேசியத் தலைவர் அவர்களின் உள்ளத்தில் அத்தகைய உயரிய உணர்வு எழுந்திருக்காவிடில் எமது தமிழினம் அழிந்து போயிருக்கும். தமிழர், தமிழர்களின் தாயக பூமி என்ற வார்த்தைகளுக்கே இடமில்லாமல் இருந்திருக்கும். அப்படிப்பட்ட அளவிட்டுக் கூற முடியாத அட்டூழியங்களை நிகழ்த்தியது சிங்களப் பேரின வாதம்.

எமது தேசியத் தலைவர் அவர்கள் தாமாகவே போராட்டப் பாதையில் இணையவில்லை. சிறுபான்மைத் தமிழினம் மீது சிங்களப் பேரினவாதம் வீசிய வன்முறைகள், அடாவடித்தனங்கள், அடக்கு முறைகள் இன்னும் சொல்லில் அடங்கா கொடூரங்களை நிகழ்த்தியமையினாலேயே அதைப் பார்த்து சகித்துக் கொண்டிருக்க முடியாததனாலேயேதான் எம் தலைவர் அவர்கள் அப்பார்வை நோக்கி தமது பயணத்தை நகர்த்திச் சென்றார்.

தேசியத் தலைவர் அவர்களின் ஓயாத பற்றின் உன்னதமான வெளிப்பாட்டினாலேயேதான் தமிழின மக்களின் உள்ளத்திலும், தாயக பூமியின் வளர்ச்சிப் பாதையிலும் மெல்லிய ஒளி பிரகாசிக்கத் தொடங்கியது. அது தற்கால கட்டத்தில் படிப்படியாக வளர்ச்சி பெற்று தமிழர்களின் தாயக பூமி எங்கும் துல்லியமான ஒளிக்கீற்றாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அன்று சிங்களக் காடையர்களால் காரிருளில் மூழ்கிக் கிடந்த தாயக பூமியும், தமிழின மக்களும் தேசியத் தலைவர் அவர்களின் விழியின் வழியாக மலர்ந்த ஒளியினால் எழுச்சி பெற்றுத் திகழ்கின்றனர்.

தமிழின மக்களின் வாழ்வில் விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர் இன்றும் என்றும் திகழ்பவர் தேசியத் தலைவர் அவர்களே. எத்தனையோ தடைகள் நேர்ந்திட்ட வேளையிலும் அவற்றை எல்லாம் சாதாரணமாக முறியடித்து தமது ஒரே இலட்சிய நோக்கத்திற்காக தளர்வின்றி பயணித்துக் கொண்டிருக்கின்றார். அவர் சாதாரணமான மனிதர் அல்லர். ஸ்ரீகிருஷ்ண பகவானின் அம்சத்தில் வந்துதரித்த மாபெரும் அவதார புருஷர்.

எதிரியவன் தமிழின மக்களுக்கிழைத்த கொடூரமதை சகித்திட முடியாத வேளையில் தேசியத் தலைவர் அவர்கள் வடிவமைத்து வழி சமைத்துக் கொடுத்த போராட்டப் பாதையில் தாமாகவே முன்வந்து தமிழ் மக்கள் தம்மை அர்ப்பணித்தனர். அஞ்சி நடுங்கி வாடிவதங்கிக் கிடந்த தமிழ் மக்கள் தலைவரின் வழிநடத்தலினால் தனித்துவமாய் நிமிர்ந்தெழுந்தனர்.

சிங்களப் பேரினவாதிகளின் கொடூரத்தனத்தை சகித்திட முடியாத ஆவேசத்தினால் ஒவ்வொரு இளைஞர் யுவதிகளின் உள்ளத்திலும் “எம் வாழ்வு இன வெறி பிடித்த எதிரிகளால் பாழாய்ப் போயிற்று. ஆயினும் பரவாயில்லை. எமது நிலை எம் இளம் சந்ததியினருக்கும் தொடரக் கூடாது. அவர்களாவது எதிர் காலத்தில் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் வாழ வேண்டும்.” என்ற உணர்வு சுயமாகவே எழுந்தது.

இத்தகைய நிலையிலே தான் ஒவ்வொரு தமிழின மகனும், மகளும் தேசியத் தலைவர் அவர்களின் போராட்டப் பாதையில் நேரடியாகவே இணைந்து. அதாவது சொந்த பந்த உறவுகளைத் துறந்து தமிழீழத் தாயகத்தின் மீது தீராத பற்றுக் கொண்டு வேங்கை என உருமாறி வேட்கையோடு ஆயுதமேந்தி எதிரியவன் தமிழினத்திற்கு இழைத்த இன்னல்களினால் எழுந்த ஆவேசத்தினால் பகைவனிடத்தில் தம் வீரச் செயலை பதிலடியாக பரிமாறினர். வெற்றிகள் பல பெற்று வளர்ச்சிப் பாதையை நோக்கி எம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

சீறி எழுந்த பேரினவாதம் சிறுபான்மைத் தமிழினத்தின் மகோன்னத பலத்தைக் கண்டு சிதறி ஓடி தலை கவிழ்ந்தது. பல்வேறு நாடுகளில் இருந்தும் படைப் பலத்தைப் பெற்றும் என்னதான் எத்தனையோ தந்திரோபாயங்களைக் கையாண்ட போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியில் சிங்களப் பேரினவாதம் பெரும் படுதோல்விகளையே எதிர் நோக்கியது.

தேசியத் தலைவர் அவர்களின் வழிநடத்தலில் தம் பயணத்தை மேற்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் எதிரிகளிடமிருந்து பல வெற்றிகளைப் பெற்றனர். இதற்கெல்லாம் பக்கபலமாக திகழ்வது தேசியத் தலைவர் அவர்களின் பக்கம் தர்மமும், நீதியும், இயல்பாகவே குடிகொண்டிருந்தமையே இதற்குக் காரணம். இதனால்தான் எமது தமிழீழம் தனித்துவமாக எழுந்து உன்னதமான வளர்ச்சியீட்டியுள்ளது.

என்னதான் ஆனாலும் சிங்களப் பேரினவாதம் சிறுபான்மைத் தமிழினத்தோடு அன்று தொட்டு இன்று வரையும் பாராபட்சங்களுடனேயே நடந்து கொள்கின்றது. சிறுபான்மைத் தமிழினம் அழிய சிங்களப் பேரினவாதம் தழைத்தோங்க வேண்டுமென்ற மறைமுகமான நோக்கங்களுடனேயே தன் நடைமுறைளைச் செயற்படுத்தி வருகின்றது. இத்தகைய ஓரக வஞ்சனை நிறைந்த அநீதியானது ஒரு போதும் நிலைத்திருப்பதில்லை.

ஆண்டாண்டு காலம் தமிழினப் பரம்பரையினர் ஆண்டு வந்த தாயகப் பூமியினை எதிரியவன் தனது ஆதிக்கத்திற்குள் நிலை நிறுத்தி அடக்கியாழ நினைத்து அதர்ம வழியில் தன் அதிகாரத்தைச் செலுத்தினான். அநீதி நிலைத்திடுமா? எமது தேசியத் தலைவர் அவர்களின் பக்கம் தர்மமும், நீதியும் நிலையாகக் குடிகொண்டிருந்தமையினால் தமிழரின் வாழ்வு படிப்படியாக வளர்ச்சி காணும் வேளை எதிரியவனின் அதிகாரம் வீழ்ச்சி காண்கின்றது.



ஒரு போதும் சிங்களப் பேரினவாதம் சமாதான வழியைப் பின்பற்றப் போவதுமில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணங்கப் போவதில்லை என்பது வெளிப்படையான உண்மை. இருந்தும் பேரினவாதிகள் விடுதலைப் புலிகள் பலமிழந்துள்ளமையினாலேயே சமாதானத்தை விரும்பி பொறுமை காத்துக் கொண்டிருக்கின்றார்கள் என நினைத்து தமிழின மக்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேரினவாதிகள் தப்பான பார்வையிலே நோக்குகின்றனர்.

**ஈழப்பிரியா**
**தமிழீழம்**

போர் நிறுத்தக் காலத்திலும் பேரினவாதமும், அதன் இதர கட்சிகளும் சார்ந்து நின்று அச்சுறுத்தல்களையும், கொலை நிகழ்வுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. எனினும் விடுதலைப் புலிகள் பொறுமை காத்து வருகின்றனர். பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா? அந்த எல்லையை மீறுமளவுக்கு பேரினவாதம் சீண்டிப் பார்க்க நினைத்தால் பேரினவாதமும், அதனைச் சார்ந்த இதர கட்சிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியில் கேள்விக் குறியென வளைந்து நிற்பதோடு பேரழிவை எதிர்நோக்கி பெரும் அவஸ்த்தைப்படும் நிலைக்குள்ளாவது நிச்சயம். கார்த்திகை திங்கள் பிறந்ததாலே ஒவ்வொருவரினதும் உள்ளத்திலும் புத்தொளி பிரகாசிக்கின்றது. களிப்பூட்டும் கார்த்திகை திங்களிலே தான். தேசியத் தலைவர் அவர்களும் அவதரித்தார்.

அவர்களது அகவைத் திருநாளை உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாட ஒவ்வொரு தமிழர்களினதும் அகமும் அப்பொன்னான நன்நாளை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றது. தமிழீழ தேசம் எங்கும் அப்பொன்நாளை களை கட்டக் காத்திருக்கிறது.

இதைப் பார்த்து சகிக்க முடியாத சில விசமிகள் தமிழீழ மக்கள் மத்தியில் தப்பான வதந்திகளைப் பரப்புகின்றனர். தப்புக்கு தாளம் போடும் தலை முறை இன்று மாய்ந்து விட்டது. “மக்களே புலிகள், புலிகளே மக்கள்” என்று பிரித்தறிய முடியாதளவு எமது தமிழீழ தேசம் எழுச்சி பெற்று விளங்குகின்றது.

இலட்சிய நோக்கும், பொறுப்புணர்ச்சியும் நிரம்பப் பெற்ற சிறந்ததோர் நல்வழி காட்டக் கூடிய தலைவர் இல்லாதமையினாலேதான் புராதன காலத்தில் தமிழின மக்கள் அட்டூழியங்கள் நிறைந்த ஈவிரக்கமற்ற எதிரிகளின் வலைக்குள் அகப்பட்டு சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்தனர்.

தற்காலத்தில் தலைமுறை, தலைமுறையாக அனுபவித்து வந்த தமிழீழ மக்களின் துயரநிலை குறைந்து கொண்டு வருகின்றது. அத்தகைய நிலைக்கு தமிழீழ மக்களை வளர்த்து ஆளாக்கிய பெருமை எமது தமிழீழத் தேசியத் தலைவர் அவர் களையே சாரும். நாம் எதையும் நினைத்த நேரத்தில் எடுத்த எடுப்பில் சாதித்து விட முடியாது. காலமும் நேரமும் கனிந்து வரும் வேளைதான் எமது கருமமும் செயலும் கைகூடி வரும்.

“ஒன்றை இழந்து தான் நாம் இன்னொன்றைப் பெற வேண்டும்” இக்கூற்றினை ஒவ்வொரு தமிழீழ மக்களும் முழுமையாக உணர்ந்ததனாலேதான் எமது தேசியத் தலைவர் அவர்களின் உன்னதமான நேர் வழிப் பாதையில் தம் பயணத்தைத் தொடர்ந்தனர். இப்பயணமானது சுதந்திரம் நிறைந்த அமைதியான நிரந்தரமான விடுதலை கிடைக்கும் வரைத் தொடரும் என்பது உறுதி. எமது தமிழீழ தேசத்தின் உன்னதமான விடுதலைக்காக வளர்ந்து வரும் இளம் சந்ததியினருக்காகவே நாம் எத்தனையோ பெறுமதி மிக்க ஆயிரக் கணக்கான உயிர்களை இழந்து நிற்கின்றோம். இது சாதாரணமானதோர் இழப்பல்ல. ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. இதனை நினைவு கூரும் முகமாகவே மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மரணம் என்பது யாரையும் விட்டு வைப்பதில்லை. பிறப்புண்டானால் இறப்புண்டு. இதற்கமைவாக ஒவ்வொருவரும் இறப்பை எதிர் கொள்வது நிச்சயம். இவ்விதத்தில் நோக்கும் வேளை இந்த மாவீரர்களின் இறப்பு மகத்தானது.

அவர்கள் தங்களது உயிர்களைச் துச்சமெனவே நினைத்தார்கள். எதிர் கால இளஞ் சந்ததியினரின் நல் வாழ்வை மனதில் சுமந்த வண்ணம் தன்னலப் பற்றை அறவே துறந்து சுயவிருப்போடு களமுனை நோக்கி விரைந்தார்கள். எதிரியோடு நேருக்கு நேர் எதிர்த்து நின்று போராடி தாயக மண்ணில் விதையாக வீழ்ந்து வீர காவியமானார்கள். வித்தாய் வீழ்ந்த வர்கள் தமிழீழ தேசத்தில் விருட்சமதாய் வளர்ந்து கொண்டுதான் வருகின்றார்கள். இவர்கள் இறுதிக் கட்டத்தில் இளைய தலை முறையினரோடு தோளோடு தோள் நின்று தமது பங்களிப்பை மென்மேலும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்ற உத்வேகத்தினாலேதான் மரணத்தை தழுவிக் கொண்டார்கள்.

இவர்கள் மறுவடிவம் தாங்கி தமிழீழ தாயக தேசமெங்கும் பச்சிளம் பாலகர்களாக தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# ஈராக் தேர்தல்? உணர்த்தும் உண்மை என்ன?

அமெரிக்கக் கூட்டுப் படைகளினால் கடந்த 22 மாதங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள ஈராக் நாட்டை இரு தசாப்தங்களுக்கு மேல் ஆட்சி புரிந்த ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைன் மீது சுமத்தப்பட்டுள்ள பல்வேறு மனித உரிமை மீறல் குற்றாச்சாட்டுகளை ஆதார பூர்வமாக நிரூபிப்பதற்கான வழக்கு விசாரணைகள் ஈராக்கின் அரசியல் சாசனம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான தேர்தல் ஒன்று நடைபெற்றதன் பின்னர் தனி நீதிமன்றத்தினால் விசாரித்து சதாம் மீதான இறுதித் தீர்ப்பு வழங்கப்படுமென பல சர்வதேச ஊடகங்கள் ஆரூடம் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையிலே கடந்த 15.10.2005 தேர்தலும் 19.10.2005ம் திகதி ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைனுக்கு அவரது ''பாத்'' கட்சியின் முக்கிய பிரமுகர்களாகவிருந்த ஏழு பேருக்குமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் வழக்கு விசாரணைகளை பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள விஷேட நீதிமன்றத்துக்குள்ளே அமைக்கப்பட்டுள்ள ஒரு தனியான சிறப்பு நீதிமன்றத்துக்குள் சுமார் மூன்று மணி நேரமாக வழக்கு விசாரணை கூறப்படுகிறது.

சதாமுக்கும். அவரது பாத் கட்சியின் எழுபேருக்குமான வழக்கு விசாரணையின் போது அவர்களுக்கெதிராகக் கொலைச் சித்திரவதை செய்தது. வலுக்கட்டாயமாக வெளியேற்றியது. சிறைப்பிடித்தது. பன்னாட்டுச் சட்டத்தை மீறியது போன்ற இன்னோரன்ன பல குற்றச் சாட்டுக்களை சிறப்பு நீதிமன்ற நீதியரசர்களால் ஆனாப் ரிஸ்கார் முகம்மது அமின் சுமத்தியதோடு நின்று விடாது மேற்படி குற்றாச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அதிகப் பட்ச தண்டனையாக மரண தண்டனை கூட விதிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும். நீதிமன்றத்திலே எச்சரிக்கையாக கேள்விக் கணைகளைத் தொடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்ப கட்ட விசாரணைகள் முடிவடைந்ததன் பின் அடுத்த கட்ட விசாரணைகளுக்காக நவம்பர் 25ம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதிபதி அறிவித்தார். இவ்வாறான ஒத்தி வைப்புக்கான காரணம் சதாமுக்கும். ஏழு பேருக்குமாகச் சாட்சியமளிப்பதற்கு சாட்சிகள் அச்சம் கொண்டுள்ளதனாலேயேதான் என்றும் கூறப்படுகிறது.



நடைபெற்றுள்ளது.

இவ் வழக்கு விசாரணையின் போது பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பல சர்வதேச பிரநிதிகளும் நீதிமன்ற நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக தனி நீதிமன்றிலே பிரசன்னமாகியிருந்தார்கள். இவ் விசாரணையை ஈராக்கின் அரச தொலைக்காட்சிகள் உட்பட பல அரபிய தொலைக்காட்சிகளும் நேரடி ஒலிபரப்புச் செய்ததை ஈராக்கிய மக்கள் மட்டுமன்றி பல இஸ்லாமிய நாடுகளில் வாழும் அரபிய மக்களும் நேரடியாகவே பார்த்தனர்.

இவ்வாறு நடந்த வழக்கு விசாரணையை நேரடியாக தொலைக்காட்சியூடாகப் பார்த்த அமெரிக்காவில் வாழும் ஷிய இன ஈராக்கியர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:- இவ்வாறான வழக்கு விசாரணைகள் சதாமுக்குத் தேவையில்லை எனவும். உடனடியாகவே தண்டனையை நிறைவேற்ற வேண்டுமெனவும் கொதித்தெழுந்துள்ளார்கள் எனவும்

சதாமுக்கு எதிராக சாட்சியமளிப்பதாக இருந்த 40 பேரும் நீதிமன்றத்துக்குச் சமூகமளிக்கவில்லை. இது இவ்வாறிருக்க சதாமுடன் சிறையிலிருக்கும் ஒருவருக்காக ஆஜராகி வாதாடிய ஒரு பிரபல வழக்கறிஞர் விசாரணை நடந்த அடுத்த நாளே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த ஈராக் அரசு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளதுடன் சதாமுக்கும் அவரது சகாக்களுக்கும் ஆதரவாக வாதாடும் வழக்கறிஞர்களுக்கு அரசு உரிய பாதுகாப்பு வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி சதாமுக்கு எதிரான வழக்கு விசாரணையின் போது சதாம் தனது கம்பீரம் சற்றும் குறையாமல் காட்சியளித்தது தான் அனைவரையும் வியக்க வைத்தது. ஆரம்ப விசாரணையின் போது சதாமிடம் நீதிபதி யார்? என வினாவிய போது நான் ஈராக் ஜனாதிபதி சதாம்ஹூசைன் என்று தனது வழமையான கம்பீரத் தொனியில் பதிலளித்தமை அனைவரையுமே வியக்க வைத்தது. கைது செய்யப்பட்டாலும் கம்பீரத்துடன் நீதிமன்றில் காட்சியளித்தார் எனவும். சர்வதேச ஊடகங்கள் பல கருத்து தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க. சதாமுக்கும் அவரது சகாக்களுக்கும் எதிராக 1982ம் ஆண்டில் ஈராக்கின் ஷியா இன மக்கள் செறிந்து வாழும் டுபையில் என்ற பகுதியில் சதாமுக்கு தாக்குதல் ஒன்று நடத்தியபோது அவர் அதிஸ்ட்டவசமாக உயிர் தப்பினார். அதற்கு அடுத்த நாள் ஷியா இன மக்கள் 600 பேருக்கு மேற்பட்டோரை சதாமின் இராணுவத்தினர் கைது செய்து அதில் 148 பேரைக் கொலை செய்த குற்றச்சாட்டும். 1980ம் ஆண்டில் 1 இலட்சத்தி 80 ஆயிரம் குர்து இன மக்கள் கொல்லப்பட்ட குற்றச்சாட்டும். 1991ம் ஆண்டு குர்து இன மக்களும் அடக்கி ஒடுக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட குற்றச்சாட்டும். 1988 காலப்பகுதியில் ஹலாய்ஜா கிராமத்தில் விசவாயு தாக்குதலில் 5000 க்கு மேற்பட்ட குர்து இன மக்கள் கொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் போன்றவையே இவர்களுக்கெதிரான முக்கிய குற்றச்சாட்டுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அரச வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இது இவ்வாறிருக்க கடந்த யூன் சுதந்திர நாடாகிவிட்டதிலிருந்தும் 15.10.2005 ம் திகதி நடைபெற்ற அரசியல் சாசன வாக்கெடுப்பின் பின்பும் மேற்படி தனி நீதிமன்றம் செல்லாது என்றும் சதாமின் வழக்கறிஞர் நிருபர்களிடம் பேட்டி அளித்துள்ளார்.

**பாரிசிலிருந்து**
**நல்லரெத்தினம்**

வழக்கறிஞர் கலீலி - அல் - துலாய்மி சிறைக்குச் சென்று சதாமைச் சந்தித்து உரையாடியதாகவும். சதாம் மிக உறுதியாக இருக்கிறார் என்றும் தான் நிரபராதி என்று அவர் உறுதியாக நம்புகிறார் என்றும். வழக்கு விசாரணைக்கு தான் இன்னும் தயாராகவில்லையென்றும், இன்னும் 3மாத கால அவகாசம் தனக்குத் தேவை என தன்னிடம் சதாம் கூறியதாகவும் சாதமின் வழக்கறிஞர் கலீல் - அல் - துலாய்மி தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இவ் வழக்கு விசாரணை நடைபெறுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் அதாவது 15.10.2005 சனிக்கிழமை ஈராக்கின் அரசியல் சாசனத்தை அங்கீகரிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்க கூட்டுப் படைகள் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் ஈராக்கை ஆக்கிரமித்து ஈராக்கில் இயங்கிய சதாம் ஹூசேனின் அரச இயந்திரத்தை செயலிழக்கச் செய்து சதாம் ஹூசேனையும். அரச இயந்திரத்தை இயக்கிய அனைவரையுமே அமெரிக்க கூட்டுப் படைகள் கைது செய்தது. பின்னர் நடந்த உயர்மட்ட பேச்சுக்களினால் பல சதாம் அரச உயர் அதிகாரிகளை அமெரிக்கா கூட்டுப் படைகள் விலைக்கு வாங்கியதும் உலகறிந்த உண்மை என பல சர்வதேச ஊடகங்களே கோடிட்டுக் காட்டியிருந்தன.

அதன் பின் அமெரிக்க தலைமை அதிகாரியின் பொறுப்பில் ஈராக் நாடு இருந்து பின்னர் உலக நாடுகளின் அழுத்தங்களின் காரணமாக ஒரு தற்காலிக அரச இயந்திரத்தை அமெரிக்கா கூட்டுப் படைகள் கண்துடைப்புக்காக ஏற்படுத்தியது. பின் கடந்த ஜனவரி மாதம் ஒரு தேர்தலை நடத்தி ஒரு அரசை அமைத்துச் செயற்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி இந்த அரசினால் தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பு ஆவணத்தை அங்கீகரிப்பதற்காக கடந்த 15.10.2005 நடந்த தேர்தலில் ஈராக்கில் மொத்தமாக உள்ள 18 நிர்வாக மாநிலங்களில் 15 நிர்வாக மாநிலங்களை ஈராக்கிய மக்கள் அரசியல் சாசனத்தை ஆதரித்து வாக்களித்துள்ளதாக ஈராக்கிய உத்தியோகபூர்வ அறிக்கைகளும். பெறுபேறுகளும் தெரிவிக்கின்றன.

சுனி இன முஸ்லிம்கள் செறிந்து வாழும் மூன்று மாநிலங்களில் இரு மாநில சுனி முஸ்லிம் மக்கள் அரசியல் சாசனத்தை முற்றாக நிராகரித்துள்ளார்கள். மீதி ஒரு மாநிலமான நினவே மாநிலத்திலுள்ள சுனி இனமக்களின் 44 சதவீதமானோர் அரசியல் யாப்பை ஆதரித்து வாக்களித்துள்ளதானது ஒட்டு மொத்த சுனி முஸ்லிம் இனத்தவர்களது கண்ணில் மண்ணைத் தூவி விட்டது போன்ற தோற்றப்பாடு ஒன்றை நினவே மானிலத் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன.

மேற்படி சுனி முஸ்லிம்கள் சதாம் ஹூசேனின் ஆட்சிக் காலத்தின் போது அரச உயர் பதவிகளிலும் பொருளாதாரத் துறைகளிலும் ஆக்கிரமித்து சுகபோக வாழ்க்கை வாழ்ந்தவர்கள் என்றும் இரு தசாப்தங்களுக்கு மேல் அரசியல் செல்வாக்கில், பொருளாதார மேன் நிலையிலும் இருந்தவர்கள். ஷியா இன முஸ்லிம்களால் தயாரிக்கப்பட்ட ஈராக்கிய அரசியல் சாசனத்தை உடனடியாக முழுமையாக சுனி இன முஸ்லிம்களால் நிராகரிக்க முடியாத நிலையிலேயே இவர்கள் உள்ளதையும் இத் தேர்தல் முடிவுகளின் பெறுபேறுகள் எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

இரண்டு கோடியே 70 இலட்சத்துக்கு அதிகமாக வாழும் ஈராக் நாட்டில் 68 சதவீதமான மக்கள் அரசியல் சாசன சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களித்துள்ள நிலையில் 77 சதவீதத்தினர் ஆதரவாகவும். 21 சதவீதமான மக்கள் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்களிப்பைப் பார்க்கும் போர் நூற்றுக்கு நூறு வீதம் நேர்மையாக நடந்துள்ளதாக ஈரானிய தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவிக்கையில், சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் தாங்களாகவே முன் வந்து மிக்க ஊக்கத்துடனும். உற்சாகத்துடனும் வாக்களித்துள்ளதன் மூலம் கடும் போக்கு வாதத்தையும். வன்முறை கலாசாரத்தையும் தோற்றுவித்து முழுமையான ஜனநாயகத்தைக் கட்டியெழுப்ப ஈராக்கிய மக்கள் தாமாகவே முன்வந்து திடசங்கர்பம் பூண்டுள்ளார்கள் என்றும். சரியான நேரத்தில் அதை நிரூபித்து விட்டார்கள் என்றும். புகழாங்கிதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அதே போல் பிரிட்டன் வெளியுறவு சொலானா ஜக்ஸ்ட்ரோவும். ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு கொள்கைகளுக்குப் பொறுப்பான



அதிகாரி யாவியர் செயலாளர் போன்றோரும் கருத்துக் கணிப்பு பற்றி அதே தொனியிலேயே கூறியுள்ளார்கள். ஈராக்கின் மொத்த சனத் தொகையில் 20சதவீதமாக இருக்கின்ற சுனி இன முஸ்லிம்களது நலன்களை விடவும் 80 சதவீதமாக இருக்கின்ற ஷியா இன முஸ்லிம்களதும். குர்து இனத்தவர்களது நலன்களுமே கூடுதலாக மேற்படி அரசியல் சாசனத்தில் பேணப்பட்டுள்ளதாக குறை கூறப்படுகின்றது. இருந்த போதும் சதாம் ஆட்சிக் காலத்தில் 20 சதவீதமாக இருந்த சுனி இன முஸ்லிம்கள் மீதம் 80 சதவீதமாக இருந்த ஷியா. குர்து இன மக்களுக்கு சுனி இன முஸ்லிம்களால் இழைக்கப்பட்ட அநீதிகளோடு ஒப்பிடும் போது ஷியா இன முஸ்லிம்களும். குர்து இனத்தவர்கள் பெரும் பான்மையாகவுள்ள அரசால் தயாரிக்கப்பட்டுள்ள அரசியல் யாப்பில் பெரியளவிலாக இழைக்கப்பட்டதாக தெரியவில்லை என சர்வதேச அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு சுனி இனத்தவர்களது நலனைத் திருப்தி செய்வதற்காக தேர்தல் நடைபெறுவதற்கு முன் கடைசி நிமிடங்களில் சில திருத்தங்களும் சேர்க்கப்பட்டுள்ளதாகவும். கூறப்படுகிறது.

ஜனநாயகத்தை முழுமையாக நிலை நாட்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளில் இவ்வாறான நடவடிக்கை சரியான யதார்த்தமாகவே கருதப்படுகின்ற போதும். ஜனநாயகமென்பது மக்களால் அடி மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேணடும் என்றும். ஒரு சமூகம் இன்னுமொரு சமூகத்தின் கீழ் அடக்கியாளப்படுவதையோ வரலாற்றை மாற்றியமைப்பதையோ ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் கேள்வி எழுப்புகின்றார்கள்.

எது எப்படியோ கடந்த 05.10.2005 சனிக்கிழமை நடந்த கருத்துக் கணிப்பும். அதற்கு நான்கு நாட்களின் பின்னர் நடந்த அதாவது 09.10.2005 புதன்கிழமை சதாம் ஹூசைனுக்கும். அவரது அரசியல் முக்கிய பதவிகளிலிருந்த ஏழு பேருக்கும் எதிரான வழக்கு விசாரணைகளும் ஈராக்கிய மக்கள் மத்தியில் ஒரு வித ஜனநாயக பன்முகத் தன்மையுள்ள நாடாக ஈராக்கைக் கட்டி எழுப்ப வேண்டுமென்ற அவா கூடுதலான மக்கள் மத்தியில் காணப்படுவதை மேற்படி தேர்தல் முடிவுகளின் பெறுபேறுகள் தொக்கி நிற்கின்றதையும். வன்முறைகளையும் ஆக்கிரமிப்பாளர்களையும் வெளியேற்றி சுதந்திரமான சுயதீன அரசாக ஈராக் அரசு செயற்பட வேண்டுமென்ற செய்தியையும் ஒட்டுமொத்த ஈராக்கிய அரசுக்கும் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

S.M.G. Gobalaratnam . Goby



# தமிழ் இலக்கிய அறிமுகம்

## சோழர்கால இலக்கியங்கள்

**சென்ற வாரத் தொடர்ச்சி.......**

சோழர் காலத்தைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற் காலம் எனலாம். இக்காலத்தில் ஐம்பெருங் காப்பியங்கள் தோன்றின. பன்னிரு திருமுறைகளை நம்பியாண்டார் நம்பியும், ஆள்வார் பாசுரங்களை நாரதமுனியும், தொகுத்தளித்தனர்.

பெருங்கவிஞர்களான கம்பரும், சேக்கிழாரும் இக்காலத்தில் தோன்றினர். சிற்றிலக்கியங்களும் பல தோன்றின.

**இலக்கண நூல்கள்:-**

இக்காலத்தில் தோன்றிய சில இலக்கண நூல்கள் பற்றிய விபங்கள் வருமாறு:-

**(அ)நம்பியகப்பொருள்:-**

இயற்றியவர் நற்கவிராசநம்பி (இயற்பெயர் நம்மி நாயனார்)

**(ஆ) யாப்பெருங்கலக் காரிகை:-**

இயற்றியவர் அமிர்தசாகரர். குணசாகரர் உரை எழுதினார். காலம் கி.பி.10ம் நூற்றாண்டு.

**(இ)யாப்பெருங்கல விருத்தி:-**

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் செய்யுளியல் பற்றி இந்நூல் விரிவாகக் கூறுகின்றது.

**(ஈ) நேமிநாதம்:-**

இயற்றியவர் குணவீர பண்டிதர். எழுத்து, சொல் பற்றி 96 செய்யுள்களில் கூறுகின்றது. இதற்கு "இன்னூல்" என்ற பெயரும் உண்டு.

**(உ)வச்சணந்திமாலை:-**

இயற்றியவர் குணவிர பண்டிதர். "வெண்பாப்பாட்டியல்" என்ற பெயரும் இதக்கு உண்டு. 3ம் குலோத்துங்கள் காலத்தில் தோன்றிய இந்நூல் "இந்திரகாளியம்" என்னும் இலக்கண நூலைப் பின்பற்றி எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

**(ஊ)வீரசோழியம்:-**

இயற்றியவர் புத்தமித்திரர். இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி முதலிய ஐந்து அம்சங்கள் பற்றியும் கூறுகின்றது.

**(எ)நன்னூல்:-**

இயற்றியவர் பவணந்தி முனிவர். தொல்காப்பியத்தில் வழக்கொழிந்த இலக்கணங்களை நீக்கி, காலத்திற்கேற்ற வகையில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளதென்பர். காலம் கி.பி.13ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

**(ஏ)தண்டியலங்காரம்:-**

வடமொழியில் தண்டி என்பவர் இயற்றிய "காவிய தர்ஸம்" என்னும் நூலின் மொழிபெயர்ப்பு இந்நூல் என்பர். 125 சூத்திரங்களைக் கொண்டது. பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் 3 இயல்களைக் கொண்டது. காலம் கி.பி.12ம் நூற்றாண்டின் முற்பகுதி.

**நிகண்டுகள்:-**

ஆங்கிலத்தில் அகராதிகள் தோன்றும் முன்பே தமிழில் தோன்றிய அகராதிகளே நிகண்டுகள். சில நிகண்டுகள் பற்றிய விபரம் வருமாறு:-

**(அ)திவாகரம்:-**

காலத்தால் முற்பட்ட நிகண்டு இது. இதில் சங்கச் சான்றோரின் மரபுகள் அதிகம் இடம் பெறுகின்றன. "சேந்தன் திவாகரம்" என்ற பெயரும் இதற்குண்டு.

**(ஆ)பிங்கல நிகண்டு:-**

இயற்றியவர் பிங்கலன் இவர் திவாகர முனிவரின் குமாரர் என்பர். காலம் (கி.பி.10ம் நூற்றாண்டு)

**(இ)சூடாமணி நிகண்டு:-**

இயற்றியவர் மண்டல புருடர். இந்நூலாசிரியர் கிருஷ்ண தேவராயர் காலத்தவர் என்பர். ஆனாலும் இந்நூலின் காலம் கி.பி.10ம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்க வேண்டும் எனப்படுகின்றது.

**(ஈ)உரிச்சொல் நிகண்டு:-**

இயற்றியவர் காங்கேயர் காலம் அருணகிரிநாதர் காலத்திற்குப் பிற்பட்டது என்பர்.

**(உ)கயாதர நிகண்டு:-**

இயற்றியவர் கயாதர முனிவர். இதற்கு முன் தோன்றிய நிகண்டுகளில் உள்ள செய்திகளே இதிலும் இடம் பெறுகின்றன.

**(ஊ)ஔவையார் (நிகண்டு):-**

இயற்றியவர் சிதம்பரம். இரேவண சித்தர். காலம் கி.பி 1594.

**(எ)ஆசிரிய நிகண்டு:-**

இயற்றியவர் ஆண்டிப் புலவர். காலத்தால் மிகவும் பிற்பட்டது இந்நிகண்டு.

**சிற்றிலக்கியங்கள் (பிரபந்த இலக்கியங்கள்):-**

**(அ)ஔவையார் ஆக்கிய நூ ல்கள்:-**

ஆத்திசூடி(109 பாக்கள்), கொன்றைவேந்தன், மூதுரை (வாக்குண்டாம் 30 செய்யுள்கள்) நல்வழி (40 செய்யுள்கள்) விநாயகர் அகவல், ஞானக் குறள் அசதிக் கோவை.

**அன்புமணி**

**(ஆ)கலிங்கத்துப் பரணி:-**

இயற்றியவர் செயங் கொட்டார். முதலாங் குலோத்துங்கனது கலிங்கத்து வெற்றியைக் கூறும் இந்நூலின் காலம் கி.பி. 12ம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

**புராணங்களும், இதிகாசங்களும்:-**

**1.பெரிய புராணம்:-**

இயற்றியவர் சேக்கிழார். தேவாரம் பாடிய மூன்று நாயனார் உட்பட (மாணிக்க வாசகரைத் தவிர்த்து) அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய வரலாற்றைக் கூறும் நூல் இது. இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் "திருத்தொண்டர் புராணம்" என்பதாகும். இதில் 4752 பாடல்கள் உள்ளன.

இந்நூல் சுந்தரமூர்த்திநாயனாரது வரலாற்றைக் கூறுவதால் அதை ஒரு காப்பியமாகவே கொள்ள வேண்டும் என்ற கருத்தும் உள்ளது. காரணம் பெருங்காப்பியத்துக்குரிய எல்லா அம்சங்களும் இந்நூலில் அமைந்திருப்பதாகும்.

சேக்கிழார் சங்கநூற் பயிற்சியுடையவர். இவர் 2ம் குலோத்துங்க மன்னனுக்கு அமைச்சராய் விளங்கியவர். இவருடைய இயற் பெயர் அருள்மொழித் தேவர் என்பதாகும். கல்வெட்டுக்கள் இவரை "மாதேவடிகள்" என்று குறிப்பிடுகின்றன. தமிழகத்திலும், இலங்கையிலும் ஆண்டு தோறும் சேக்கிழார் விழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுவது மனங்கொள்ளத்தக்கது.

**2.கந்தபுராணம்:-**

இயற்றியவர் கச்சியப்பச் சிவாச்சாரியார். காலம் கி.பி.11ம் நூற்றாண்டு என்பர். முருகக் கடவுளின் திருவிளையாடல்களைக் கூறும் இந்நூல் பாமர மக்களைக் கவரும் வகையில் மானிடக் காதலை முன்னிறுத்தி அதனூடே சைவ தத்துவங்களை மறைமுகமாகக் கூறுவது.

இந்நூல் மொத்தம் ஆறு காண்டங்கள் உள்ள இந்நூல் சைவசித்தாந்தக் கருத்துக்கள் விரவி காவியச் சுவை நிறைந்ததாக அமைந்துள்ளது. இது வடமொழி நூலின் ஒரு பகுதியாகிய "சங்கர சங்கிதை" யை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும்.

**3.திருவிளையாடற் புராணம்:-**

இருபுலவர்கள் திருவிளையாடற் புராணத்தை இயற்றியுள்ளனர். ஒருவர் புலியூர் நம்பி, மற்றவர் பரஞ்சோதி முனிவர். இவ்விருவரில் பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணமே பிரபலம் பெற்றுள்ளது.

இப்புராணம் சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கூறுகின்றது. இத்திருவிளையாடல்கள் யாவும் இறைவன் தனது பக்தர்களை ஆட்கொள்ளும் தத்துவங்களை விளக்குவதாக உள்ளது.

**4.திருச்செந்தூர்ப் புராணம்:-**

இப்புராணத்தை இயற்றியவர் வெள்ளிமலைக் கவிராயர். இது முருகக் கடவுளின் அறுபடை வீடுகளுள் ஒன்றான திருச் செந்தூர்த் தலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளைக் கூறுவதாகும். பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்ட இந்நூலில் வடமொழியில், செவ்வல் கிருஷ்ண சாஸ்திரி என்பவர் இயற்றிய புராணத்தை மூல நூலாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது.

**5.அரிச்சந்திர புராணம்:-**

பாண்டிய நாட்டைச் சேர்ந்த வீரகவிராயர் இயற்றிய இந்நூலில் 1225 பாடல்கள் உள்ளன. வாய்மையின் மகத்துவத்தை எடுத்துக் கூறும் இந்நூல் தமிழர்கள் அனைவரும் அறிந்த ஒரு நூலாகும்.

அரிச்சந்திரன், ஒரு பொய் சொல்ல மறுத்து, பட்ட பாடுகளும், துன்பங்களும் படிப்பவர் மனதை உருக்குவதாகும். பிற்காலத்தில் பல்வேறு வடிவங்களில் இக்கதை இலக்கியத்தில் இடம் பிடித்துள்ளது.

(தொடரும்................)

---

ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ரூபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:~ 21~11~2005*

## குறுக்கெழுத்துப் போட்டி 77

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 77**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ |
| 5 | | ■ | 6 | | |
| ■ | 7 | 8 | | | ■ |
| 9 | | | | ■ | 10 |
| 11 | | | ■ | 12 | |
| | ■ | 13 | 14 | | |
| 15 | 16 | ■ | 17 | | |
| 18 | | | ■ | 19 | |

### இடமிருந்து வலம்

01. என்றுமே மரணம் இல்லாமல் வாழக் கூடியவர்கள். தெலுங்கு நடிகரும் கூட.
05. வார இதழ் பத்திரிகைகளில் வருவது. அதிகமான மங்கையர் இதையே விரும்பிப் படிப்பர். (திரும்பியுள்ள)
06. பத்து.
07. தேர்தல் காலங்களில் கட்சிகளின் சார்பாக பார்க்கும் இடங்களிலெல்லாம் காட்சி தரும். அடையாளம் என்றும் சொல்லலாம்.
09. கண்ணதாசன் நீல நிறத்தோடு இச்சொல்லைச் சேர்த்துத் தொடங்கும் பாடல் ஒன்றையும் இயற்றியுள்ளார். கண்ணையும் இப்படி அழைப்பர்.
11. கத்தி, கோடரி போன்றவற்றைக் கூராக்கப் பயன்படுவது. (குழம்பியுள்ளது)
13. சம்பளத்துடன் சேர்த்து இதை வாங்குவதால். (திரும்பியுள்ளது)
15. சோறுடன் இது இருந்தால்தான் சாப்பிடலாம்.
17. சேறு, தொம்பல் என்றும் சொல்லாம். (குழம்பியுள்ளது)
18. வேடன் எய்த கணை பட்டு மான் விழுந்து விட்டது. (குழம்பியுள்ளது)
19. சினம் வந்ததால் தானோ தெரியவில்லை முதல் எழுத்தையும் விழுங்கி திரும்பி வருகின்றது.

### மேலிருந்து கீழ்

01. இறந்தவர்களின் உடலை எரிக்க ஆயத்தப்படுவதை இப்படிச் சொல்வர்.
02. அந்தரங்கம்.
03.பெண்களின் திருமணத்திற்கு இதுவும் ஒரு தடைக்கல்.
04. நஞ்சு. சிலர் இதைத் தவறாக எழுதுவதுண்டு.
08. சோறு. (குழம்பியுள்ளது)
09. நாம் வாழும் மண்ணுலகம் இப்படியும் அழைக்கப்படுகின்றது.
10. சூரியன் தலைகீழாய் உள்ளான்.
12. படுக்கையறைக் கட்டிலை இப்படிச் சொல்வர்.
14. சூழ்ச்சி.
16. தெரிந்து கொள் (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 75ற் கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. வேட்பாளர். | 01. வேதனம். |
| 03. தகரம். | 02. பாரதி. |
| 03. தினம். | 04. திருமலை. |
| 06. பரு. | 06. பழனி. |
| 09. வானிலை. | 07. சுவாலை. |
| 10. சுயம்பு. | 08. விஜய(ம்). |
| 12. பஜனை. | 10. புனைவு. |
| 13. குரு. | 11. தீபம். |
| 15. தீபாவளி. | 13. வகு. |
| | 14. (வெ)ருளி. |

### பரிசு பெறும் அதிஸ்டசாலி

**என்.இளங்கோ,**
**மகிழவட்டவான்,**
**ஆயித்தியமலை.**

### பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. ஜி. ரிஜிர்தாயினி, புதுமண்டபத்தடி, கன்னன்குடா.
02. உ.கஜேனிகா, பழுகாமம் ~ 02, திருப்பழுகாமம்.
03. ச.குருஷிகா, பாடசாலை வீதி, அரசடித்தீவு.
04. ச.ஐங்கரன், மட்.நாவற்காடு நாமகள் வித்.
05. தெ.அழகுசுந்தரம், இலுப்படிச்சேனை, பன்குடாவெளி.
06. க.இராமேஸ்வரன், சமுர்த்தி வங்கி, வெல்லாவெளி.
07. ச.சந்திரமதி, மகிழவட்டவான், ஆயித்தியமலை.
08. சு.ஹிறோசன், இல~229, யுனியர் வீதி, முனைத்தீவு, பெரியபோரதீவு.
09. செ.புஸ்பராஜா, அம்பிளாந்துறை, கொக்கட்டிச்சோலை.
10. ரி.குணதரணி, நாவலர் வீதி, குருக்கள்மடம்.

# கணனி வைரஸ் [Computer Virus]

## ஓர் அறிமுகம்


Computer Virus என்பது பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். இதனை நாம் தமிழில் கிருமி நிரல்கள் என்று கூறுகிறோம். இத்தகைய கிருமி நிரல்களும் நாம் கணனியில் பயன்படுத்தும் மற்ற நிரல்கள் (Programs) போன்றவையே. அப்படி இருக்க இதனை ஏன் நாம் கிருமி நிரல்கள் என்று சொல்ல வேண்டும்?

சில நிரல்கள் அழிவுப் பணிக்காக எழுதப்படுகின்றன. எப்படி கிருமிகள் நமது உடலில் புகுந்தால் அது நமது உடலுக்கு உபாதை களை விளைவிக்கிறது. நமது கணனிக்குள் புகுந்தால் அதற்குப் பல உபாதைகளை விளைவிக்கிறது. இங்கு கணனிக்கு உபாதைகள் என்று நான் கூறுவது கணனியில் உள்ள தரவுகளை, மென் பொருள்களை அழிப்பது, அதிகமான இடத்தை நினைவகங்களில் ஆக்கிரமிப்பு செய்து அதன் மூலமாக கணனியின் செயற்பாட்டு வேகத்தை குறைப்பது, நாம் கணனியில் வேலை செய்யும் போது பலவிதமான தொந்தரவுக ளைச் செய்வது என்று பட்டியல் நீளும்.

இத்தகைய நிரல்களை நாம் கிருமி நிரல்கள் என்று கூறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. அவையாவது!

1. இந்த நிரல்கள் எப்படி கிருமி ஒரு கிருமியிலிருந்து பலவாகப் பல்கிப் பெருகுகிறதோ அதுபோல பல்கிப் பெருகவல்லவை. ஒரு கிருமி நிரல் தானாகவே தன்னைப் போன்ற கிருமி நிரலை உருவாக்கவல்லது. இதனை ஆங்கிலத்தில் Self Replication என்று சொல்வதுண்டு.

2. எப்படி கிருமிகள் ஏதாவது ஊடகங்களைப் பயன்படுத்தி பரவுகின்றனவோ, அதுபோல இத் தகைய நிரல்களும் கணனியின் பல ஊடகங்களின் வழியாக ஒரு கணனியில் இருந்து மற் றொன்றுக்குப் பரவுகிறது. எடுத்துக்காட்டாக நெகிழ்வட்டுக்கள் (Floppy disk), மற்றும் வலையமைப்புக்களின் மூலம் கோப்புகளை ஒரு



கணனியிலிருந்து வேறு கணனிக்கு மாற்றும் போது அதன் வழியே இத்தகைய கிருமி நிரல்களும் அந்தக் கணனிக்குப் பரவி விடுகின்றன. அங்கிருந்து அடுத்த கணனி என்று அதனுடைய பரவல் நடந்து கொண்டே இருக்கும்.

3. மனித உடலில் கிருமி புகுந்ததும் அது அதனுடைய குறிகளை நமக்கு உணர்த்தி நாம் நோய்வாய்ப்பட்டுள்ளதை உறுதி செய்யுமோ அதுபோல இந்த கிருமி நிரல்களும் நமது கணனியில் புகுந்தவுடன் அதுதான் செய்ய வேண்டிய அழிவுப்பணிகளையும், தொந்தரவுகளையும் தந்து அதனுடைய இருப்பை நமக்கு உணர்த்தும். இதனை ஆங்கிலத்தில் Symptoms of Virus Attack கூறுவது உண்டு.



4. இத்தகைய கிருமிகள் நமது உடலில் புகுந்து விட்டதை அறிந்தும் நாம் அதனை நமது உடலை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கா விட்டால் எப்படி நோய் முற்றி நாம் சாகும் நிலைக்குச் செல்லுகிறோமோ அதுபோல் கிருமி நிரல்களை அப்படியே தொடர விட்டால் நமது கணனியில் உள்ள முக்கிய தகவல்கள் மற்றும் மென்பொருள்கள் ஆகியனவற்றை நாம் இழக்க (உயிர் போய்விடும்) வெறும் கணனி மட்டும் தான் மிஞ்சும்.

இத்தகைய கிருமி நிரல்கள் ஆரம்பத்தில் ஒரு விளையாட்டுக்காக மென்பொருள் பொறியாளர்களால் எழுதப்பட்டன. அவர்கள் வலையமைப்பில் உள்ள தம்முடைய நண்பரின் நிரல்களை அழிப்பதற்கும், விளையாட்டாக அவர்களைத் தொந்தரவு செய்து மகிழ்வதற்குமே எழுதப்பட்டன.

இத்தகைய அளவுக்கு அவை வளர்ச்சியடைந்து கணனி உலகையே எப்பொழுதும் அவதிக்குள்ளாக்கிவரும் என்று அவர்கள் அந்த நேரத்தில் நினைத்திருக்கவில்லை!

ஆரம்பகாலத்தில் வந்த கிருமிநிரல்கள் அதிகம் ஆபத்தானவைகளாக இல்லை. அவைகள் நம்மிடம் விளையாடிவிட்டு மறைந்து போய் விடும். ஜோசி என்னும் கிருமி நிரல் நமது கணனியில் புகுந்தால், அது எப்போதாவது நாம் பிற வேலையாக இருக்கும் போது திரையில் தோன்றி எனக்கு பிறந்தநாள் வாழ்த்துச் சொல் என்று கட்டளையிடும். அது கூறியவாறு நீங்களும் "Happy Birthday Josi" என்று எழுதினால் பின்னர் மறைந்து விடும். இத்தகைய கிருமி நிரல்கள் நமது கணனிக்கும் அதில் உள்ள மென்பொருள்களுக்கும் எப்பொழுதும் தீங்கு விளைவிப்பவை அல்ல.

ஆனால் சில கிருமிநிரல்கள் மிகவும் ஆபத்தானவை. நமது Hard disk ஐயே மொத்தமாக அழித்துவிடும். அத்தோடு நமது மொத்தத் தகவல்களும், மென்பொருள்களும் அழிந்து விடும். இது பெரிய நிறுவனங்களைப் பொறுத்த வரையில் மிகப் பெரிய இழப்பாக இருக்கும். நமது தனிக்கணனியைப் பொறுத்தவரையில் நாம் மிகவும் விலைமதிக்க முடியாத தகவல்கள் எதனையும் அதிகம் கணனியில் வைத்திருக்கப் போவது இல்லை. மென்பொருள் அழிந்து போய் விட்டாலும் மீண்டும் நாம் அவற்றை ஏற்றிக்கொள்ளலாம் அது சிரமும் இல்லை.

எத்தகைய வகையில் இந்த கிருமி நிரல்கள் செயல்படுகின்றன? இத்தகைய கிருமி நிரல்களை எழுதும் வல்லுனர்கள் எந்தவிதமான முறைகளில் கணனியை அந்நிரல் தாக்க வேண்டும் என்று அதில் எழுதியுள்ளார்களோ அதன்படி அந்த நிரல்கள் செயல்படும். எடுத்துக் காட்டாக நான் ஒரு கிருமிநிரலை எழுதுகிறேன்.

அதில் அந்தநிரல் கோப்புகளை பிரதி எடுக்கும் பொழுது அது கணனியில் இருந்து நெகிழ் தட்டுக்கும், அதிலிருந்து கணனிக்கும் செல்வதற்காக கட்டளைகளை அமைக்கிறேன். அதுமட்டுமல்லாது அந்நிரல், கணனி வினைக்கலனை தனது நினைவகத்தில் ஏற்றியவுடன் செயல்பட்டு அதாவது தன்னைத்தானே கணனியின் இராம் (RAM) நினைவகத்தில் ஏற்றிக்கொண்டு அந்தக் கணனியின் தேதியைக் கவனித்து வருமாறும் கட்டளைகளை அமைக்கிறேன். அவ்வாறு கணனியின் தேதியைக் கவனித்து வரும் அக்கிருமி நிரல் மே மாதம் 25ஆம் தேதி கணனியின் தேதியாக வரும் நேரத்தில் அதில் உள்ள தகவல்களை (format) மொத்தமாக அழிக்கும் கட்டளையைக் கொடுக்கிறேன்.

இதுதான் ஒரு கிருமிநிரல் செய்யும் வேலை. இங்கு நான் கணனியின் தேதியைக் கவனித்து அதில் நான் கொடுக்கும் தேதி வந்தால் அது தனது வேலையைச் செய்யக் கட்டளையிட்டிருப்பது போல பல வல்லுனர்கள் பல விதமாகக் கட்டளையிடுகின்றனர். இத்தகைய கிருமிநிரல்கள் அதை எழுதும் வல்லுனரைப் பொறுத்து வேறு வேறுவிதமாக அமைகின்றன. வெவ்வேறு வழிகளில் செயற்படுகின்றன.

இத்தகைய கிருமி நிரல்களை நாம் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கிறோம். அவை:

1. (File Virus) கோப்புகளைத் தாக்கும் கிருமிகள்
2. Boot Sector kw;W; Partition Table கிருமிகள்

இவற்றில் கோப்புகளைத் தாக்கும் கிருமிகள், நிரல்களையும் தகவல் கோப்புகளையும் தாக்கி அழிக்கின்றன. இன்னும் நமது கணனியில் பயன்படுத்தும் நெகிழ்வட்டு (Flop py) மற்றும் வண்தட்டு (Hard disk) போன்றவற்றில் நாம் பதிந்து வைத்துள்ள கோப்புகளின் சரியான முகவரி, மற்றும் அந்த Hard disk எத்தனையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அந்த ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு கொள்ளவு போன்ற தகவல்கள் இந்த Bo ot Sector kw;Wk; Partition table போன்றவற்றில் உள்ளன. இவைகளைக் கிருமி நிரல்கள் தாக்குவதால் நாம் அந்த Hard disky; உள்ள மொத்த சேமிப்புகளையும் இழந்து விடுவோம்.

தற்காலத்தில் பல புதிய வகைக்கிருமி நிரல்கள் பரவுகின்றன. அவை மேற்கூறிய வகையில் செயல்படுவதோடு, இணையத்தின் வாயிலாக Credit Card Numbers கள் மற்றும் கடவு சொற்கள் (Passwords) போன்றவற்றை கவர்ந்து செல்வதற்கும் எழுதப்படுகின்றன.

ஒருவகை கிருமிநிரல்களை நாம் "ரோசான் குதிரைகள்" (Trojan horse) என்று கூறுகிறோம். இவை கிருமிநிரல்களை ஒவ்வொரு கணனிக்கும் கொண்டு செல்லும் வேலையைச் செய்கின்றன. இதில் எடுத்துச் செல்லப்படும் கிருமிநிரல்கள் அந்தந்த கணனிகளில் தங்கி அவர் அக்கணனியில்



செய்யும் வேலைகளைக் கவனித்து வருகின்றன.

அவர் எப்போதாவது Credit card Number களைத் தரும்போது அவற்றைக் குறிப்பெடுத்துக் கொள்கின்றன. சில சமயங்களில் இணைய வங்கியத்தில் பயன்படுத்தும் கடவுச் சீட்டுகளையும் எடுத்து வைத்துக் கொள்கின்றன. பின்னர் அவைகளைத் தனது எஜமானனுக்கு (Owner of that virus) இணையத்தின் வாயிலாக அனுப்பி விடுகின்றன.

கிருமி நிரல்களை நமது கணனியில் நுளைந்து விடாமல் தடுப்பது எப்படி?

சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். அவைகளாவன:

1. பிறரிடமிருந்து வாங்கிப்பயன்படுத்தும் Floppy disk, CD போன்றவைகள் முறையாக சோதித்த பின்னரே உபயோகிக்க வேண்டும். (முடிந்த அளவுக்கு அவைகளைத் தவிர்க்க வேண்டும்).

2. வேண்டாத விளையாட்டு மென்கலகளை (Soft ware) இலவசமாகக் கிடைக்கிறதே என்று இணையத்தில் இருந்து இறக்கிக் கொள்வதோ அல்லது நண்பர்களிடம் இருந்து வாங்கி உபயோகிப்பதோ கூடாது.

3. முடிந்த அளவுக்கு கணனியை அடிக்கடி கிருமிச் சோதிப்புக்கு உட்படுத்த வேண்டும்.

4. மின் அஞ்சலில் வரும் இணைப்புகளை அனுப்பியவர் தமக்கு வேண்டியவராக இல்லாத பட்சத்தில் கவனமுடன் கையாள வேண்டும். இவைகள் பெரும்பாலும் கிருமி நிரல்களைத் தாங்கிவரப் பயன் படுத்தப்படுகின்றன.

மேலும் இத்தகைய கிருமி நிரல்களை அழிப்பதற்கு அல்லது தடை செய்வதற்கு என்று கிருமி அழிப்பான்கள் கிடைக்கின்றன. இந்த கிருமி அமிப்பான்களை நாம் நமது கணனியில் பதிந்து வைத்துக்கொண்டு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும் இங்கு பல விடயங்களை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். அவைகளாவன.

எல்லா கிருமி நிரல்களையும் எல்லா கிருமி அழிப்பான்களும் (Anti virus Programs) அழித்து விடுவதில்லை. காரணம் ஏற்கனவே வந்த ஒரு கிருமி நிரல்களுக்குத்தான் அதை அழிக்கக் கூடிய நிரல்களை எழுத முடியும். இன்று புதிதாக வரும் கிருமி நிரல்களுக்கு நாளைதான் மருந்து கண்டுபிடிக்க முடியும்.

அதற்கு காரணம் ஒவ்வொரு கிருமி எழுத்தாளர்களும் புதுப்புது விதமான முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர். அந்த முறைகளை நன்கு ஆராய்ந்து அந்தப் புதிய கிருமி எவ்வாறு செயற்படுகிறது என்பதைப் பகுத்தாய்ந்து தான் அதற்கு அழிப்பான்கள் (vaccines) எழுதப்படுகின்றன.

ஆதலால் நேற்றைய கிருமி அழிப்பான்கள் நாளைய கிருமிகளை அழிக்கப்ப போவதில்லை. எனவே அடிக்கடி உங்களது கிருமி அழிப்பான் மென்கலன்களைப் புதுப்பித்துக் கொண்டிருக்க வேண்டும்.

இன்னுமொரு விசயம் இந்தக் கிருமி அழிப்பான் மென்கலன்களை எழுதுபவர்கள் பல கிருமி நிரல்களைப் புதிதுபுதிதாக உலவவிடுகிறார்கள். அதன்பின் அதற்கான அழிப்பானைத் தயார் செய்து விற்பனை செய்துவிடுகிறார்கள். அந்தச் சமயத்தில் வேறு புதிய கிருமிகளை வெளியே அனுப்புகின்றனர்.

ஒரு கிருதியை எழுதியவருக்கு அது எவ்வாறு செயல்படும் என்பது தெரிந்து விடுவதால் அதனை அழிக்க எழிதில் அழிப்பானை உருவாக்க முடியும். அதே சமயத்தில் ஒரு புதிய கிருமிநிரலை எடுத்துக் கொண்டு அது எவ்வாறெல்லாம் தாக்குகிறது, பரவுகிறது என்பதை நன்கு ஆராய்ந்து அதனை அழிப்பதற்கு, தடுப்பதற்கு நிரல்களை உருவாக்குவது கடினமாக பணி.

நி.பிரதீஷ்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

"சொறி நான் இனி இப்படிக் கதைக்க மாட்டேன். என்னை மன்னிச்சிடுங்க"

"ராஜா என்னடா நீ? பாவம் தேவி"

அதை விடு. நான் சொல்லுறதைக் கேள் என்று இன்று சித்ரா பேசியவற்றைக் கூறினான்" நாம் வீட்டுக்குச் சென்றால் சித்தி முன்னால் நின்று கூச்சல் போடுவாள். அதற்கு முதல் வழி காண வேண்டும் என




இல்லையென்றால் சாவுதான் முடிவு" என்று ரகு கூறி முடிக்கு முன் "பளார்" என்றது.

ரகுவினது கன்னம் அதிர்ந்தது. தேவி இதை எதிர் பார்க்கவில்லை. ராஜாவிற்கு இந்த அளவு கோபம் வந்ததை இருவரும் கண்டதே இல்லை. உடனே ரகு சமாளிப்பதற்காக எழுந்து நடக்கலானான்.

தேவி ராஜாவின் அருகில் அமர்ந்து "என்ன ராஜா அவன் வேதனையில பேசிட்டான். நீங்க புரிந்து கொள்ளாம இப்படி நடந்திட்டீங்க"

பின்னர் என்ன தேவி கொஞ்சம் ரிலெக்ஸா இருங்க. ரகுவினது காதலைச் சேர்த்து வைப்பது தான் எமது விருப்பமும் ஆசையும். எனவே அதற்கான ஆலோசனைகளுக்காக நேரத்தினை செலவு செய்வது நல்லது. ராஜா என்ன பண்ணலாம் என நினைக்கிறீங்க.

"நான் ஏற்கனவே சொன்னனே தேவி. எனக்காக என்னுடைய அப்பா விட்டுச் சென்ற சொத்துக்களை ரகுவிற்கு மனதார என்னுடைய கல்யாணப் பரிசாகக் கொடுப்பதற்கு உத்தேசித்திருப்பதை. நீ கூட சொன்னியே உங்களுடைய நண்பன் உங்களுடைய விருப்பம் என்று, இப்போது கேட்கின்றேன் ரகு உன்னுடைய நண்பனும் கூட என்ன நான் சொல்வதில் உனக்கும் சம்மதம் தானே!"

"நான் கூட எனது அபிப்பிராயத்தினைச் சொல்ல வேண்டும் என நினைத்தேன். எனக்கு அதுதான் சரியென்று பட்டது. உங்களிடம் இருந்தால் என்ன, ரகுவிடம் இருந்தால் என்ன "உங்களுடைய நல்ல மனதுக்கு நன்றாக இருப்பீங்க. இருக்கணும்" என்று ஓர் நம்பிக்கையுடன் கூறினாள்.

ராஜா தேவியின் கண்களைப் பார்த்தான். அவளது இதயத்தில் இருக்கின்ற அன்பு அப்படியே கண்ணில் தெரிந்ததைப் பார்த்து சந்தோசப்பட்டான்.

ரகு எங்கே தேவி என வினவ............

"தெரியலையே! ராஜா வாங்க போய் பார்க்கலாம். என அழைத்துக் கொண்டு கொஞ்சத் தூரம் நடந்தனர். ரகு காரினில் இருந்ததைக் கண்ட தேவி "ராஜா அங்க பாருங்க அதோ இருக்கிறான்" என்று கூறி இருவரும் காரின் அருகினில் சென்று "என்ன ரகு போவோமா அல்லது இருந்து விட்டுச் செல்வோமா?" எனக் கேட்டனர்.

"சித்தியை எப்படி சமாளிப்பது" என ரகு திடீரெனக் கேட்டான்.

டேய் அதைவிடு. அது

வீரமான மற்றுமோர் நவீன நாவல்.....

என்ன ராஜா இது "சின்னப் பிள்ளைத்தனமா பேசிறீங்க"

"பின்ன என்ன தேவி இவனால எனக்கு கஷ்டமாம். நான் ஒரு நாளும் இவனை பிரிச்சுப் பார்த்ததேயில்லை தெரியுமா? இவன் இப்படியெல்லாம் பேசிறது எவ்வளவு வேதனையாக இருக்கு தெரியுமா? இதையெல்லாம் கேட்க நான் என்ன பாவம் செய்தேனோ தெரியல. பேசாம செத்துப் போகலாம்"

"ராஜா என்னடா அபசகுணமாப் பேசிறாய்" என ரகு கேட்க,

பேசாதடா எனக்குப் பொல்லாத கோபம் வருகிறது.

சொரிடா என்னை மன்னிச்சிடு இனி நான் இப்படிப் பேசமாட்டேன்.

சொரி எல்லாம் கேட்க

# உயிருள்ளவரை உன்னுடன்...

ராஜா சீரியஸாகக் கூறிக்கொண்டு ரகுவைப் பார்த்தான்.

என்னடா ஒன்றுமே பேசாம இருக்கிறாய்.

"நான் எதிர் பாத்துத்ததுதானேடா? நான் ஏழைடா. நான் அவளை என் தகுதியை மீறி காதலித்தது தப்பாடா? எனக்கென்றால் ஒன்றும் விளங்கலடா. என்ன இப்படியே விட்டுங்க நான் என்ன என்றாலும் பண்றேன்டா. நிச்சயமா சித்ரா இல்லாம நான் வாழ மாட்டேன். வாழ்ந்தால் அவளோடு தான். நான் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் என்று தெரியுமா? எனக்கு அன்பு செலுத்திய முதல் ஜீவன், எனக்கு அன்பு என்றால் இதுதான் என்று உணர்த்தியவன். என்னுடைய சோக, சந்தோசத்தில பங்கெடுப்பவன். அவன்ல எவ்வளவு அன்பு மரியாதை வைத்திருக்கிறேன் என்பது அவனுக்குத் தெரியும். என்னுடைய மனம் எப்படித் துடித்தது என்று அவனுக்குத் தெரியுமா?

சரி ராஜா ஹூல்வ்ன்

**காத்தநகர்**
**கறுப்பு ரோஜா**

நமக்குள்ளதானே! எவற்றையெல்லாம் இழந்தாலும் சரி ரகு, சித்ரா கல்யாணம் நடந்தே ஆக வேண்டும். உடனே ராஜா தேவியின் கைகளைத் தொட்டு தைங்யு தேவி" என உணர்ச்சி பூர்வமாகக் கூறினான்.

தேவி அவனது கையை விலக்கவும் முடியாமல், தவிர்க்கவும் முடியாமல் ராஜாவை ஆறுதல் படுத்தினாள்.

என்னுடைய வேலை. என்னால சமாளிக்க முடியும் சரியா.

"என்னால உனக்கு ரொம்ப தொல்லடா. நான் கஸ்டப்படுத்துகிறேன் என்பது மட்டும் நன்றாக விளங்குகிறது. என்று ரகு வேதனையுடன் அழுகை மூலம் வெளிப்படுத்தினான்.

டேய் நீ இப்படியே பேசிட்டு புலம்பிட்டு இருந்தியென்றால் நான் போகிறேன். இன்றையில இருந்து நீ யாரோ?, நான் யாரோ?. "குட் பாய்" என்றான் ராஜா.

வேண்டாம். சத்தியம் பண்ணிக்கொடு. இனி இப்படிப் பேச மாட்டேன் என்று. என்ன பிரச்சினை வந்தாலும் என்னையோ தேவியையோ விட்டுப் பிரியமாட்டேன் என்றும், உன்னுடைய காதலை நான் முன்னின்று நடத்தி வைப்பேன். அதற்கிடையில் எதையாவது ஏடாகூடமாகச் செய்யமாட்டேன் என்றும் எனக்குச் சத்தியம் பண்ணிக் கொடு என ராஜா கேட்டான்.

*(தொடரும்...........)*

## தமிழீழ மாவீரர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பால் பாடசாலை மாணவரிடையே நடாத்தப்படும் கட்டுரை, கவிதை, சிறுகதை, பேச்சு, பொது அறிவுப் போட்டிகள் நவம்பர் -2005

போட்டி நிகழ்வுகளின் பொதுவான விதிகள்:

01. ஆண், பெண் இருபாலாரும் எல்லா நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளலாம்.
02. மூன்று பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெறும்:
    அ. கீழ்ப்பிரிவு - தரங்கள் 6-9 வரை
    ஆ. மத்திய பிரிவு - தரங்கள் 10-11 வரை
    இ. மேல் பிரிவு - தரங்கள் 12-13 வரை
03. ஆக்கங்கள் யாவும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.
04. யாவர்க்கும் வாய்ப்பளிக்கும் வகையில் ஒரு போட்டியாளர் ஒரு பிரிவுக்குட்பட்ட ஒரு நிகழ்ச்சியில் ஒரு முறை மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.
05. ஆக்கங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 16.11.2005ம் திகதி புதன்கிழமை ஆகும்.
06. பரிசளிப்பு விழா பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
07. பேச்சுப் போட்டிகள் மூன்று பிரிவினருக்கும் 10.11.2005ம் திகதி வியாழக்கிழமை கொக்கட்டிச்சோலை இ.கி.மி.வித்தியாலயத்தில் நடைபெறும்.
08. ஆக்கங்கள் யாவும் தூய்மை நேர்த்தி, பொருளடக்கம் கொண்டு அமைந்திருத்தல் வேண்டும்.
09. நேர்த்தியற்ற விண்ணப்பங்களும், நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படாத விண்ணப்பங்களும் குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
10. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முதல் மூன்று நிலைகளைப் பெற்ற ஆக்கங்கள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
11. ஆக்கங்கள் அனைத்தும் தமிழீழ கல்விக் கழகம், மாவட்ட செயலகம் கொக்கட்டிச்சோலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
12. பொது அறிவுப் போட்டிக்கான திகதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நிகழ்ச்சிகளின் தலைப்புக்கள்

01. தாயகத்தின் வளங்கள்
02. விடுதலைக்கான போராட்டங்களில் மக்களின் தியாகங்கள்
03. பேரினவாதத்தின் கல்வி ரீதியிலான ஒடுக்குமுறை
04. இன ஒடுக்கு முறையால் தமிழரது வாழ்வியலில் ஏற்பட்ட பாதிப்பு
05. தமிழீழத்தில் ஒரு நாள்
06. மாவீரர்களின் மாண்பு
07. தேசியத் தலைவரின் வாழ்வும் வழிகாட்டலும்.

# கலவரத்தால் பாரிஸ் எரிகிறது!

பாரிஸ் புறநகர் பகுதிகளில் 11வது நாளாக கலவரம் தீவிரமடைந்து வருகிறது. இந்த கலவரத்தில் 30 பொலிசார் காயமடைந்துள்ளனர். ஆயிரத்து 408 வாகனங்கள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே, "கலவரக்காரர்கள் தண்டிக்கப்படுவார்கள், கலவரம் முறியடிக்கப்படும்" என பிரான்ஸ் அதிபர் ஜாக்குஸ் சிராக் உறுதி அளித்துள்ளார்.



ஆபிரிக்க நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து, பாரிசில் குடியுரிமை பெற்று வாழும் முஸ்லிம் மக்கள், தங்களுக்கு உரிய அரசியல் உரிமைகள் மறுக்கப்படுவதாகக் கூறி கடந்த 10 ஆண்டுகளாக அரசிற்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த அக்டோபர் 27ம் திகதி கிளிச்சி ரூசாய்ஸ் ரூபாய்ஸ் பகுதியில் முஸ்லிம் சிறுவர்கள் இருவர், பொலிசார் தங்களை விரட்டி வருவதாக தவறாக நினைத்து "டிரான்ஸ்பார்மர்" அருகே ஒளிய மின்சாரம் தாக்கி இருவரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் ஆபிரிக்க இன மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

பொலிசார் ஆபிரிக்க இளைஞர்களைக் கண்மூடித் தனமாகத் தாக்குவதால் இத்தகைய விபரீதம் நடக்கிறது என்று கூறி ஆபிரிக்க இளைஞர்கள் கடந்த 11 தினங்களாகக் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாரிசின் புறநகர்ப் பகுதிகளில் ஆபிரிக்க இளைஞர்கள் நடத்திய தாக்குதலில் 30 பொலிசார் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் இதுவரை ஆயிரத்து 408 வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

கலவரத்தில் ஈடுபட்டுள்ள 395 கலவரக்காரர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளில் இருந்து குடிபெயர்ந்து பாரிசில் குடியுரிமை பெற்று வாழும் முஸ்லிம் மக்கள், தங்களுக்கு உரிய அரசியல் உரிமைகள் தரப்படவில்லை என கடந்த 10 ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

குறிப்பாக, இந்த இளைஞர்கள் தங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்றும், பொருளாதார ரீதியாக தாங்கள் பின்னுக்குத் தள்ளப்படுவதாகவும் பெரும் கொந்தளிப்பில் இருந்து வருகின்றனர். இந்நிலையிலேயே, கடந்த அக்டோபர் 27ல் கிளிச்சி ரூசாஸ் ரூபாய்ஸ் பகுதியில் முஸ்லிம் சிறுவர்கள் இருவர், பொலிசார் தங்களைத் துரத்துவதாக நினைத்து அருகில் இருந்த "டிரான்ஸ்பாம்ரில்" ஒளிந்தனர். அப்போது மின்சாரம் தாக்கி இருவரும் பரிதாபமாக இறந்தனர்.

இதையடுத்து, பாரிஸ் புறநகர் பகுதிகள் முழுவதும் பெரும் கல்வரம் வெடித்தது. பொலிசார் ஆபிரிக்க இளைஞர்களைக் கண்மூடித்தீனமாகத் தாக்குவதால் தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பதாகக் கூறி தொடர்ந்து இளைஞர்கள் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, வடக்கு ஆபிரிக்கா மற்றும் கறுப்பு இன ஆபிரிக்க இளைஞர்கள் கலவரத்தில் ஈடுபடுகின்றனர். பொலிசாரைக் குறிவைத்து தாக்குகின்றனர்.

வாகனங்கள், பள்ளிக் கட்டடங்கள், வர்த்தக நிறுவனங்களில் கலவரக்காரர்கள் தீ வைத்தனர். ஒவ்வொரு இரவிலும் பல நூறு வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்படுகின்றன.

அதிகபட்சமாக ஒருநாள் இரவு மட்டும் 754 வாகனங்கள் தீ வைக்கப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர். பாரிசின் முக்கிய நகரங்களான ஸ்டிராஸ்போர்க், ரெனிஸ், டலவுஸ் மற்றும் லில்லி ஆகிய பகுதிகளில் வாகனங்கள் தீ வைக்கப்பட்டன.

பதட்டம் அதிகமுள்ள பசியின் ரூசெயின்ட் ரூடெனிஸ் பகுதியில் ஆயிரத்து 400 பொலிசார் குவிக்கப்பட்டனர். ஆனாலும் இங்கே கலவரம் ஓயவில்லை. கலவரக்காரர்கள் குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு பகுதியாகச் சென்று ரகளையில் ஈடுபடுகின்றனர். பொலிசார் கெலிக்கொப்டர் மூலம் ரோந்து மேற்கொண்டு கலவரக்காரர்களைத் தேடி வருகின்றனர். கலவரம் தொடர்பாக இதுவரை 100 க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக நடந்து வரும் கலவரத்தால் பிரான்ஸ் பிரதமர் டொமினிக் டிரூவில்லிபின்னுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டு வருகின்றது.

கலவரக்காரர்களை அடக்க வில்லிபின்னுக்கு மதத் தலைவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தாலும் மற்ற கட்சித் தலைவர்கள் அரசின் செயற்பாட்டை குறை கூறி வருகின்றனர்.

கலவரம் ஏற்பட தாங்களும் பொறுப்பாளிகள் என்றாலும், தற்போது நிலைமையை சுமூகமாக தீர்ப்பது வில்லிபின் கையில் தான் உள்ளது என்று நீதிக்கட்சியினர் கூறுகின்றனர். இந்நிலையில், மாணவர் பிரதிநிதிகள் சிலருடன் வில்லிபின் பேச்சு நடத்தினார்.

பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட 18 வயது மாணவன் கூறுகையில், "இப்போது தான் அவர் பாடம் கற்றுள்ளார். பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என அவர் உண்மையாகவே முயற்சிக்கிறார்," என்றான்.

இளைஞர்களின் ஆர்ப்பாட்டம் குறித்து முஸ்லிம் மக்கள் சிலர் கூறுகையில், "வாழ்க்கையில் நம்பிக்கையை இழந்து தவிக்கும் இந்த இளைஞர்களை பெற்றோர், பொலிஸ், அரசாங்கம் என யாராலும் கட்டுப்படுத்த முடியாது.

இந்த இளைஞர்கள் மீது அதிகாரம் செலுத்த வேண்டுமானால் அரசு அவர்களின் மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும். அரசு அதை இழந்து பல ஆண்டுகளாகி விட்டது," என்று கூறுகின்றனர்.

## மாணவர் பரிசுக் குவியல்

**தமிழ் பேசும் மாணவச் செல்வங்களுக்கு!**

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள், பரிசுகளாக வழங்கப்படும்.

நீங்கள் செய்யவேண்டியது இவை தான்,

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதி – பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி முகவரியை வெட்டியொட்டி அனுப்புதல் வேண்டும்.

முதலாவது அதிஷ்டசாலிக்கு பரிசும், பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி:-21.11.2005**

அனுப்பவேண்டிய முகவரி

**மாணவர் பரிசுக்குவியல்- 58**
**ஈழநாதம் (மட். பதிப்பு), பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

**இவ்வார வினாக்கள்.**

01. இலங்கையில் உயர்ந்த புத்தர் சிலை எங்குள்ளது?
02. பாராளுமன்றத்தின் தாய் என அழைக்கப்படும் நாடு எது?
03. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எத்தனை தடவை நோபல் பரிசு பெற்றுள்ளது?
04. இம்மாதம் 12ம் திகதி நடைபெற இருக்கும் சார்க் உச்சி மாநாடு எந்த நாட்டில், எந்த இடத்தில் நடைபெற உள்ளது?
05. இலங்கையை முதலில் ஆட்சி செய்த பெண் ஜனாதிபதி யார்?

**பரிசுக்குவியல் 56 இற்கான சரியான விடைகள்**

| | |
|---|---|
| 01. 24-10-1945ம் ஆண்டு. | 02. ஆபிரகாம் லிங்கன். |
| 03. ஐக்கிய அமெரிக்கா. | 04. டிசம்பரில் பாகிஸ்தான். |
| 05. 1869ம் ஆண்டு. | |

**பரிசுபெறும் அதிஸ்டசாலி**

கு.சுரேஷ்.
தரம் 07.
மட்-கொக்கட்டிச்சோலை
இ.கி.மி.வித்தியாலயம்.

**பாராட்டுப்பெறுவோர்**

| | |
|---|---|
| 01. எஸ்.லாவண்யா, தரம் -04, மட்-இந்துக்கல்லூரி. | தரம் -07, மட்-கிரான்குளம் வித்தியாலயம் |
| 02. ப.சிவாணுஜன், தரம் -05, செங்கலடி. | 04. சி.தாரணன், தரம் -11, மட்டக்களப்பு. |
| 03. பி.பாணுஜா, | 05. வை.வாசுகி, தரம் -12, வாழைச்சேனை. |

**மட்டு நகரில் சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் அறிவு நூல்களுக்கு :-**




தொ.பே.இல:- 065-2222371 065-2225341




*என்னுயிரிலும் மேலான நாதமே!*

என் இதய பூர்வமான வந்தனங்கள். உண்மைச் செய்திகளையும் தாங்கி வருவதில் உனக்கு நிகர் நீயே. அத்தகைய உண்மைத் தன்மையினை ஒக்டோபர் 21 வார இதழில் வெளியாகிய ''யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம்'', ''பிரவீனா'' வின் கட்டுரைப் பகுதி ஆகியவற்றின் மூலமாக அறிந்து மகிழ்ந்தேன்.

''தேசவிடுதலைக்காய்'' என்னும் சிறுகதை மிக மிகப் பாராட்டுதலக்குரியதாகும். அதனைப் பிரசவித்த க்தாசிரியருக்கு எனது உணர்ச்சி பூர்வமான நன்றியை ஈழநாதத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீ பல்லாண்டு காலம் எமதீழத்தில் பவனி வரவேண்டும். பார் போற்றும் அளவுக்கு வாசகர்களின் வளர்ச்சிக்கு விந்தையான அம்சங்களை வாஞ்சையுடன் வாரி வழங்க வேண்டும்.

பல நாள் பட்டினி கிடந்தாலும் அதன் வேதனை எனக்கு எளிதில் புரிவதில்லை. ஆனால் நீ வாரத்தில் ஒரு முறை மலர்கின்றாய். அந்த மலர்வினிலே உன்னைக் காணாது விடின் நான் படும் வேதனையாரறிவார். நாதமே உனக்குத்தான் தெரியுமே நான் கூண்டுக்குள் சிறைப்பட்டு வாழும் பறவை என்று. சிறகிருந்திருந்தால் பறந்தோடிச் சென்று வாஞ்சையோடு உன்னை எனதில்லத்திற்கு அழைத்து வருவேன். அதுதான் என்னிடம் இல்லையே! என்ன செய்வது.

என்றென்றும் உன் பணி தழைத்தோங்க வேண்டும். உணர்ச்சி மிக்க அம்சங்களை நீ உவகையோடு அள்ளி வழங்க வேண்டும் என உனை உளமார வாழ்த்தி விடைபெறும் பிரியமிகு வாசகி.

**ஈழப்பிரியா.**

*வணக்கம் ஈழநாதமே!*

எனது உள்ளக் குமுறலின் ஆதங்கத்தை நீ அறிந்து இருப்பாய். இணைப்பில் அணைந்துள்ள கட்டுரையினை நீர் பிரசுரித்து, வாகசர்களின் விழிகளில் வீழ்ந்து விருந்தளிக்க வைப்பாய். என்ற அசையாத உறுதியுடனும், திண்ணத்துடனும் வாரத்தில் வெளிவருகின்ற வாசகர்களின் உள்ளத்தை உன் வசம் ஈத்த உன்னை வினாடிகளை எண்ணியவாறு எதிர்பார்க்கின்றேன். வாழ்க நாதம், வழர்க தமிழ்.

**வி.ஜனகா,**
**பாவற்கொடிச்சேனை.**

## கடந்து வந்த காலமும்............

அவர்களது வளர்ச்சி மேலோங்க மேலோங்க அவர்களது உளம் எங்கும் விடுதலை தாகமும் தேசிய உணர்வும் சுயமாகவே ஊற்றெடுக்கின்றது. இத்தகைய தெளிந்த நீரூற்றினை எந்தச் சக்தியாலுமே அடக்கி ஆழவோ கட்டுப்படுத்தவோ முடியாது.

நாம் எமது தேச விடுதலையை அண்மித்து விட்டு எதிரிகளினதும் ஒட்டுப் படைகளினதும் அச்சுறுத்தல்களையும் கொலை மிரட்டல்களையும் கண்டு எமது தமிழினம் இனி ஒரு பொழுதும் அடிபணிந்து வாழப்போவதில்லை. கார்த்திகை 27ல் தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர்தின உரை மலரப் போகின்றது. அந்த மலரின் முகபாவத்திலிருந்தே எமதீழப் போராளிகளின் பயணம் நகரப் போகின்றது. அவ்விதம் நகரும் பயணம் எமதீழ மக்களுக்கு என்றென்றும் நல்லதோர் எதிர் காலத்தினையே உருவாக்கித் தரும் என்பது உறுதி.

எனவே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மரணத்தைத் தழுவிக் கொள்வது பொதுவான நியதி. ஆகவே அந்த பொதுவான நியதியை உளமார உணர்ந்ததனால் தான் அந்த மாவீரர்களது மரணம் மாட்சிமை பெற்றுத் திகழ்கின்றது. ஆதலால் எம் பொய்யுடல் மடிந்தாலும் மெய்யுணர்வு சிரஞ்சீவியாக நின்று மணம் வீச வேண்டும் என்ற உணர்வோடு யாவரும் செயல்படுவோமாக.

## ஜப்பான் நாடு முழுவதும்...........

ஆகஸ்ட் 16ல் 7. 2 ரிக்டர் அளவில் செண்டாய் நகரை தாக்கிய பூகம்பம் பற்றி 15 வினாடிகளுக்கு முன்னதாக அறியப்ப ட்டது.

இதையடுத்து, இந்தக் கருவியை நாடு முழுவதும் பொருத்த அரசு திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து ஜப்பானின் வானிலை ஆய்வுத் துறையினர் கூறுகையில், "வருகிற 2006க்குள் நாடு முழுவதும் 203 இடங்களில் இந்த கருவி பொருத்தப்படும்.

அபாய எச்சரிக்கை விடுக்கும் நேரத்துக்கும், பூகம்பம் ஏற்படும் நேரத்துக்கும் கால இடைவெளி சொற்பமானது தான். என்றாலும், ரயில்களை ஆங்காங்கே நிறுத்திவிடுவது, காஸ் இணைப்புகளை மூடுவது, பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைவது போன்ற செயல்களுக்கு இந்த அவகாசம் போதுமானதாக இருக்கும் என்றே நினைக்கிறோம். பூகம்பத்தை உடனடியாகவும் துல்லியமாகவும் கண்டறிவதில் இன்னும் சிக்கல் நீடிக்கிறது," என்றனர்.

## நாங்களே எடுத்துக் கொள்ள போகிறோம்





கேட்டுக் கேட்டு
எங்களுக்கும்
சலித்து விட்டது!
மறுத்து மறுத்தே
உங்களுக்கும்
சலித்து விட்டது!
நாங்கள் கேட்பது
எங்களுக்கான
சலுகைகளையல்ல
உரிமைகளையே!
உங்களுடனே
ஒன்றாயிருக்க- எங்களுக்கும்
விரும்பந்தான்!
பலமுறை முயற்சித்தோம்
தோற்றுப் போய்விட்ட
நிலையில்தான்
ஆயுதமேந்தினோம்!
எங்கள் கைகள்
ஆயுதமேந்த வழிசமைத்த
புண்ணியவான்கள் நீங்கள்தான்
மறந்து விடாதீர்கள்!
வல்லரசுகளின் வல்லகரத்
உறுதுணையுடனே
எங்கள் மீது
நீங்கள் விரும்பிய
சலுகைகளை மட்டுமே
திணித்துவிட திட்டம்
தீட்டினீர்கள்!
'தமிழன்' ஏமாந்தகாலம்
மலையேறிவிட்டதை
நீங்கள்
மறந்து விட்டீர்கள் போலும்!
இனியும் உங்கள்
தந்திரோபாய வலைவிரிப்பினுள்
தமிழன் சிக்கித்திணற மாட்டான்!
மறந்து விடாதீர்கள்!
இது ஜனநாயக நாடு!
உங்களுடன் நாங்கள் எப்படி
ஒருமித்து வாழ்வது?
அகிம்சையைப் போதித்த புத்தன்
வழித் தோன்றல்களே
ஆயுதம்
ஏந்துவதில் தவறில்லையே!
மீண்டும் கூறுகிறோம்!
இதய சுத்தியுடன் எங்களுக்கான
உரிமை பற்றி மட்டுமே
பேசுவதானால் வாருங்கள்!
பேசலாம்!!
மறுக்கப்பட்ட
உரிமைக்காகப்
போராடும் - எங்களுடன்
மீண்டுமொருமுறை
சலுகைகள் பற்றிப் பேச
எங்களை அழையாதீர்கள்!
இன்றோ! அல்லது நாளையோ!!
அல்லது நாளை மறுநாளோ!!
யுத்தம் மூழலாம்!
அப்போது
இலங்கை மாதா நிச்சயம்
இரத்தக் கண்ணீர் சிந்துவாள்.
கேட்டுப் பார்த்தோம் - எதையும்
நீங்கள் தருவதாக இல்லை!
எங்களுக்குரிய உரிமையை - நாங்களே
எடுத்துக் கொள்ளப் போகின்றோம்.

**வே.தமருகா றொபட்**
**கல்லடி.**

# மலேரியாவைத் தடுப்போம்

## மலேரியா! நுளம்பினால் பரவும் அபாயகரமான நோயாகும்




**மலேரியாவின் அறிகுறிகள்.**

*. குளிர் நடுக்கத்துடன் கூடிய காய்ச்சல்.
*. கடுமையான தலைவலி, காய்ச்சல் காணப்படும்.
*. காய்ச்சலிற்கு இடைப்பட்ட நேரங்களில் உடல் வெப்பநிலை சாதாரணமாக இருக்கும்.
*. பெரும்பாலும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் உடல் நடுங்கி காய்ச்சல் தோன்றும்.

**நுளம்பு பெருகும் இடங்கள்.**

*. நன்னீர் தேங்கியுள்ள இடங்கள். குளங்கள், குழிகள், குட்டைகள், நீரோடைகள்.
*. நீர் தேங்கக் கூடிய வெற்றுப் பாத்திரங்கள்.
*. சுற்றுப்புறச் சூழலில் புல், பூண்டுகள் காணப்படுதல்.





**மலோரியாவிற்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உடன் தகுந்த மருத்துவரை நாடவும்.**

கர்ப்பிணித் தாய்மார்களும், ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களும், இதில் இருந்து எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்.


**மலேரியாவைத் தடுக்கும் வழிமுறைகள்.**

**நுளம்புக்கடியிலிருந்து பாதுபாத்தல்.**

*. நுளம்பு வலைகளைப் பாவிப்போம்.
*. நுளம்புத்திரிகளைப் பாவிப்போம்.
*. இயற்கைப் பொருட்களைக் கொண்டு நுளம்புகளை வெருட்டுவோம். (புகை).
*. நுளம்புகளை அழிக்கும் மின் சாதனங்களைப் பயன்படுத்துவோம்.

**நுளம்பு பெருகும் இடங்களை இல்லாமல் ஒழிப்போம்.**

*. நீர் தேங்கியுள்ள குழிகள்.
*. பழடைந்த கிணறுகள.
*. வெற்றுப் பாத்திரங்கள், டயர்கள், கோப்பைகள், சிரட்டைகள், என்பவற்றை எரிப்போம் அல்லது புதைப்போம்.
*. மலேரியா ஏற்பட்டால் முழுமையான சிகிச்சை பெறுவோம்.
*. சுற்றுப்புறச் சூழலை, பற்றைகளை இல்லாது சுத்தமாக வைத்திருப்போம்.
*. மலேரியா நுளம்பு விரட்டும் மருந்து தெளிப்பவர்கள் வந்தால் ஒத்துழைப்பு வழங்கும்.
*. நுளம்புக் குட்டைகளை அழிக்கும் மீன்களை வளர்த்து, நுளம்பு பெருகும் இடங்க்ளில் விடுவோம்.





**தகவல்:-**
**தமிழீழ சுகாதார சேவைகள்,**
**மட்டக்களப்பு மாவட்டம்.**



மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்கள் மேம்பாட்டுப் பணியினை மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு அண்மையில் தமிழீழ மகளிர் அரசியல்துறையின் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு அவர்களால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படுவதையும், அரசடித்தீவு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத் தலைவர் சீ.விஸ்மலிங்கம் பொதுச்சுடரேற்றுவதையும் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.



பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தினால் சிறுவர், முதியோர் தின விழா அண்மையில் கொக்கட்டிச்சோலை இராமக்கிருஷ்ண மிசன் வித்தியாலத்தில் நடைபெற்றது. நிகழ்வில் அதிதிகள் அழைத்து வரப்படுவதையும், நாடாளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி உரையாற்றுவதையும் மற்றும் முதியோர்கள், மாணவர்கள் கௌரவிக்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

# மாபெரும் கலைக் கதம்பப் போட்டி

எதிர்வருகின்ற மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழக் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்தப்படும் கலை கதம்பப் போட்டி

**போட்டிகள் நடைபெறும் இடம்: மட்.கொக்கட்டிச்சோலை இ.கி.மி வித்தியாலய கேட்போர் கூடம்.**

01. இசைப்பாடல் : (இசையோடு பாடுதல் தாயகப் பாடல்கள்)
02. நாடகம் : போராட்ட வரலாற்றைத் தாங்கியதாகவும் இனவாதச் செயற்பாடுகளால் தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு மற்றும் விடுதலையை விரைவாக்குவோம் என்னும் கருத்துக்கள் செறிவு அடங்கியதாகவும் (40 நிமிடம்)
03. அபிநய நடனம் : (தாயக விடுதலை கீதங்களுக்கு)
04. தனி நடிப்பு : (விரும்பிய பாத்திரம் விடுதலை வேட்கை 05 நிமிடம்)

பங்கு பற்றும் கலைக்குழுக்கள், கலாமன்றங்கள், கலைக்கழகங்கள், தனிநபர்கள் 2005.11.10 ம் திகதிக்கு முன்பதாக கீழ்க் காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சலிலோ விண்ணப்பிக்கலாம்.

நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அனைத்துக் கலை நிகழ்ச்சிகளுக்கும் பெறுமதி வாய்ந்த வெகுமதி (பரிசு) கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
பொறுப்பாளர்,
கலை பண்பாட்டுக் கழகப் பணிமனை,
கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 11.11.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது